பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 2-00 | பக்கங்கள் 16

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 | மாசி 14 | ஐ. அங் 28 | யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 26-2-84 | இதழ் 15

## இலங்கையிலிருந்து வந்த ரூ. 3 லட்சம் கடத்தல் சிக்கின!

(சென்னை)

இலங்கையிலிருந்து கடத்தி வரப்பட்ட 3 லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்கள் தமிழ் நாடு வருவாய்த்துறை அதிகாரிகளினால் கைப்பற்றப் பட்டன.

சென்னை கடற்கரையில் சுமார் 30 பேர் கொண்ட கும்பல் இக்கடத்தல் பொருட்களை இறக்கிக்கொண்டிருந்த வேளை தமிழ்நாடு வருவாய்த்துறை அதிகாரிகள் அவர்களை நோக்கிச் சுட்டதாகவும், அவர்கள் பொருட்

(16-ம் பக்கம் பார்க்க)

# வதந்திகளைப் பரப்புவோர் உடன் கைது செய்யப்படுவர்!

(இ. கந்தசாமி)

**வீணான வதந்திகளைப் பரப்பி நாட்டில் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துபவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள். இந்த உத்தரவைப் பிரதிப்பொலிஸ்மா அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் பிறப்பித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் முப்பத்தாறு ராணுவத்தினர் கொல்லப்பட்டதாகக் கொழும்பிலும் மற்றும் பல பகுதிகளிலும் வதந்திகள் பரப்பப்பட்டுப் பெரும் பரபரப்பு ஏற்படுத்தப்பட்டதை அடுத்து திரு. சுந்தர் சுட்டிக்காட்டி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

வேணுமென்றே இவ்வித வதந்திகளைப் பரப்பிக் குழப்பத்தை ஏற்படுத்திச் சுயலாபத்தைச் சம்பாதித்துக் கொள்ள முயல முற்பட்டவர்களைத் தடுக்கும் நோக்குடனேயே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### ரூபா 10 லட்சம் சன்மானம்

காத்தான்குடி, சம்மாந்துறை, கிண்ணியா வங்கிக் கொள்ளைகள் தொடர்பாக தகவல்கள் தருபவர்களுக்கு பத்து லட்சம் ரூபா சன்மானம் வழங்குவதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது!

குற்றச் சம்பவங்கள் தொடர்பாக தகவல்களைத் தருபவர்களுக்கு சன்மானத் தொகையை அதிகரிக்க ஐ. ஜி. பி. திரு. ருத்ரா ராஜசிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

## இளம்பெண்ணின் சடலம் சகோதரரிடம் கையளிப்பு!

(ஏ. வி. மாணிக்கம்)

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பலியான இளம்பெண் யசோதா டேவிட் (19 வயது) டின் சடலம் அவரது சகோதரரிடம் நேற்றுக்காலை கையளிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவ் இளம்பெண்ணின் மரணம் சம்பந்தமாக மரண விசாரணை நடைபெறவில்லை.

யாழ். உதவிப்பொலிஸ் அதிபரின் பேரில் இறந்தவரது சடலத்தை உறவினர் ஒருவரிடம் கையளிக்கலாமென்பதற்கிணங்க இளம்பெண் யசோதாவின் சகோதரரான யேசுதாசன் சடலத்தைப்பொறுப்பேற்று எடுத்துச் சென்றார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை குருநகரில் முன்னர் இராணுவ முகாம் இருந்த பகுதியிலுள்ள இராசசிங்கம் வீதியில் 45ம் இலக்க வீடொன்றை பலாலி இராணுவமுகாமைச் சேர்ந்த

[16-ம் பக்கம் பார்க்க]

## இந்திரா காந்தி ரூ. 90 லட்சம் வழங்கினார்

(கொழும்பு)

கடந்த ஜூலை மாதம் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் புனர் வாழ்விற்காக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி 90 லட்சம் ரூபாவை (இலங்கை நாணயத்தில்) வழங்கியுள்ளார்.

இந்தியப் பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து இவ்வுதவி வழங்கப் பட்டதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு. சத்வால் கொழும்பில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இலங்கை அகதிகளுக்கு இதுவரை உதவியாக இந்திய அரசு 3 கோடி ரூபாவை பணமாகவும், பொருளாகவும் வழங்கியுள்ளதாக திரு. சத்வால் தெரிவித்தார்.

இந்தியாவின் உதவி பெறுமதி வாய்ந்ததென்றும், அகதிகளைக் குடியமர்த்த அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இது உதவும் என்றும், இந்தியாதான் முதன்முதலாக அகதிகளுக்கு ரொக்கப் பணமாக உதவியளித்தது என்றும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார். (வெ)

### வெள்ள நிவாரணம்: ரூ. $1\frac{1}{2}$ கோடி

(கொழும்பு)

வெள்ள நிவாரணத்திற்கென சமூக சேவைகள் அமைச்சு 1 கோடி 30 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50 லட்சம் ரூபா பால் உணவும் வழங்கப் படவுள்ளது.

ஒரு லட்சத்து 40 ஆயிரம் குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதாக சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (வெ)

### திருவிழா கோலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை மின்சக்தியை மிதப்படுத்துமுகமாக சோடியம் விளக்குகளை அகற்றி "டியூப்லைட்"களை பொருத்தியுள்ளது. இதனால் யாழ் மத்திய வீதிகள் மின்னொளியில் திருவிழா போல் காட்சியளிக்கின்றது.

## ஜூலை வன்செயல் வேலை இழந்தவர்களுக்கு உதவிப் பணம்

(யாழ்ப்பாணம்)

ஜூலையில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தத்தம் சொந்த இடங்களுக்குத் திரும்பியிருக்கும் தனியார்துறை தமிழ் ஊழியர்களுக்கு நிவாரண உதவிப்பணம் வழங்கப் படவுள்ளது.

உதவிப்பணம் வழங்குவதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் வடபகுதியிலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர்கள் மூலமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சமூக சேவைப்பகுதி பதில் பணிப்பாளர் திரு. என். அமிர்தசாகரன், இதற்கான பணிப்புரைகளை சகல உதவி அரசாங்கஅதி

(16-ம் பக்கம் பார்க்க)

# வங்கி அதிகாரிகள் முன் இரும்புபெட்டி திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வேலணை இலங்கை வங்கிக் கிளையில் கொள்ளையடித்தவர்களிடமிருந்து யாழ். பொலிசாரால் கைப்பற்றப்பட்ட இரும்புப்பெட்டி நாளை திங்கட்கிழமை, வங்கி அதிகாரிகள் முன்னிலையில் திறக்கப்படவுள்ளதாக, பொலிஸ் அதிபர் தெரிவித்துள்ளார்.

வேலணை இலங்கை வங்கிக் கிளையிலிருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை லொறியிலும் இரு வான்களிலும் இரு இரும்புப் பெட்டிகளும், அலுவலக உபகரணங்களும் இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் கொள்ளை அடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்த பொழுது பண்ணைப் பாலத்தில் வைத்து யாழ் பொலிசார் அதனை நிறுத்திய பொழுது, ஒரு இரும்புப் பெட்டியுடன் வந்த லொறி தப்பிச்சென்று விட்டது அப்பெட்டியில் அலுவலக தஸ்தாவேஜுகள் மட்டும் இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது.

அடுத்து வந்த இரு வான்களில் ஒன்றில் ஒரு இரும்புப் பெட்டி அதில் சுமார் ஆறரை லட்சம் ரூபா இருக்கலாமென வங்கி உத்தியோகத்தர் தெரிவித்தார். அடுத்த வானில் அலுவலக உபகரணங்கள். இந்த இரு வான்களும் பொலிசாரால் தடுத்து நிறுத்திய பொழுது அதிலிருந்து தப்பி ஓடியவர்களில் ஒருவர் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கும் பலியானார்; மற்றவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இறந்தவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டிருக்கிறது

இறந்தவர் புங்குடுதீவைச் சேர்ந்த என். ஞானகுமார் (21 வயது) என அவர் அணிந்திருந்த சேர்ட் பொக்கட்டிலிருந்த ரிசீற் ஒன்றின் மூலம் பொலிசார் தெரிந்துகொண்டனர்.

இதுவரை இச்சடலத்தை யாரும் உரிமைகோரவில்லையாம். (மா)

## யாழ். இந்து, வேம்படி 'கல்லூரி' அந்தஸ்துபெற்றது

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் வெள்ளை அறிக்கையின்படி கல்வி அமைச்சினால் கல்லூரி அந்தஸ்து பெறும் கல்லூரிகளாக இலங்கையில் பதினெட்டு கல்லூரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பதினெட்டுக் கல்லூரிகளில் யாழ். மாவட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரியும், யாழ் இந்துக்கல்லூரியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### கிளி. மாவட்ட அமைச்சர்

(இரா. உதயகுமார)

கிளிநொச்சி மாவட்ட அமைச்சராக பொத்துவில் மூன்றாவது எம். பி. ஜனாப் உதுமாலெப்பை நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

### டிரக் விபத்து 12 பேர் மரணம்

(பம்பாய்)

மஹாராஷ்டிர மாநிலத்தில் பக்தர்களை ஏற்றிச்சென்ற டிரக் ஒன்று விபத்துக்குள்ளானதில் 12பேர் மாண்டுள்ளனர். 53 பேர் காயமடைந்துள்ளனர். (கு)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சண்டிலிப்பாய் சோத்துப் பிடிச்சி ஒழுங்கையில் (சங்கானை வலிலே ரோட்டுக்கு அண்மையில்) கிணற்றுடன் கூடிய 10 பரப்புக் காணி முழுதாகவோ பிரித்தோ விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: S. செல்வராஜா (Proctor). 5, 3-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். 1000

PL 4 டிபாக் லேத் மெஷின் இருவாரத்துக்குள் விற்பனைக்கு கிடைக்கும் உங்கள் தேவைக்கு பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1019

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு முன்பாக, பிரதான வீதியில், வீடுகட்டக்கூடிய மூன்றரைப் பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- லோகன், 'நாகலிங்கம் வாசா' (தபால் கந்தோருக்கு அருகாமையில்) மானிப்பாய். 1018

பண்டத்தரிப்பு வடலி அடைப்பு மெயின் றோட்டில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்க கிளை 11-ஆவது பின்றூல் காயா வீதியில் உள்ள 3-ஆவது காணியும், 4, பரப்பு புதிய சகல வசதிகளும் மின்சாரமும் பொருத்திய வீடு, புதிய நல்ல தண்ணீர் உடைய கிணறு, மாமரம், தென்னை மரம் முதலியனவுடைய சோலை வளவு 8 முழ அகலம்கொண்ட லொறி போக்குவரவு செய்யும் பங்கில்லாத தனி றோட்டுடைய காணியும், 4 பரப்பு பனைகள் உடைய, வீடுகட்டுவதற்கோ, மில், தொழிற்சாலை முதலியன போடுவதற்கோ உகந்த காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. கி. இராசையா J P, வடலி அடைப்பு, பண்டத்தரிப்பு. 989

யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கையில் வீட்டுடன் எல்லா வசதிகளும் அடங்கிய ஒரு பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு நேரில் சந்திக்கவும். இ ஆசைப்பிள்ளை, 221/5, கனகசபை அவெனியு, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். 1017

உடுவில் கே. கே. எஸ். வீதியில் றொட்டியாலடியில் வீடு கட்டுவதற்கோ அல்லது வேறும் தேவைக்கோ பாவிக்கக்கூடிய இரண்டேகால் (2¼) பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்; எஸ் பத்மநாதன், லங்கா எரிபொருள் நிலையம், (தபாற்கந்தோர் முன்பாக), தெல்லிப்பழை. 1013

நல்லூர் செம்மணி றோட் செல்வர் வீதியில் சென். ஜேம்ஸ் தேவாலயத்திலிருந்து 150 யார் தூரத்தில் மூன்றேகால் பரப்புக் காணியும் அரியாலை ஈச்சம்காட்டில் 38 பரப்பு நெற்காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 74, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 1009

புத்தம் புதிய 86 ஸ்ரீ வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. S. இராஜேந்திரம், ஞானவயிரவர் கோவில் லேன், உரும்பராய் கிழக்கு, உரும்பராய். 962

அச்சுவேலி ராசவீதி றோட்டில் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் 4 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். 'செந்தாமரை' அச்சுவேலி தெற்கு (பயித்தோலை) அச்சுவேலி 1001

## விற்பனைக்கு

"கொஸ்டர்" பயணிகள் ஏற்றும் வான் விற்பனைக்கு உண்டு. 29 சிறி தொடரிலக்கமுடையது. விபரங்களுக்கு: ராஜா தியேட்டர், யாழ்ப்பாணம். 998

EN மொடல் மொறிஸ் மைனர் கார் நல்ல நிலையில் உடனடி விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம் 'அமுதசுரபி' 2-ம் குறுக்குத் தெரு. பருத்தித்துறை 995

கோப்பாய் வடக்கு கண்ணகை அம்மன் வீதியில் கோப்பாய் உரும்பிராய் வீதிக்கு அண்மையில் 3¾ பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் வீடு (கமலபவனம்) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: வே செல்லையா, 315, கண்டி வீதி. பரந்தன். தொலைபேசி: 311. 928

கோண்டாவிலில் பலாலி வீதியிலிருந்து 300யார் தூரத்தில் வீடு கட்டக்கூடிய 11 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். N அருள்சாகரன் சட்டத்தரணி பலாலி வீதி, கோண்டாவில். 954

நீர்வேலியில் பருத்தித்துறை வீதிக்கருகில் சைவ ஆலயங்கள் பாடசாலை, தபால்நிலையம் ஆகியவற்றுக் கண்மையில் மா, பலா, தென்னை மரங்களுள்ள நன்னீர்க்கிணற்றுடன் 6 பரப்பு காணி வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: A C. மகேந்திரன் இ. பே. ச. சாலை பருத்தித்துறை. 895

நூற்றைம்பது பனை மரங்களும் ஏராளமான செங்கற்களும் விற்பனைக்குண்டு தொடர்பு: குழந்தை வேலு கந்தையா, பாலாவோடை, காரைநகர். 1021

சொந்தப் பாவிப்பில் சிறந்த நிலையில் உள்ள 81ஸ்ரீ ஒறேஞ் நிற ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு — தொடர்பு கொள்ளவும்: A. G. இரத்தினம், அரசினர் வைத்திய சாலை, யாழ்ப்பாணம். 951

## FOR SALE

Imported Showcases, (Curved Cupboards. Mirrors, Dinning and Kitchen Tables, and Sundry items on Sunday 26th February Palmcourt, Main Street, Jaffna. 1002

## சேவை

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இலவசமாக வழங்கப்படும். Processing ரூபா 80/- P. C Printing ரூபா 6/50 கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 502

## வாடகைக்கு

வீடியோ டெக் புதிய திரைப்பட வீடியோ கசற் என்பன வாடகைக்கு கொடுக்கப்படும் Stanly Centre சுவாமி இரத்தினம் கட்டிடம் (றெயில்வே கடவை அருகாமை) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 988

மாணவர்கள் தங்கி கல்வி கற்பதற்கேற்ற அறைகள் உணவு வசதியுடன் வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு: இ. முருகதாஸ், இல. 1, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 851

## தேவை

றேடியோ மின்சாரப் பொருட்கள் திருத்துவதற்கு ஆட்கள் தேவை. நேரில் வரவும். றட்ணகுமஸ், 10, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 1026

சிறு குடும்பமுடைய சட்டத்தரணிக்கு யாழ்ப்பாண நகர சபை எல்லைக்குள் வீடு அல்லது பகுதி வீடு வாடகைக்குத் தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 966, மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 966

கோழி, மாடு பராமரிப்புக்கு அனுபவமுள்ளவர்களும் டைப்பிங் கிளார்க்கும் தேவை. சு. பாலேந்திரா 586 கண்டிவீதி, நெடுங்குளம் சந்தி, யாழ்ப்பாணம். 933

அனுபவமும், திறமையும் உள்ள அச்சுக்கோப்பாளர்கள் (Compositors) தேவை. தகுதிக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படும். ஐம்பது வயதுக்கு மேற்பட்டோருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும். அத்துடன் அச்சுக்கோர்க்கும் பயிலுனர்களாக பயிற்சி பெற பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விளம்பர இல: 997, மே. பா. ஈழநாடு, சிவன்கோவில் மேற்கு வீதி, யாழ்ப்பாணம். 997

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## விசேட ஆங்கில வகுப்புகள்

FOR BIGINNERS
BASIC ENGLISH
ஆசிரியர் திரு. K சபாநாயகம்
FOR HIGHER LEVEL
INTEGRATED ENGLISH
ஆசிரியர் திரு. T. N பஞ்சாட்சரம்
ஆரம்பம்: 5—3—84
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்.
விபரங்களுக்கு:
ASTAN INSTITUTE
166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## தொழிலாளர்கள் தேவை

யாழ்ப்பாணக்குடா நாட்டில் கடற்றொழில் தொடர்புள்ள வியாபாரத்தில் ஈடுபடும் ஒரு ஸ்தாபனத்திற்கு குறிப்பாக மீன்கொள்வனவிலும், விற்பனையிலும் அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 1011 மே/பா ஈழநாடு.
யாழ்ப்பாணம். 1011

## சுயவேலை வாய்ப்பு - பயிற்சி

## Diploma in Draughtsmanship

[ வார இறுதிப் பயிற்சி ]

★ பயிற்சி — 6 மாதம்
★ O/L, A/L மாணவர்க்கு ஏற்றது
★ Perspective Drawings கற்பிக்கப்படும்
★ Drawing Board, "T" Square

பயிற்சிக்கு வழங்கப்படும்
ஆரம்பம்: 03-03-84
விபரங்கட்கு:
INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY
11 B, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 1029

## மணமகள் தேவை

இந்து வேளாள உயர் குலத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் அரச சேவையில் நான்கு இலக்க சம்பளம் பெறும் எவ்வித தீயபழக்கங்களும் இல்லாத குடும்பப் பொறுப்புகளற்ற 24 வயது இளைஞனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த 21 வயதுக்குட்பட்ட நல்ல அழகும் நற்பண்புகளும் நிரம்பிய அறிவுள்ள பெண் தேவை சீதனம், ஜாதகம் மற்றும் முழு விபரங்களுடனும் உடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 940,
மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 940

## உடன் விற்பனைக்கு

28 ஸ்ரீ 5017 இசுசு எல்ப் 350 (TRUCK)
23 ஸ்ரீ 9675 இசுசு எல்ப் (வான்)
விண்ணப்பங்கள் 2-3-84 வரை
எழுத்துமூலம் ஏற்றுக்கொள்ளப்படும்.
பிஞன்ஸ் வசதிகளுக்கும் மற்றும் விபரங்களுக்கும் தொடர்புகொள்ள வேண்டியது:-
சட்ட அதிகாரி
த பிஞன்ஸ் கொம்பனி
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680

## இலங்கை வங்கி

### விசேட அறிவித்தல்

நெல்லியடி வேலணை ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது வங்கிக் கிளைகள் 27-02-1984 திங்கட்கிழமை தொடக்கம் கீழே அவ்வவற்றுக்கு எதிரில் குறிக்கப்பட்டுள்ள எமது கிளைக் கட்டிடங்களில் இயங்குமென இத்தால் எமது வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

1. நெல்லியடிக்கிளை – பருத்தித்துறைக் கிளை
2. வேலணைக் கிளை – இரண்டாம் யாழ்ப்பாணக் கிளை (ஸ்ரான்லி வீதி)

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இம்மாற்றங்களை நாம் தற்காலிகமாக மேற்கொள்வதால் சகல வாடிக்கையாளர்களும் அவ்விடங்களில் தங்கள் கொடுக்கல்வாங்கல்களை செய்துகொள்ளுமாறு தயவாக வேண்டப்படுகின்றனர்.

எமது வாடிக்கையாளர்கட்கும் பொதுமக்களுக்கும் இதனால் ஏற்படும் வசதியீனங்களுக்காக வருந்துகிறோம்.

மாவட்ட முகாமையாளர்
யாழ்ப்பாண மாவட்டம்
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.
1025

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் மைத்திரிபால சேனநாயகா தலைமையிலான சுதந்திரக்கட்சிக்குழு மீண்டும் இரண்டறக் கலந்துள்ளது.

ஜனநாயக அரசியலில் உறவு கொள்வதும் பிரிவதும் பின்னர் பிரிந்தவர் கூடுவதும் புதிய சமாசாரம் அல்ல. ஆனாலும் இச்சமயத்தில் அரசியலில் கடந்த காலத்திருப்பங்களைச் சற்றே நினைவு கூர்வது பலருக்கும் பயனளிக்கலாமென்பதால் சற்றே திரும்பிப்பார்ப்போம்.

திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையிலான சுதந்திரக்கட்சியிலிருந்து மைத்திரிபால சேனநாயக்க குழு பிரிந்து சென்றபோது சிறிமா அம்மையாரின் மகன் அநுரா பண்டாரநாயகாவும் அவர்களுடன் சென்றிருந்தார்.

சேர் அருணாசலத்துடனும் சி. சிற்றம்பலத்துடனும் ஐ. தே. க. அரசு உறவை ஆரம்பித்தது. பின்னர் சுந்தரலிங்கம் சேர்ந்தார், பிரிந்தார் அடுத்து ஜி ஜி சேர்ந்தார். செல்வாவும் வன்னியரும் காங்கிரஸிலிருந்து பிரிந்தனர் ஜி ஜி. யும் லலிதா ராஜபக்ஷவும் கொத்தலாவலை அரசால் விலக்கப்பட்டுப் பிரிந்தனர் பின்னர் குமாரசாமியும் கனக ரத்தினமும் சேர்ந்தனர்.

முப்பத்தைந்து வயதான ரூபசிங்கா எங்கேயோ? இவர் அநுரா பண்டாரநாயகா ஹைவெல்லாம் வைத்துத்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலி ''என்னைஒதுக்க நினைத்தவர்

# இலங்கை அரசியலில்

# உறவுகளும் பிரிவுகளும்

பகைவர்கள் தாமாக உருவாவதில்லை. இன்று நண்பர்களாக நன்கு பழகி உறவாடியவர்கள்தான் நாளை பகைவர்களாவார்கள். இதில் பெற்றவர்களும் உற்றவர்களும் சேர்ந்து கொண்டால் பகைவர்களுக்கொண்டாட்டம்தான்

இந்த வகையில் தான் ரோஸ்மிட்பிளேஸில் நள்ளிரவில் இறக்கப்பட்ட பண மூடைகள் பற்றிச்சொல்லப்பட்ட இரகசியங்கள் பலவும் வெளிவந்தன. பாராளுமன்றத்திலும் எதிரொலித்தன.

ருந்து தமது சகோதரி சந்திரிகா விஜயகுமாரணதுங்காவும் மைத்துனர் விஜயகுமாரணதுங்காவும் டி. பி. இலங்கரத்தின தலைமையில் பிரிந்து சென்று புதிய கட்சி அமைத்த போது ''என்னை ஒதுக்க முனைந்தவர்கள் பிரிந்துசென்றிருக்கிறார்கள்'' என்று கூறியிருந்தார்.

திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் மூத்த மகள் சுனித்ரா, ரூபசிங்காவைக் கடிமணம் செய்து கொண்டார். அவரும் அரசியலில் ஈடு

கள் இன்று பிரிந்துசென்றிருக்கிறார்கள்'' என்று அநுரா கூறியிருக்கிறார்.

பிரிந்துசென்ற அநுராவும், மைத்திரியும் மீண்டும் சிறிமா கட்சியில் சேர்ந்தது புதினமல்ல; இன்று பிரிந்துசென்றுள்ள சந்திரிகாவும் அவரது கணவரும்கூட நாளை சேர்ந்தால் அதுவும் புதினமல்ல.

இந்த உறவும் பிரிவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் மட்டும்தான் நிகழ்ந்த, நிகழ்கின்ற செயல்களுமல்ல; இலங்கையைப் பொறுத்தவரையில் இடது சாரிக்கட்சிகளுட்படப் பல அரசியல் கட்சிகளுக்குள்ளும் இவை சம்பவித்துள்ளன;

**✯ எஸ். எம். கோபாலரத்தினம்**

அநுரா பண்டாரநாயகா மீண்டும் அம்மாவிடம் வந்து சேர்ந்தார். இன்று எதிர்க்கட்சித்தலைவரும் ஆகிவிட்டார். உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையைத் திருமதி சிறிமா பண்டாரநாயகா பெற்றதுபோல உலகின் என்று சொல்ல முடியாதோ என்னவோ இலங்கையில் மிக இளம் வயதினராக எதிர்க்கட்சித்தலைவர் பதவியைப்பெற்றுக்கொண்டவர் என்ற பெருமையைத் தேடிக்கொண்டவர் திரு. அனுரா பண்டாரநாயகா

பட்டார். சிறிமா அம்மையார் யாழ்ப்பாண நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் மணிக்கணக்காகப் பூஜையில் கலந்து கொண்ட போது அவரும் அதில் கலந்துகொண்டு சாஷ்டாங்க நமஸ்காரமும் செய்தார். யாழ். பல்கலைக் கழகத் திறப்பு விழாவில் பிரதமர் சிறிமா கலந்துகொண்ட சமயம் அங்கு வருகை தந்த அநுரா ஒருபுறமும் சுனித்ராவும் ரூபசிங்காவும் மறுபுறமும் அமர்ந்திருந்ததையும் அவதானித்தவர்கள் பலர். இன்று

## பென்ஸ்? நொன்சென்ஸ்!

'காஞ்சி வரதப்பா! காஞ்சிவரதப்பா! எனைக் காத்திடப்பா' என்று மெய்மறந்து கண்ணீர் விட்டு வேண்டி நின்றார் ஒரு அடியவர். தேர்த்திருவிழாவான தால் ஜன நெரிசலுக்குள் ஓடிவந்த ஒரு ஏழை மனிதன் ''எங்கே வருதப்பா? என்று ஆவலுடன் கேட்டான். தேரில் வீற்றிருந்த அண்ணலை அடியார் காட்டினார் என்பது கதை.

உடலென்ற கும்பிக்கு உணவென்ற இரை தேடி நிற்கும் பட்டினிப் பட்டாளத்துக்குக் காஞ்சிக்கும் கஞ்சிக்கும் உள்ள வேறுபாடு தெரியவருமா? கஞ்சியிலே வரதப்பரைக் காணும் கூட்டம் அது.

எறும்பிடம் யானை மிகுந்த கருணை கொண்டிருக்கலாம்; ஆனால் எறும்பின் தேவைகளைப்பற்றி அதனால் சிந்திக்கமுடியுமா?

நாம் அடிமைநாடாக இருந்த போது ஆங்கிலயனை - பிரிட்டிஷ் தேசாதிபதி தமது மாகாண விஜயத்தில் தமமுடைய றொல்ஸ் றோயிஸ் (Rolls Royce) காரில் பவனி வருவது வழக்கம். அத்தகைய கார் நாட்டில் ஒன்றேதானிருந்தது. கவர்னரைப் பார்க்கத் திரளும் கூட்டம் அவருடைய வாகனத்தைப் பார்த்தால் பசி தீருமென்று நினைத்திருக்கலாம்.

இன்று நாம் சுதந்திரநாடு. ஜனாதிபதி மாளிகை பௌத்த கலாசாரம் கமழும் இடம். ஜனாதிபதியின் தூயவெண்ணிற தேசிய உடை லண்டன், புதுடில்லி, வத்திக்கான், - ஏன், வாஷிங்டன் வெள்ளைமாளிகையிலும் தாக்கம் ஏற்படுத்தக் கூடியது.

ஜனாதிபதியும் அமைச்சர்களும் நாட்டின் சேவகர், அரசர்களல்ல. இருபது பென்ஸ்கார், 110 லட்சம் பெறுமதி. அமைச்சர்கள் பாவனைக்கு இறக்குமதி செய்யும் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ''அமைச்சர்களுக்கு அலங்கார பென்ஸ்? - 'நொன்சென்ஸ்' அந்த இறக்குமதியை ரத்துச்செய்யுங்கள்'' என்றார் ஜனாதிபதி.

விலைகுறைந்த கார் அவர்களுக்குப் போதுமானவை யென்பதால் நாட்டுக்கு விமோசனம் வெளிக்குதா?

இனியும் நடைபெறலாம்.

### டி. எஸ். சேனநாயகா காலம்


1947ம் ஆண்டில் பெரிய சேனநாயகா என்று தமிழர்களால் அழைக்கப்படும் அதி கௌரவ டி. எஸ் சேனநாயகா சுதந்திர இலங்கையின் முதல் பிரதமராகி அமைச்சரவை அமைத்தபோது பேராசிரியர் செ சுந்தரலிங்கத்தையும் திரு. ஸி. சிற்றம்பலத்தையும் அமைச்சர்களாக்கிக் கொண்டார். பேராசிரியர் சுந்தரலிங்கம் வர்த்தக அமைச்சர், திரு. சிற்றம்பலம் தபால் தந்தி அமைச்சர்.


### சேர் அருணாசலமும் நடேசபிள்ளையும்

இவர்களிருவரும் கொழும்பு மாநகர தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள். ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் அதன் உறுப்பினர்களாக இருந்து தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்களில் முன்னாள் உள்நாட்டு அமைச்சர் சேர் அருணாசலமும் தமிழறிஞர் சு. நடேசபிள்ளையுமாவார்கள்.

டி. எஸ். சேனநாயகாவின் அமைச்சரவையில் அங்கம் பெற்றுப் பல திட்டங்களுக்கும் ஆலோசனைகூறிய பேராசிரியர் சுந்தரலிங்கம், இந்தியா பாகிஸ்தானியர் பிரஜாவு

[15-ம் பக்கம் பார்க்க]




PHILIPS
சிறந்த தொனி அலைக்க பிலிப்ஸ்

எடுத்துச் செல்லக்கூடியவை - விலை US $ 27 ஐ ரூ. 990/- இலிருந்து
ஏகவிநியோகஸ்தர்கள்:-
ஹேலீஸ் லிமிட்டெட்.
காட்சிச்சாலை: 646 காலிவீதி, கொழும்பு 3, தொலைபேசி 86958
சேவைப்பகுதி: 25, பொல்ஹர் ஒழுங்கை, கொழும்பு 10. தொலைபேசி: 91181 – 5
பிலிப்ஸ் ரேடியோக்கள் பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்: இலக்கம் 2,
கங்க நிரம்பல் வர்த்தக நிலையம், கொழும்பு 3.
பிலிப்ஸ் உடன் இணைந்து நாம் சிறந்தவைகளையே உங்களுக்கு வழங்குகிறோம்.
தவணைக் கட்டண முறை ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.
ZENITH

# அமெரிக்காவுக்கு ரஷ்யாவின் எச்சரிக்கை!

சோவியத் யூனியனின் புதிய அதிபராக திரு. செனன்கோ தெரிவு செய்யப்பட்டபோது வருங்காலத்தில் சோவியத்— அமெரிக்க உறவு எப்படியிருக்கும் என்றுதான் அமெரிக்காவும் மேற்கு நாடுகள் பலவும் கேள்விக்குறியுடன் மறைந்த சோவியத் அதிபர் யூரி அன்ற போவின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்குத் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பிவைத்திருந்தன. சில நாடுகளின் தலைவர்களே நேரில் சென்று மறைந்த தலைவருக்கு அஞ்சலி செய்து புதிய தலைவரையும் சந்தித்துத் திரும்பினர். அமெரிக்க உப ஜனாதிபதி ஜோர்ஜ் பிஷ்ஷும் புதிய அதிபர் செனன்கோவைச் சந்தித்தார்.

அமெரிக்க அதிபர் றீகன் செய்தியொன்றையும் அவரிடம் கொடுத்திருந்தார்.

ஒரு வாரம் கூட ஆகவில்லை. உலக நாடுகளை அமெரிக்கா ஏமாற்றி வாழப் பார்க்கிறது. என்று அமெரிக்காவைத் தோலுரித்திருக்கிறது சோவியத் யூனியன்.

அமெரிக்கா சமாதானப் போர்வைக்குள் ஒளிந்துநின்று கொண்டு ஊடுருவல் வேலைகளைச் செய்துகொண்டு வருகிறது. உலகத்தின் பல நாடுகளை இதன்மூலம் ஏமாற்றி வருகிறது. அமெரிக்காவின் பாசாங்கு சோவியத் யூனியனிடம் பலிக்க மாட்டாது'' என்று சோவியத்தின் பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் குச்சினேவ் மிகக் கடுமையான வார்த்தைகளால் தாக்கியிருக்கிறார்.

நவீன அணு ஆயுதங்கள் சோவியத் யூனியனிடம் இருப்பதாகவும் இந்த ஆயுதங்களின்முன் அமெரிக்கா நின்று பிடிக்க முடியாது'' என்றும் அறிவித்திருக்கும் சோவியத்தின் பாதுகாப்பு அமைச்சர் நாடுகளை ஏமாற்றப் பார்க்கும் ஆக்கிரமிப்புதனம் மிஞ்சுவதை சோவியத் யூனியன் பார்த்துக் கொண்டிருக்க மாட்டாதென்றும் பாதுகாப்பு அமைச்சர் எச்சரித்திருக்கிறார்.

இதைவெறும் அறிக்கையாகவோ மிரட்டலாகவோ அமெரிக்கா கருதுமென்று எதிர்பார்க்க முடியாது.

புதிய அதிபர் தெரிவாகி ஒரு வாரத்துக்குள் வெளிவந்திருக்கும் இவ்வறிக்கையை அமெரிக்கா முக்கியத்துவம் வாய்ந்ததாகவே கருதுமென்று நினைக்கலாம்.

செனென்கோ தலைமையிலான சோவியத் யூனியன் கடதாசிப் புலியாக இருக்க மாட்டாதென நம்பவேண்டும்.


## Harbour View Hotel, Kankesanthurai


We wish to inform our regular Patronisers that the Buffet Lunch on Sunday, 4th March 1984 will not be held as the Banquet Hall and Main Restaurant has been fully booked for a private function.

Manager.

## ஹாபர் வியூ ஹோட்டல்
### காங்கேசன்துறை.

எமது ஹோட்டலில் (4-3-84) அன்று ஒரு பிரத்தியேக வைபவம் நடைபெறவுள்ளமையால், இங்குள்ள களியாட்டு மண்டபமும், (Banquet Hall) சிற்றுண்டிச்சாலையும், (Restaurant) இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் நடைபெறும் மதிய போசனம் (Buffet Lunch) 4-3-84 அன்று நடைபெறமாட்டாது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

மனேஜர்


சோவியத்- அமெரிக்க உறவு பலப்படுவதற்கு இடமில்லை!

ஈரான்-ஈராக்

## மீண்டும் மோதல்

வளைகுடா யுத்தம் முடிவடைவதற்கு மாறாக மீண்டும் கடும்போராகமாறியிருக்கிறது. இருதரப்பும் ஓய்ந்திருந்தது போல் களைப்பாறிக் கொண்டு

### எஸ். எம். ஜி.

யுத்தத்தில் இழந்துபோன ஆயுதங்களுக்குப் பதிலாகப்புதிய ஆயுதங்களை வல்லரசுச் சந்தைகளில் வாங்கிச் சேர்த்துக் கொண்டு மீண்டும் உக்கிரமான சண்டையிலிறங்கியிருக்கின்றன.

ஈராக்கிற்குள் ஈரானிய படைகள் புகுந்து பல நகர்களைக் கைப்பற்றிக்கொண்டிருப்பதாகவும் ஈராக் இராணுவத்தினர் 8500 பேரைச் சிறைப் பிடித்திருப்பதாகவும்ஈராக்கின் எல்லைக்குள் 20மைல் தூரத்திலுள்ள அக்குர்ண என்னும் முக்கியநகரைத் தம்வசப்படுத்திக் கொண்டிருப்பதாகவும் ஈரான் கூறுகிறது.

ஈராக்கியர்ன் ஏவுகணைத் தாக்குதலால் 59 பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும் ஈரான் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

ஈராக்கிற்குள் ஈரானிய படைகள் நுழைய முயற்சித்த போது ஈராக்படைகள் திருப்பி அடித்து அவைகளை கலைத்ததுடன் 1500 ஈரானியத் துருப்புக்கள் கொல்லப்பட்டதாகவும் 350பேர் சிறைபிடிக்கப்பட்டதாகவும் ஈராக் கூறியிருக்கிறது


வழமைபோல் யுத்தத்தில் "வெற்றி நமதே'' என்று இருதரப்பும் கூறிவருகின்றன.

ஆனால் ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்தின் நிருபர் அல்குர்ணவுக்கு முதன் முதலில் சென்று அனுப்பியுள்ள செய்தியின்படி ஈரானியப்படைகள் அங்குவந்து அந்நகரைக் கைப்பற்றவில்லையென்பது தெளிவாகியிருக்கிறது.

நிலைமை இன்னும் சிலதினங்கள் கழிந்ததும் நன்குதெரிந்துவிடும்.

ஆனாலும் வல்லரசுகள்குவித்துவைத்திருக்கும் ஆயுதங்கள் விற்பனையாவதற்கு இந்த யுத்தம் உதவியாக இருக்கும். இருநாட்டு மக்களைப் பொறுத்தவரையும் இந்த யுத்தம் எவ்வகையிலும்நன்மைசெய்யாது. வளர்ந்துவரும்உலக நாடுகளுக்கும் இந்த யுத்தத்தினால் கஷ்டமும் நஷ்டமுமேதவிர நன்மையில்லை.


## நவீன உல்லாசக் குடிசைகள்



### எல்லாம் உங்களுக்காகவே

- பிரதி சனி, ஞாயிறு நாட்களில் Buffet Lunch - ரூபா 35/- மட்டுமே
- பிரதி சனி தோறும் Bar-Be-Que-Dinner - ரூபா 60/-
- உல்லாச வார விடுமுறை தினங்கள் (Weekend Package) வெள்ளி இரவு முதல் ஞாயிறு மதியம் வரை

(அனைத்து உணவுடனும், தங்குமிட வசதிகள் உட்பட)

குளிரூட்டிய அறைகள் - இருவருக்கு ரூபா 590/-

குளிரூட்டிஅற்ற அறைகள் - இருவருக்கு ரூபா 500/-

பிற்குறிப்பு: மேற்கூறிய கட்டணங்களுடன் 10% சேவிஸ் சார்ஜ்

- கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியாய் விசாலமான களியாட்டு மண்டபமுண்டு.
- புதுமண தம்பதிகளுக்கு விஷேச சலுகைகள்

Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone : 22605 Jaffna.

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா கடலோர உல்லாச பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

ஹாபர் வியூ ஹோட்டல்

THE ONLY SEASIDE GARDEN RESORT HOTEL IN THE NORTH


## சிவராத்திரி

## கத்தரியோகம்

சிவ என்ற சொல்லை உடைத்தாய் வருவதால் சிவத்தோடு தொடர்புடைய சைவ சமயத்துக்கே உரித்தான தொன்றாகவே சிவராத்திரி பலராலும் கொள்ளப்படுவது. முற்றுமப்பரிசீலனை செய்து பார்க்குமிடத்து இது சைவ சமயத்துடன் மட்டுமல்ல, இந்துமதம் என்று மற்றநாட்டவரால் சொல்லப்படுகின்ற சைவசமயத்தை ஒட்டிய வைஷ்ணவம், சாத்தம் முதலான மற்ற மதங்களுக்கும் மட்டுமல்ல, உலகமக்கள் யாபேருக்கும் பொதுவான ஒரு நல்ல இராத்திரியாகும்.

[1-3-81 'ஈழநாடு' வாரமலரில் ரேவதிகுப்புஸ்வாமிஎழுதியது. உதவியவர்: பி. எஸ். செட்டியார்.]

இது மாசி மாதத்தில் வருவதால் சூரியன் கும்பராசியில் இருக்க, அமாவாசையை யொட்டிக் கொள்ளப்படுவதால் சந்திரனுக்குக் கும்பராசிக்கு அயலையான மகரராசியில் இருக்கும் ஜோதிஷ சாஸ்திரத்தின்படி கிரஹங்களுக்கே 12 ராசியில் நடுராசியான 7-ம் இராசியில் பார்வை விழுகின்றது என்ற இடத்து கும்பராசியில் உள்ள சூரியன் 7-ம் ராசியான சிங்கராசியைப் பார்க்க, (சூரியனுக்கு சிங்கம் ஆட்சி) மகரத்தில் உள்ள சந்திரன் அதன் 7-ம் ராசியான கடகராசியைப்பார்க்க (சந்திரனுக்கு கடகம் ஆட்சி) இந்த இடத்தில் வான வெளியில் சூரியன், சிங்கம், சந்திரன், கடகம் ஒரு சர்த்தரியோகம் நடக்கிறது. இதேவேளையில் யோகத்தில் ஈடுபட்டோர் சூரிய சந்திர கலைகளைத்தாங்களும் கத்தரி யோகம் பண்ணித்தியானத்தில் புருவமத்தியில் இறையைத் தரிசித்தால் மஹாசித்தியாகும். யோகத்தில் ஈடுபடாதோர் அதே வேளைவிழித்திருந்து இறையைத்தியானித்தலும் கூடும்.

ஆதிகாலத்தில் சிவத்தோடு தொடர்புடையவர்கள் கண்ட விளக்கத்தை சிவராத்திரிஎன்ற பெயரோடு உலகத்துக்குக் கொடுத்தார்கள். இக்காலம் சிவத்தைவேண்டாதார்கள் வகுத்திய ஒருநாள் வரும் இந்த நன்னாளை ஏன் விட்டுவிடவேண்டும். சிவத்தைவிட்டு தங்கள் இறையைத் தியானிக்கலாமே. பார்க்கப்போனால் இந்தராத்திரி உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நல்ல ராத்திரி.

மாதாமாதம் சூரியனைச் சந்திரன் அணுமிக்க, அமாவாசையை ஒட்டி 12 மாதமும் சிவராத்திரி வருகின்றது இது மகாசிவராத்திரி. சூரியனுக்கு சிங்கராசியும் சந்திரனுக்குக் கடகராசியும் விசேடித்த சிறப்புடையதானபடியால் கும்பராசியில் சூரியன் நிற்கும்போது நிழும் மாசிமாத சிவராத்திரியே மஹாசிவராத்திரி யெனக்கொள்ளப்படுவதாகும்.

"இம்முறை சிவராத்திரி முழிப்போ...?''

"தினமும் முழிக்கிறேன்...''

"ஆகா, அவ்வளவு பக்தியோ...?''

"நுளம்புத் தொல்லை இரவில் அதிகம்!''

—சந்துரு.

# திருத்த முடியாதவர்கள்

சிதம்பர திருச்செந்திநாதன்

நண்பர் சொன்னபடி வீட்டைக் கண்டு பிடித்தாகி விட்டது. டாக் கலர் பச்சை மதில், வெள்ளைக் கேற், ஏழாம் இலக்கம்— சத்தியமூர்த்தியின் வீடுதான்'

கேற்றில் இருந்து வீட்டின் முன் புறம் வரை பல வர்ணச் சேலைகள் அணிந்த பெண்கள் போல, குரோட்டன்கள் இடைப்பட்ட அந்தப் பாதையில் ஒரு சின்னச் சருகு கூட இல்லாமல் பளிச்சென்று இருந்தது.

அந்த ரோட்டில் அது வித்தியாசமான வீடுதான். அழகும்துப்புரவும் மனத்தை இதமாக்கின. கேற்றைத் திறந்து உள்ளே நுழைய முனைய 'வள்' என்று பாய்ந்து வந்தது ஒரு சடை நாய். பழையபடி கேற்றை மூடிக் கொண்டு வெளியே வந்தோம்.

நாய் உண்டாக்கிய அமளியில் வீட்டின் வாசல் கதவைத் திறந்து கொண்டு நடுத்தர வயதுப் பெண் ஒருத்தி வெளிப்பட்டாள்.

''என்ன வேணும் யாரைப் பாக்கிறீங்கள்?''

''மிஸ்டர் சத்தியமூர்த்தி''

''வாங்கோ'' என்று எங்களை உள்ளேவர தமிழில் அனுமதித்து விட்டு ''பிளாக்கிகம்...கம்'' என நாயைக் கூப்பிட்டாள்.

கேற்றை மோப்பம் பிடித்துக் கொண்டிருந்த நாய் ஒரு வட்டம் போட்டு விட்டு அவளை நோக்கி ஓடியது

நாங்கள் துணிச்சலுடன் கேற்றைத் திறந்து உள்ளே போனோம். வாசலில் நின்ற அவள் ''வாங்கோ வந்து உள்ளுக்கை இருங்கோ. அவர் சின்னதாய் ஒரு 'வோஷ்' எடுக்கிறார். இப்ப வந்திடுவார்'' என்று சொல்லி எங்களை வெளி விறாந்தையில் இருக்கச் செய்து விட்டு உள்ளே சென்று மறைந்தாள்.

நாங்கள் கதிரைகளில் அமர்ந்தோம். அந்த விறாந்தை பளபளப்பாயிருந்தது. கதிரைகள் கூட அப்படி. சுவரில் சின்னத் தூசு கூட இல்லை.

''நல்ல நீற்றாகத்தான் இருக்கு வீடு'' என்று எங்களுக்குள் கதைத்தோம்:

விறாந்தையில் இருந்த பொருட்கள் எல்லாம் ஒரு ஒழுங்கமைப்பில் இருந்தன, சாதாரணமாக எல்லாவீடுகளிலும் இப்படியான ஒரு ஒழுங்கைக்காணமுடியாது.

கதிரைக்குப் பக்கத்தில் இருந்த, ஸ்ரூலில் வைத்துவிட்டு, எங்களுடன் உரையாட ஆயத்தமானார் சத்தியமூர்த்தி

பளபளப்பான அவர் முகத்தின் வசீகரத்தாலும் அணிந்திருந்த உடையின் கவர்ச்சியாலும் சிகரெட் சாம்பலை ஆஷ்ரேயில் தட்டும் லாவகத்தாலும் நாங்கள் அவர் மீது அதிக ஈடுபாடு கொண்டோம்.

''மிஸ்டர் சின்னத்தம்பி சொன்ன விசயமாகத்தானே நீங்கள் வந்திருக்கிறீர்கள்?''

''ஓம் சேர்''

''அது செய்யலாம்... சிம்பிள்''

எங்கள் முகங்கள் மலர்ந்தன.

''நேற்றுச் சின்னத்தம்பியோடை அந்தப்பக்கம் வந்து பார்த்தனான் நீங்கள் இல்லை''

''ஓம் சேர் நீங்கள்வந்து பார்த்தது என்று கேள்விப் பட்டனாங்கள்.''

''நல்ல காலம். ஜப் என்றபடியால் ஒருமாதிரிச் சமாளிக்கக்கூடியதாய் இருந்தது''

''ஏன் சேர்''

''அந்தப்பக்கம் அவ்வளவு அக்லி ஏரியா. நீங்கள் என்னைப் பிழையாகயீன் பண்ணக்கூடாது... சனங்கள்தானே காரணம்...''

## எமது சிறுகதை

வீட்டில் சின்னப்பிள்ளைகள் இல்லையோ என நினைக்கும் வேளையில் வீட்டின் ஹாலில் இருந்து திருத்தமான உடையணிந்த இரண்டு பிள்ளைகள் வந்தார்கள்.

எங்களைப் பார்த்துப்பதற்றப் படாமல் அவர்கள் வெளியே சென்றனர். வெளியே முற்றத்தில் வேலைக்காரப்பெண் ஒருத்தி தென்பட்டாள். குரோட்டனில் இருந்து உதிர்ந்த பழுத்த இலைகளை அவள் பொறுக்கிக்கொண்டுபோனாள். முற்றம்துப்புரவாக இருந்ததன் காரணத்தை இப்போது புரியமுடிந்தது.

நாங்கள் வீட்டிலும் வீட்டின் சுற்றுப்புறச் சூழலிலும் எங்களை மறந்துபோனோம். அது காரணமாக ''ஹலோ'' என்ற வரவேற்புடன் வந்த சத்திய மூர்த்தியைக் கண்டு திகைத்துப் போனோம்.

''குட் ஈவினிங் சேர்''

''குட் ஈவினிங்'' என்று சொல்லிக்கொண்டு, அவர் எங்கள் எதிரே அமர்ந்தார்.

உதட்டில் சிகரெட் கையில் கொண்டுவந்த ஆஷ்ரேயைதன்

''உண்மைதான்''

''அந்தலேன் முழுக்க ஒரே குப்பை சனம் எல்லாம் குப்பைகளை லேனில்தான் கொட்டுதுகள் போல. அடுப்புச்சாம்பலில இருந்து அழுகிப்போன மரக்கறி எல்லாத்தையும் லேனில அதுவும் தங்கள் தங்கள் வீட்டு முகப்பில... என்ன சனங்களப்பா...

''பாட்ஸ்மெல்''

''சனங்கள் அப்பிடிப்பழகிப் போச்சு''

''என்ன பழக்கம், இப்பிடிச் செய்யிறதும் நல்ல பழக்கமே. நாங்கள் ஹெல்தியாக இருக்க வேணும் எண்டால் சுத்தமாய் இருக்கவேணும்''

''அவை அப்பிடி ஆழமாய்ச் சிந்திப்பதில்லைத்தானே.''

''அதைத்தான் பிழைஎண்டு சொல்லுறன். எல்லாரும் நீற்றாகா இருக்கவேண்டாமோ. பிறகு என்னத்துக்குக் கந்தையானாலும் கசக்கிக்கட்டு எண்டு அந்தக்காலத்திலை சொன்னார்கள். அந்தலேனிலை- குப்பை கொட்டுறதாலை யாருக்குக் கஷ்டம்? லேனிலை வசிக்கற ஆட்

(12ம் பக்கம் பார்க்க)

---

நான் இதுவரை வாழ்ந்த இடத்தைப் பார்க்கின்றேன். என்கண்கள் குளமாகின்றன.

அண்ட வெளியெல்லாம் கேட்கக் கூடியதாக கத்திஅழ வேண்டும் போலிருக்கின்றது.

ஓ உலகமே! இப்படி என்னை அழித்து விட்டாயோ! நான் நின்ற இடம் வெட்டவெளியாகக் காட்சி அளிக்கின்றது. நான் இந்த உலகத்தில் மக்களின் பார்வையிலிருந்து மறைந்து இரண்டு மாதங்களாகின்றன.

என்னுடன் கூட வாழ்ந்து சகல உணர்வுகளிலும் பங்கு பற்றிய எனது இனத்தின் நண்பர்களைப் பார்க்கின்றேன். அவர்களது முகத்தில் மகிழ்ச்சி இல்லை.

இன்றோ நாளையோ எனக்கு நேர்ந்தகதி அவர்களுக்கும் ஏற்படலாம் என்ற பீதியோ?

இந்த உலகம் நன்றி கெட்டது! நான் உயிருடன் இந்த இடத்தில் வாழ்ந்தநாட்களை எண்ணிப்பார்க்கிறேன்.

நாங்கள் உலகம் வாழ அனுசரணையாக நின்றோம். ஆனால் உலகமோ எங்களை மதிக்கவில்லை.

இயற்கை எனக்கு அளித்த வனப்பை எண்ணிநானே சில சமயம் பெருமைப்படுவதுண்டு.

இந்த இடத்தைத்தான் நான் எவ்வளவு குளிர்மையாக வைத்திருந்தேன்!

### ஓர் உருவகம்

களைத்துவரும் மக்கள் கூட்டம் எனது நிழலில் வந்து நின்று ஆறுதல் பெறும்போது ஆதுரத்துடன் அவர்கள் அறியாமல் அவர்களை அணைத்துக் கொள்வேன். என் நிழலில் தான் எத்தனை விசித்திரமான உலகம்! மக்கள் தங்கள் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் போது நான் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருப்பேன்.

யாழ்ப்பாணச் செயலகம்! எத்தனை அழகான கட்டடம்! அழகுக்கு மெருகூட்டுவது போல அந்தஅழகிய கட்டிடத்தின் வாசலில் நாங்கள் வரிசையாக நின்றோம். செயலகத்திற்கு வருபவர்கள் அலசி ஆராயும் பிரச்னைகள், சாரதி அனுமதிப்பத்திரம் பெறவருபவர்களும் அவர்களை ஈயாக மொய்க்கும் புறோக்கர்'களும், எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு பெட்டிசம், பிறப்புச்சான்றிதழ் விண்ணப்பம் பாஸ்போட் விண்ணப்பம், என்று எழுதிக்கொடுக்கும் நபர்களின் கறுர்பேச்சுகள்... இத்தியாதி காட்சிகளை தினமும் நான்ரசிப்பதுண்டு.

ஒருகுட்டி உலகம் காலை ஆரம்பமாகி, மாலை முடிவுறும் விந்தையை இரவில் உலகம் உறங்கும் வேளையில் நான் என் சகநண்பர்களுடன் பரிமாறிக் கொள்ளுவேன. எங்கள் குரல் தான் உலகத்துக்குக் கேட்காதே!

இன்றும் இதேகாட்சிகள் இருக்கின்றன. ஆனால் தகிக்கும் வெய்யிலில் மக்கள் படும் பாட்டைக்கண்டு என்மனம் இன்று அழுகிறது.

என் நிழலில் தான் எத்தனை வர்ணமயமான மோட்டார் வண்டிகள்! விதம்விதமான நவீன மோட்டார் சயிக்கிள்கள்!

ஆனால் நான்நின்ற இடம் வெறிச்சோடிக்கிடக்கின்றது.

நிழலின் அருமையை வெய்யிலில் உணருகிறார்களோ....?

நாங்கள் என்ன பாவம் செய்தோம்?

நான்இந்த இடத்தில் குடிவந்த நாள்... இன்றும் எனக்குப் பசுமையாய் ஞாபகத்தில் இருக்கின்றது. பெருந்தன்மை கொண்ட வெள்ளைக்காரத் துரை கச்சேரி 'ஏஜண்டாக' இருந்தார்.

தனதுகையால் நட்டு, மண் அணைத்து, நீர்வார்த்தார். அத்துடன் நிற்கவில்லை. முத்திரைச்சந்தை தொடக்கம் கச்சேரிவரை இப்படி பல கன்றுகளை நட்டு மிகக்கவனமாகப் பேண வழிவகுத்தார். கன்றுகள் மரமாகி மக்களுக்கு நீண்ட காலம்பலன் அளிக்கும் என அவர்கள் நம்பினார்கள். இன்று வானுயர வளர்ந்து நின்றநாங்கள் அந்தப்பெரிய உள்ளம் படைத்த வெள்ளைக்காரத் கனவானை நினைத்துப் பார்ப்பதுண்டு.

எங்கள் வளர்ச்சியைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்ட அந்த அன்பை நினைத்து நான் எனக்குள் மறுகுகின்றேன்.

ஆனால் இன்றோ......

மக்களின் நலனுக்காகக் காணுமிடமெல்லாம் மரம் வளர்த்த பண்பு எங்கே போய் ஒழித்துக் கொண்டது?

இன்றைய உலகம் காணும் மரமெல்லாவற்றையும் ஓர் பேய் ஆவேசத்துடன் அல்லவா வெட்டுகிறது!

நான் ஓங்கி வளர்ந்து நின்றபோது எனது நிழலின் கீழ் பலர் கதைத்த கதை இன்றும் நினைவிருக்கிறது.

''சோக்கான மரம்! தறிச்சு வித்தால் ஒருலட்சம் பெறும்''

நன்றி கெட்ட உலகம்!

ஒருவராவது இதைப்போல் இன்னொரு மரம் வைத்தால் எப்படி இருக்கும் என்று கூறவில்லையே!

நாங்கள் செய்த பாவம் என்ன?

எங்களுக்கு ஆணி வேர் இல்லையாம்!

எங்களுக்குப் பக்க வேர் தான் உண்டாம்! அதனால். மக்களுக்கு ஆபத்தாம்!

இது எங்கள் குற்றமா?

மற்ற மரங்களுக்கு ஆணி வேரைப் படைத்த இறைவன் மலை வேம்பான எங்களுக்கு ஏன் படைக்கவில்லை?

கச்சேரிச் சந்தியில் நின்ற எனது சக மரம் ஒன்று காற்றுக்குச் சரிந்த போது அனர்த்தம் ஒன்று நடந்தது.

சயிக்கிளில் வந்த ஒரு மனிதன் மரத்தின் கீழ் அகப்பட்டு இறந்து விட்டான்.

என் கண் முன்னால் இந்த விபத்து நடந்தது.

அந்தப் பரிதாபத்தைக் கண்டு பொறுக்க முடியாது கண்களை மூடிக் கொண்டேன்.

மனம் அழுதது.

அந்த மனிதனின் மறைவுக்காக மௌன அஞ்சலி நாம் செலுத்திக் கொண்டோம்.

ஆனால் ஆபத்தான மரங்கள் தறிக்கப்பட வேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டது போலும்!

ஏலத்தில் நான் விலை பேசப் பட்டேன். என்னைப் பிடித்த சனியன் எனக்குப் பக்கத்தில் நின்ற எனது சக நண்பர்களுக்கும் பிடித்தது.

நாங்கள் கதறக் கதற வாள் கொண்டு அறுத்தார்கள்.

எங்கள் குரல்தான் உலகத்துக்குக் கேட்காதே!

ஏலத்தில் என்னை வாங்கியவனின் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி!

பெருமளவில் பணம் சம்பாதிக்கப் போகின்ற மகிழ்ச்சியா அது?

## எங்களுக்கு ஒரு வாரிசு வேண்டும்!

நாங்கள் நின்ற இடத்தில் எங்களை வெட்டி வீழ்த்திய ஒரு வாரத்துக்குப் பின் இரண்டு இளம் கன்றுகளை நட்டு, ஆளுயர கூடும் கட்டி வைத்துள்ளனர். ஆவியாக அலையும் நான் இதைக் கண்டு சற்று மகிழ்கிறேன். எங்களுக்கு ஒரு வாரிசு உருவாகி விட்டதென்று!

எனது மகிழ்ச்சி குறைப் பிரசவமாகி விடாமல் இருக்க வேண்டும் என மனம் அழுகிறது.

மரம் நட்டவர்கள் அதைக் கவனமாகப் பேணிக்காக்க வேண்டுமே என்ற ஆசை பெரிதாகின்றது!

என்னை நட்டு, மண் அணைத்து நீர் வார்த்த அந்த வெள்ளைக்காறக் கனவானின் முகம் ஞாபகத்தில் வருகிறது.

எங்களுக்கு இந்த உலகத்தில் மேலும் பல வாரிசுகள் உருவாக வேண்டும்.

மக்களுக்கு நாம் பயன் தர வேண்டும்.

ஓ உலகமே! சற்று நன்றி மறவாமல் பெருந் தன்மையோடு என் ஆசையை நிறைவேற்று!

து வைத்திலிங்கம்

---

## ஒரு தனிக்குயிலின் கீதம்

'இன்ரசிற்றி' ஏறிச்சென்ற என்னவரே கவனம்
இறங்குகையில் ஏழுமணியங் கிரவெனிலோ அவலம்
என்ரமனம் இங்கிருந்து ஏங்கிநிதம் பதறும்
எப்போதெப்போ என்றேயுங்கள் எதிர்வரவே கனவும்!!

தப்பாமல் தபாலிடுங்கோ தவிக்கின்றேன் இங்கே
தமிழ்ப்பகுதி மாற்றமெப்போ தகவலென்ன அங்கே
எப்பாடு பட்டாலும் இனிமாற்றம் வேண்டும்
ஏடிமுதல் ஏசிவரை இதைவிடாமற் தூண்டும்!!

'பென்சன் பெறவழியுமிலைப் பெரிசான வேலை
பேசாமல் விடுவதென்றால் பெரியதெங்கள் 'சோலை'
'கன்சாட்'டின் பக்கம்பாற் கனத்ததொகைப் பூக்கள்
'கவுன்மேன்ர' நம்பிவிட்டுக் கதறுதப்பா ஆட்கள்!!

வெள்ளிலீவு போட்டிட்டே வெளிக்கிட்டே வாரும்
விரதமன்று பகலுணவெ.க்கு விருந்தெனவே மாறும்
துள்ளியிங்கு கடைக்குட்டி தொடுகின்றான் மார்பை
தூக்கம்வந்து விட்டதாக்கும் தொடரடுத்த கோர்வை??

வி. ரி. தமிழ்மாறன்

# முற்றிய கதிர்களும் பரனடிபற்றிய அடியாரும்

சைவபுராணங்கள் — 3

பண்டிதை
தங்கம்மா அப்பாக்குட்டி

காவியத்துக்கு அணியாக விளங்குவது நாடு நகரவர்ணனைகளாகும். சோழநாட்டில் வயல்களில் நெற்கதிர்களெல்லாம் சுருள் விரிந்து அலர்ந்து நிற்கின்றன. அதனைத் திருவருட் கண்ணோட்டத்தோடு வர்ணிக்கிறார் சேக்கிழார்.

சாலி நீள் வயலின் ஓங்கித்
தந்நிகர் இன்றி மிக்கு
வாலிதாம் வெண்மை உண்
மைக் கருவினும் வளத்தவாகிச்
சூல்முதிர் பசலை கொண்டு
சுருள் விரித்து அரனுக்கு அன்
பர்
ஆலின் சிந்தை போல
அலர்ந்தன கதிர்கள் எல்லாம்

சிவனடியார் உள்ளம் ஆண்டவனை நினைத்து அலர்ந்திருப்பது போல நெற்கதிர்களெல்லாம் சூல் முதிர்ந்து பசலை கொண்டு இலைச் சுருளிலிருந்தும் வெளிப்பட்டு அலர்ந்து காணப்படுகின்றன. அடியார் உள்ளங்கள் உண்மையான ஞானத்தை யுடையனவாய் திருவருள் வளம் மிக்கனவாய் சிவலோகப் பாவனையினாலே குவிதலின்றி அலர்ந்திருப்பனவாய் விளங்கும். அதேபோல் கதிர்களுந் தூய வெண்ணிறம் உடையனவாய் பதர்அற்ற உண்மைப்பயன் கொண்டனவாய்சாறு உடையனவாய் சுருண்டு இருந்த நிலையினின்றும் வெளிப்பட்டு விரிந்து காணப்படுகின்றன. இங்கே நெற்பயிர் விளைவை, சிவனடியார் சிந்தையோடு அருமையாகப் பொருத்திக் காட்டுகிறார். சோழநாட்டை அணிசெய்வது காவிரியாறு. இதனைப் பொன்னியென்றும் போற்றுவர். இதன் இருமருங்கும் சிவாலயங்கள் நிறைந்து காணப்படுகின்றன. நறைமலர்களைச் சுமந்து கொண்டு பொன்னி ஓடி வருகிறது. வழியில் உள்ள சிவாலயங்களில் அம்மலரிட்டு நீரும் தெளித்து வருங்காட்சி நினைக்க நினைக்க இன்பம் பயப்பதாகும்.

''வம்பு லாமலர் நீரால் வழி
பட்டுச்
செம்பொன் வார்கரை எண்
ணில் சிவாலயத்(து)
எம்பிரானை இறைஞ்சலின்
ஈர்ம்பொன்னி
உம்பர் நாயர்க்கு அன்பரும்
ஒக்குமால்''

என்பதுபெரிய புராணம். காவிரியாறு மலரையும் நீரையும் சொரிந்து சிவாலயங்களைச் சூழ்ந்து வருவது போலச் சிவனடியார்களும் சலம்பூவொடு தூவி ஆலயங்களை வழிபட்டு வருங்காடசியை விளக்குகி துற இப்பாடல்.

திருஞானசம்பந்தர் திரு அவதாரம் செய்த இடம்சீர்காழி. வேள்வி செய்யும் அந்தணர் குலத்திலே அவதரித்தவர். அவர். அத்தகைய வேள்விச் சிறப்பை மரங்களும் காட்டி நிற்கின்றன

''பரந்தவிளை வயற்செய்ய
பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில் வளர் தேமாவின்
கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரம்நீள் இலைக்கடை
யால் ஒழுகுதலால் நெடிதவ்வூர்
மரங்களும்ஆ குதிவேட்குந்
தகையவென மணந்துள்ள
தால்

இங்கே இயற்கையானதொரு மருதநிலக் காட்சியைத் தெய்வ உள்ளத்தோடு நின்று காட்டுகிறார். சீர்காழி நாட்டு வயல்களிலுள்ள மாமரங்களே வேள்வி செய்கின்றன; வயலிலே தடாகம்; தடாகத்திலே தாமரை மலர்கள் அது அக்கினிக் குண்டம் போற் காட்சியளிக்கின்றன, வயல் வரம்புகளிலுள்ள மாமரங்களிலுள்ள பழங்கள் கனிந்து வெடித்து அவற்றின் சாறு கீழேவிழுகிறது. அது மாவிலைகளின் மூலமாகத் தாமரைப் பூவினுள் சொரியப்படுகிறது. இக் காட்சி அந்தணர் செய்யும் வேள்வியினை நினைவூட்டுகிறது. தாமரைப் பூவாகிய அக்கினிக்குண்டமும் பழச்சாறாகிய நெய்யும், மாவிலையாகிய அகப்பையும், மரங்களாகிய வேள்வி செய்வோனும் சேக்கிழார் அகக்காட்சியிற் பட்டுப் பாடலாக்மிளிர்கின்றன.

## சிவசின்னங்கள்

திறுநீறு, திருவைந்தெழுத்து முதலியவற்றுக்குச் சிறந்த இடம்கொடுத்துப் பாடியுள்ள பல இடங்களைப் பெரியபுராணத்தில் காணலாம். சிவனடியார்களைப், 'பூசு நீறு போல் உள்ளும் புனிதர்கள்' என்று விளக்கும் போதும் திருநீற்றையே எடுத்துக் காட்டுகிறார். சுந்தரர் பரவையாரைக் கண்டு பிரிந்தபின்பு மாலைப்போது வருகிறது. சந்திரன்வானத்திலே தோன்றுகிறான். நிலவொளி எங்கும் பரவுகிறது.

''தோற்றும் மன்னுயிர் கட்
கெலாந் தூய்மையே
சாற்றும் இன்பமும் தண்
மையுந் தந்துபோய்
ஆற்ற அண்டமெலாம்
பரந்து அண்ணல்வெண்
நீற்றின் பேரொளி போன்
றது நீள்நிலா''

நிலாவினொளியை நீற்றினொளியோடு ஒப்பிடுகிறார். 'நல்லோர் மனம் போல அவர் அணிந்த சேமம் நிலவு திருநீறு' என்றும் பாடப்படுகிறது. தில்லைத் தலத்தைச் சூழ்ந்து செல்லும் அகழிகளில் உள்ள தாமரை மலர்களில் தேன் குடிக்கும் வண்டுகள் பக்கத்தேயுள்ள தாழையிற் பாய்ந்து தாழம் பூவிற் படிகின்றன. இதனால் வெண்தாது ஒட்டிக்கொள்கிறது. இந்த உருவில் நின்று ரீங்காரம் செய்கின்றன. ''துன்று நீறுபுனை மேனியவாகித் தூய நீறு புனை தொண்டர்கள் என்னச் சென்று சென்று முரல் கின்றன கண்டு சிந்தையன்போடு திளைத்தெதிர் சென்றார்'' சுந்தரர் தில்லைக்குச் சென்ற அவர் கண்டுகளித்த திறனை இவ்வாறு காட்டுகிறார் சேக்கிழார்.

செந்தமிழ்ச் சுவை சொட்டச் சொட்டத் திருவைந்தெழுத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டுமிடங்கள் மிகப் பல. மாலைப் பொழுதின் பின் வானம் இருண்டுகொண்டு வருகிறது. தெய்வீக உள்ளத்திலிருந்து செஞ் சொற் கவிதை எவ்வாறு வெளிப்படுகிறது. என்பதைப் பாருங்கள்.

''பஞ்சின் மெல்லடிப்
பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள் தம் வல்வினை
யும்அரன்
அஞ்செழுத்தும் உணரா
அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்
டது நீண்டவான்''

எண்ணங்களை மறைத்து வைக்கும் ஆற்றல் மிக்கவர்களாதலின் பெண்களின் உள்ளத்தை இருண்டது என்றார். மைவிழியார் உள்ளமும் வஞ்சமாக்களின் வலிய வினையும் எப் பெருமானுடைய திருவைந் தெழுத்தை எண்ணாத அறிவிலாரது நெஞ்சமும் போல நீண்டவானம் இருண்டு காணப்பட்டது. ''அகவிருள் கெடுப்பது நமசிவாய''என்று பெரியோர் அருளியிருப்பதால் அதனை உணராதவர் உள்ளம் இருண்டு இருக்குமென்பதில் வியப்பில்லை. திருவைந்தெழுத்தின் சிறப்பை மற்றோர் இடத்திலும் காண்போம். சமணர்கள் அப்பரைக் கல்லோடு கட்டிக் கடலிலே விட்டபோது அவர் 'சொற்றுணை வேதியன்' என்று தொடங்கி நமசிவாயப் பதிகம் பாடிக் கரையேறினார். அந் நிகழ்ச்சியை ஆசிரியர் நயம்படக் காட்டுகிறார்.

''இருவினைப் பாசமும் மலக்
கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்
கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத்து
அரசை இக்கடல் ஒரு கல்
மேல் ஏற்றிடல் உரைக்க
வேண்டுமோ''?

ஆணவமாகிய கல்லோடு இரு வினையாகிய கயிற்றையும் பிடித்தபடி ஆன்மாக்கள் பிறவியாகிய கடலுக்குள்ளே விழுகின்றன அங்கிருந்து கரையேறத் துணை நிற்பது திருவைந்தெழுத்தேயாகும் பெரிய பிறவிப் பெருங் கடலில் விழுவோரையே ஏற்றுவது அது. அத்தகைய ஐந்தெழுத்து ஒரு சிறிய கடலில் ஒரு சிறிய கல்லாற் பிணிக்கப்பட்ட ஓர் அரசை ஏற்றுவதில் வியப்பொன்றுமில்லையே என்று கூறுவதன் மூலம் திருவைந்தெழுத்தின் பெருமையை உணர வைக்கிறார்.

## சித்தாந்த விளக்கம்

சைவ சித்தாந்தப் பயிற்சி மிக்கவராகிய இவர் பாசம், பழி, வினை, புண்ணியம் என்பவற்றைப் பல இடங்களில் உவமையாக்கிக் காட்டியுள்ளார். புண்ணியந் திரண்டுள்ளது போல்வது எனத் திருக்கயிலை மலையையும் புண்ணியக் கண்ணிரண்டு என அப்பரையும் சம்பந்தரையும் காட்டியுள்ளார். இளையான் குடி மாறர் குறும்பயிர் தடவிப் பிடுங்கிக் கறியமுதாக்குவற்குக் கொடுக்கிறார். நல்லிரவில் கொட்டும் மழையில் கும்மிருட்டில் கையால் தடவித் தடவிப் பிடுங்குகிறாரென்பதை விளக்கும் பொருட்டு.

''குழிநிரம் பாத புன்செய்க்
குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார்
போலப் பறித்தவை கறிக்கு
நல்க''

என்று கூறப்பட்டுள்ளது. பாசப் பழி முதல் என்பது சகல மலத்திற்கும் வேராகி நிற்கும் மூலமாகும். எனவே வித்து மேல் விளையாமற் செய்த இச் செயலால் பிறவியே வேரோடு அறுந்து விடுகிறது என்பதை உணரமுடிகிறது.

---

## புதிய புத்தகம்

# அடிப்படை இலக்கணம்

(9ம் 10ம் வகுப்புகளுக்கு உரியது) ஆசிரியர்:
பண்டிதர் சு. வேலுப்பிள்ளை
விலை: ரூ. 17-20

தெளிவுறவே அறிந்திடுதல்; தெளிவுதர மொழிந்திடுதல் மிக முக்கியமென்பதை மகாகவி பாரதி வலியுறுத்தினான்.

விஞ்ஞானம், சமூகவியல், இலக்கியம் எதுவாயினும் தெளிவுற அறிந்திடவும்,தெளிவுதர மற்றையோர்க்கு எடுத்து மொழிந்திடவும் எது அவசியம்? மொழி அறிவு அவசியம். வழுவற்ற முறையில் மொழியைக் கற்றுக் கொண்டாலன்றி எத்துறை விடயத்தையும் தெளிபுற அறியவும் முடியாது; தெளிவுற மற்றவர்க்கு எத்துதுக்கூறவும் முடியாது. வழுவற்றமுறையில் மொழியைக்கற்பதற்கு அடிப்படை இலக்கண அறிவு இன்றியமையாத ஒன்று. இலங்கையில் இன்று தமிழ், முஸ்லிம் மாணவர்க்குத் தமிழே போதனு மொழியாக அமைந்துள்ளதால் எல்லாப்பாடங்களையும் அவர்கள்பிழையின்றி, தெளிவாகக் கற்பதற்குத் தமிழின் அடிப்படை இலக்கண அறிவு அத்தியாவசியமாகின்றது.

மேலும், தமிழ்மொழியே ஒருபாடமாக இருக்கிறது. தமிழ்மொழியில் திறமையாகச் சித்தியடைவதற்கும் அடிப்படை இலக்கணஅறிவு மிகமுக்கியமாகின்றது.

மாணவர்களின் இத் தேவையை நன்குணர்ந்தவரும். கல்விவெளியீட்டுத்திணைக்களத்தில் தமிழ்ப்பாட மொழி நூல்களை நீண்டகாலமாக எழுதி அனுபவம் பெற்றவரும், தமிழ் மொழியில் மாணவர்க்குள்ள குறைகளையும் தேவைகளையும் நன்குணர்ந்தவருமான பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு. வே.) அவர்களால் எழுதப்பெற்றுள்ள அடிப்படை இலக்கணம் என்னும் இந்நூல் 9ஆம், 10ஆம்தரமாணவர்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையுமென்பதில் ஐயமில்லை.

இந்நூல் கல்வியமைச்சின் புதியபாடத்திட்டத்தில் உள்ள தமிழ் மொழிப்பாடத்துக்குரிய சிறப்பான அமிசமான அடிப்படைஇலக்கணப் பகுதியின் பொருட்கூறுகள் அனைத்தையும் உள்ளடக்கி மிகவும் அவதானத்துடனும், தர்க்கமுறையிலும், ஒழுங்கான அமைப்பு முறையிலும் சிறப்பாக எழுதப் பெற்றதாகும்.

தமிழ்மொழிப் பாடத்திட்ட விடயக்கூறுகள் அனைத்தையும் அடக்கியுள்ள இந்நூல் உதாரணங்கள் மூலம் மாணவர் எளிதில் இலக்கண நியதிகளை உய்த்து உணரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருஅலகின்இறுதியிலும் புதிய முறையில் ஆக்கப்பட்ட பயிற்சிகள் கொண்டது. இத்தகைய சிறப்பமிசங்கள் தமிழ் மொழி ஆசிரியருக்கும் தமிழ் மொழிகற்கும் மாணவருக்கும் பெருந்துணையாக அமையுமென்பது எனதுகருத்து.

யாழ்ப்பாணம் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலையினர் இந்நூலை அழகாகஅச்சிட்டு வெளியிட்டுள்ளனர்.

யோ. பெனடிக்ற்பாலன்

●

# சில்லாலை வைத்திய பரம்பரை

பத்துத் தலை முறை கண்ட இன்னாசித்தம்பி வைத்திய பரம்பரையைப் பற்றி அறியவும், அவர்களின் நானூறு ஆண்டு காலத்துக்கு மேலான வைத்திய சேவையை முற்றுமுழுதாகத் தெரிந்து கொள்ளவும் கூடிய வகையில் எழுதப்பட்டுள்ள 'காக்கும் கரங்கள், என்ற நூலைப் படிக்கும் போது, ஒரு நாவலைப் படிப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

சில்லாலை என்றால் அதன் பெருமை இன்று உலகளாவியதாக இருப்பதற்குக் காரணம், இந்த இன்னாசித்தம்பி வைத்தியப் பரம்பரையே!

சோழப் பெரு மன்னர் காலத்தில் இருந்து இந்த வைத்திய மரபு தொடர்ந்து வருகிறது என்பதனை யாழ் பல்கலைக் கழக உப வேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தனது அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளதைப் படிக்கும் போது இந்த வைத்தியப் பரம்பரையின் பெருமையை உணர முடிகிறது.

ஒன்பதாம் பரம்பரையில் வந்த வைத்திய சிரோன்மணி எமில் இன்னாசித்தம்பியும், அவரது மனைவி திருமதி றீற்றா இன்னாசித்தம்பியும், அவர்களது புதல்வரான இளைய இதயமான வைத்தியக் கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பியும் சில்லாலையில் ஒரே இடத்தில் இருந்து செய்யும் ஓர் பூர்வீக வைத்தியத்தை இன்னாசித் தம்பி வைத்திய நிலையத்தில் நாம் தரிசிக்கிறோம்

சித்த வைத்தியத்தின் அடிநாதமாக விளங்குபவர் தவ முனிவர் அகத்தியர்! அந்த வழியினை அடியொற்றி, இன்னாசித்தம்பி வைத்தியப் பரம்பரை ஆற்றி வரும் பணி அளப்பரியது.

''கண்டான் கரத்தைப் பிடித்தான்; கடிதினில் ஓர் பஸ்பம் உண்டாக்கித் தந்தான் உண்டேன் பிணி ஒளித்தோடியதே!',என்று முத்துக்குமாரு கவிராயரால் புகழ்த்து பாடப் பெற்ற இன்னாசித் தம்பி பரம்பரையின் புகழை அழகுற மாலையாகத் தொகுத்துத் தந்துள்ளார் வித்துவான் ச.அடைக்கலமுத்து என்ற அமுது.

வாழையடி வாழை என வந்த வரலாறு இலகு தமிழில் எழுதப்பட்டிருப்பது ஒரு கவர்ச்சி.


குழப்பமற்ற நேரானவைத்திய முறை இன்னாசித்தம்பி பரம்பரையினுடையது அதே போன்று வெள்ளை 'கிளேஸ்' தாளில் குழப்பமற்ற, தெளிவான, வரலாறாக இந்தப் பரம்பரையின் கதை எழுதப் பட்டிருக்கிறது!

அந்தக்காலத்தில், மேல் நாட்டு வைத்திய முறையில் கைதேர்ந்து புகழ்பெற்றவர்களாக இருந்தவர்கள் மானிப்பாய் கிறின் வைத்தியசாலை டாக்டர்கள்!

அங்குமாற்ற முடியாத சில நோய்கள் கூட சில்லாலை இன்னாசித்தம்பியினால் குணமாகியுள்ளன.

(12ம் பக்கம் பார்க்க)

# மையக்குறி



சண்முகம் பஸ் நிலையத்திற்கு வந்தபோது அது வெறிச்சோடிக்கிடந்தது.

நான்கைந்து மாதங்களுக்கு முன்தான் நகரமெங்கும் 'மேக்குறி' வெளிச்சங்களைப் போட்டிருந்தார்கள். தேர்தல் சமீபித்து வரும்போது இம்முறையும் தேர்தலுக்கு நிற்பதாக முடிவுசெய்த எம். பியின் தாராள சிந்தையினால் அந்த 'மேக்குறி' வெளிச்சங்கள் நகரத்தைப் பால்மயமாக ஆக்கிவைத்திருக்கின்றன.

சண்முகத்தோடு வந்தவர்கள் அங்குமிங்குமாகக் கலைந்து விட்டனர்.

பஸ் நிலையத்தின் அந்த அமைதியிலும், பால் வெளிச்சத்திலும்தான் அபேட்சகர்கள் பட்டிருக்கும் பாடுகள் தெட்டத் தெளிவாகத் தெரிந்தன.

ஒவ்வொரு அபேட்சகரின் படங்களின் மேலெல்லாம் வெவ்வேறு விதமான சித்திரவதைகள்.

மழுங்கச் சிரைக்கப்பட்ட மட்டசுத்தமான ஒரு அபேட்சகரின் முகத்தில் இராவணன் மீசை!

வழுக்கைத் தலையை உடைய ஒரு அபேட்சகர். அந்த வழுக்கைத் தலை மீது முடிபோலக் குந்தி இருக்கும் சாணிக்கும்பம்!

கண்ணாடி அணிந்திருந்த ஒரு அபேட்சகரின் திருமுகத்தை சினிமாப்படங்களில் வரும் முகமூடிக்கள்ளன் போன்று கறுப்பினால் மூடி அதன் கீழே ''பக்காத் திருடன்'' என்ற மை எழுத்து!

இப்படி எத்தனையோ விதங்களில்!

கட்டுப்பணம் கட்டிய நாளில் தொங்கவிடப்பட்ட சின்னங்கள் பொறிக்கப்பட்ட கொடிகள் வெளிறி, காற்றுக்கு அடியுண்டு சிலும்பலாகித் தூங்கும் பரிதாபக்கோலங்கள்!

சண்முகம் சற்றுவேளை ஓய்ந்து நின்று எல்லாவற்றையும் மாறி மாறிப்பார்த்தான்.

நான்கைந்து சொறிநாய்கள் ஒன்றை ஒன்று தாவிப் பிடித்து, பிய்த்துப்பிருண்டிப் பெருங் குரல் வைத்துக் கொண்டு உருண்டு புரண்டு கொண்டிருந்தன.

செம்மா தெருப் பெருங்குளத்தை நோக்கிப் பெரிதாகக் கட்டப்பட்ட வாய்க்காலை மூடிக் கொண்டிருந்த பிரயாணிகள் தங்குவதற்குகான மடத்துள் இரண்டு மூன்று தெரு நாம்பன்கள் மடத்துக் குந்துகளில் உரசி உரசித் தினவெடுத்துக் கொண்டிருந்தன.

பககத்தே இருந்த கறிக்கடை மண்டபத்துள் நூறு நாய்களுக்குமேல் சேர்ந்து பிரளயப்படுத்திக் கொண்டிருப்பது போன்ற பேரோசை எழுந்து சண்முகத்தைத் திடுக்குற வைத்துவிட்டது.

கறிக்கடைப் பொதுக்கக் கூசின் நாற்றம் பால்வெளிச்சத்தில் ஆடிப்பாடிச் சுதந்தரமாகவந்து அவன் மூக்கை துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது.

சற்றுவேளை தான்! அதற்குள் சண்முகம் கிளம்பிவிட்டான்.

அவன் இனித்தாவடிக்குப் போகவேண்டும்; உறியில் தனக்காகத் தொங்கும் உணவை உண்ணவேண்டும்; படுத்துத்தூங்க வேண்டும்; விடிவதற்கிடையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு வேலைசெய்யும் புடைவைக்கடைக்கு வந்து முதலாளி வருவதற்கு முன் காத்திருக்க வேண்டும்!

சண்முகம் இப்போது மனோகராத்தியேட்டர்ச் சந்திப்புக்குவந்து விட்டான். சந்திப்புக்குச் சற்றுத்தொலைவில் வந்தபோதே அங்கு நான்கைந்து பேர்களின் நடமாட்டம் தெரிந்தது.

சந்திப்புக்குப் பக்கமாக உள்ள நாவலர் பாடசாலையும் நாளையின் வாக்களிப்பு நிலையத்தில் ஒன்று என்பது அவனுக்குத் தெரியாது

சந்திக்குச் சற்று முன்பாக இருந்த ஒருகடையைத்திறந்து ஒரு அபேட்சகரின் படங்களை ஒட்டி அதை அழகுபடுத்திக் கொண்டிருந்தார்கள் சிலர்.

சந்திக்கு அப்பால் இருந்த தேநீர்க்கடை விறாந்தையை ஒருபுறம் அடைத்து கிடுகுகளால் மறைத்து அதை வேறொர் அபேட்சகரின் படங்களால் அழகுபடுத்திக் கொண்டிருந்தார்கள் இன்னும் சிலர்.

மேற்குப்புறம் போகும் ரோட்டில், தியேட்டரின் கலரிடிக்கற் விற்கும் இடத்திற்கு நேராக இருந்த வெறுந்துண்டுக்காணியில் பந்தல் போட்டுக் கொண்டிருந்தார்கள் சிலர். அது மூன்றாவது அபேட்சகரின் பந்தலாகத்தான் இருக்கவேண்டும்!

எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டே சண்முகம் வந்து கொண்டிருந்தான். அவன் தாவடிக்குப் போய்ச் சேரவேண்டும்!

அவன் தட்டாதெருச் சந்திக்குவந்து விட்டான்.

சந்திப்பில் ஜனக்கூட்டமாக இருந்தது. சொல்லிவைத்தாற் போன்று சண்முகம் சந்திப்புக்கு வரும்போதே கல்லுகள் அங்குமிங்குமாகப் பறக்கத் தொடங்கின.

ஒரு கூட்டம் வடக்காகவும், மறு கூட்டம்தெற்காகவும் பின்வாங்கிப் பின்வாங்கிக் கொண்டே கற்களை வீசிக் கொண்டிருந்தன.

நடுவீதியில் நான்கைந்து கொடிகள் கிழிந்து கிடந்தன. அவைகளுக்குக் கட்டியிருந்த கயிறுகளும் இழுபட்டுக்கிடந்தன.

சண்முகம் கணத்தில் விஷயத்தை அனுமானித்துக் கொண்டு விட்டான்.

''அபேட்சகர்களின் கொடிகள் அறுப்புத் திருவிழா'' என்று அவன் அடிமனதுக்குள் சொல்லிக்கொண்டான். அதற்குப்பின் கல்லுக்கு அவன் தப்பியாகவேண்டும்! அவன்போக வேண்டியது வடக்குப்புறம்! அந்தப்பக்கம் சென்றால் தெற்குப்புறத்துக் கோஷ்டியான் வாறான்'' என்று கொன்று விடுவார்கள்.

அவனுக்கு ஒரு யோசனை வந்தது.

நல்லூருக்குப் போகும் கிழக்குப் புற ரோட்டால் திரும்பி நீராவியடிச் சந்திக்குச் சென்று விட்டால் பின்பு வடக்காகத் திரும்பி, கொக்குவில் ஸ்ரேசன் ரோட்டில் மிதந்து அன்னங்கை வீதியால் கோண்டாவிலுக்குச் சென்று திரும்பி மீண்டும் கே.கே.எஸ் ரோட்டைப் பிடித்து விடலாம் என்ற எண்ணம்.

சண்முகத்திற்கு நெஞ்சு இடித்தது. அன்னங்கை ரோட்டில் வெளிச்சம் இல்லை என்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும் பரவாயில்லை. அவன் துணிந்து விட்டான்.

அவன் அன்னங்கை வீதிக்கு வந்த போது இருட்டுத்தான் மிஞ்சி நின்றது.

சற்று வேளை இருட்டுக்குள் நடந்தான்.

பின்பு நேராகத் தொலைவில் வெளிச்சம் தெரிந்தது.

அது 'பெற்றோமாக்ஸ்' வெளிச்சம்.

அன்னங்கை சைவப் பள்ளிக் கூடத்திற்கு முன்னால் நாளைய தேர்தல் திருவிழாவுக்காகப் பந்தல் அமைக்கிறார்கள்; வேறு அபேட்சகரின் படங்களை ஒட்டுகிறார்கள்!

இப்போது சண்முகம் தனது தொகுதிக்குள் வந்து விட்டான்.

தனது தொகுதி அபேட்சகர்கள் இம்முறை அதிகம் இல்லை.

பழைய எம்.பி. ஒருவர், அவருக்கெதிராகப் புதிதாக இன்னொருவர், அவ்வளவுதான்! அந்த இன்னொருவர் முன்பு மூன்று தடவைகள் கேட்டுத் தோற்றுப் போனவராக இருந்தாலும் அவர் பாராளுமன்றத்திற்குப் புதிதாகப் போவதற்குத்தான் இம்முறையும் கங்கணம் கட்டி நிற்கிறார்.

இந்த இருவரில் யாருக்கு இம் முறை புள்ளடி போடுவதென்று சண்முகம் தீர்மானிக்கவில்லை.

''எட தம்பி, அவன் பாவி நெடுகக் கேட்டுக் கேட்டு நொந்து போனான் மோனை! அவனுக்குத்தானடா போட வேணும்!''

-இப்படித் தாயானவள் பல தடவைகள் அவனுக்குச் சொல்லி விட்டாள்.

''சும்மா உந்தப் பேய் வேலையிலை ஈடுபடாமை உங்கடை உங்கடை அலுவல்களைப் பாருங்கோ.''

இப்படி அவனின் தம்பி கந்தசாமி கடந்த மாதம் இராமநாதபுரத்திலிருந்து வந்திருந்த போது கூறிச் சென்றிருக்கிறான்.

சண்முகத்திற்கு தம்பி கந்தசாமி சொன்னதுதான் சரியெனப் பட்டிருக்க வேண்டும்! இன்று வரை அவன் புள்ளடி போடப் போவதில்லை என்றுதான் தீர்மானித்திருக்கிறான். ஆயினும் முடிந்த வரை தேர்தல் கூட்டங்களை அவதானிக்க அவன் தவறவில்லை.

எப்படியோ சண்முகம் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டான். வரிச்சுமட்டை ஊடாகக் கொட்டிலுக்குள் அரிக்கன் லாம்பு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. நேரம் மணி இரண்டுக்கு மேலிருக்கும்!

இந்த வேளையில் தாய் என்றுமே லாம்பை இப்படி வெளிச்சமாக வைத்திருந்ததில்லை!

வெளிப் படலையைத் திறந்து கொண்டு முற்றத்திற்கு வரும் போதே 'அம்மா!' என்று குரல் வைத்தான்.

''அம்மா நித்திரை அண்ணை!

இப்படி உள்ளேயிருந்து ஒரு குரல் எழுந்தது.

அது அவன் தம்பி கந்தசாமியின் குரல்.

''கந்தசாமியே? எப்படாம்பி வந்தனீ?''

சண்முகம் மொட்டையாகவே வழமையான கேள்வியைக் கேட்டான்.

''நான் கிளிநொச்சி வசுவிலை பட்டணத்துக்கை வந்திறங்கி இஞ்சாலை பத்து மணி வஸ்சிலை வாறன்; நீ எங்கையண்ணை இவ்வளவு நேரமும் போட்டு வாறாய்?''

## 3

கந்தசாமி கேட்டான்.

'பட்டணத்துக்கைமுனியப்ப கோயிலடியிலை கூட்டமொண்டு நடந்தது அதுதான்......''

சண்முகம் பேசி முடிக்கவில்லை-

''உனக்கும் இன்னும் உந்தப் புள்ளடி போடுற ஆசை விட்டுப் போனதில்லை. இஞ்சை அம்மா, அந்தாள் நெடுகக் கேட்டுத் தோத்துப் போச்சாம். தான் ஒரு துண்டு போட்டுத் தன்ரை துண்டாலை வெல்ல வைக்கப் போறாவாம்! ம்...... என்னெண்டாலும் செய்து முடியுங்கோ! முந்தி முந்தித் துண்டெடுத்துக் கொண்டு போனவையெல்லாம் படைச்சுப் போட்டினம்! நீ பின்னை சாமஞ்சாமமாய்த் துண்டெடுக்கிற வேலை பாக்கேக்கை அவ அம்மா அப்

(12ம் பக்கம் பார்க்க)

## தொடர் நவீனம்

### நகைச்சுவைச் சித்திரம்



# தேங்காய்ச் சாக்கும் கடுகதி பஸ்ஸும்

கா. யோகநாதன்

எட்டு ரூபாவுக்கு முட்டுக்காய் வாங்கி எத்தனைகாலம் சமாளிப்பது என்று தினமும் காலையில் மனைவியின் நச்சரிப்பைக் கேட்டுப் பொறுமை இழந்துவிட்டார் சுந்தரம் மாஸ்டர். அன்று அரைநாள் லீவு எடுத்துக் கொண்டு ஐம்பது தேங்காய் வாங்கிவர அதிகாலை முதல் பஸ்ஸில் கொடிகாமம் சந்தைக்குப் புறப்பட்டுவிட்டார். நாலு ரூபா வீதம் வாங்கிய தேங்காயை சாக்கொன்றில் போட்டுக் கட்டிவிட்டு, பஸ்ஸுக்காகக் காத்து நின்றார். நேரம்போய்க் கொண்டிருந்தது. மத்தியானம் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும். அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார்.

கடுகதி பஸ் ஒன்று வந்தது. 'யாழ்ப்பாணம்' என்று சொல்லி ஏறிக் கொண்டார் மாஸ்டர். மணி பன்னிரண்டு. தேங்காய்ச்சாக்கை வீட்டில் போட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும்.

பஸ் நாவற்குழியைத் தாண்டிவிட்டது.

மாஸ்டர் மடத்தடியில் இறங்க வேண்டும். இப்பவே தயார் செய்தால்தான் சாரதிக்குச் சொல்லி மடத்தடியில் இறங்க முடியும்.

பஸ், கச்சேரியடியில் நின்றது. சிலர் இறங்கினார்கள். மூன்று இளம் பெண்கள் ஏறி, முன்னால் போய்க்கொண்டிருந்தார்கள். சாரதி கண்ணாடியில் குனிந்து பார்த்து 'சேட் கொல'ரை இழுத்துவிட்டுக் கொண்டார்

''அடுத்து யாழ். பஸ்நிலையத்தில்தான் நிற்கும். இடையில் நிற்காது''-

இது கண்டக்டரின் குரல்.

மாஸ்டருக்கு அந்தக்குரல் அதிர்ச்சியைக் கொடுத்தது. பஸ் புறப்பட்டது' மாஸ்டர் இடித்துத் தள்ளிக்கொண்டு சாரதிக்குக் கிட்டப்போய்விட்டார்.

''தம்பி பள்ளிக்குப் போக வேண்டும். தேங்காய்ச்சாக்கு இருக்கு. மடத்தடியில் கொஞ்சம் நிறுத்துவீரா?'' என்றார் மாஸ்டர்.

''ஐயோ இப்பவே ஒருமணி நேரம லேட் யாரும் புகார் செய்தால் என் வேலைக்குப் பிழை அடுத்தது பஸ்நிலையம் தான்'' - இது சாரதியின் பதில்.

பஸ்நிலையம் போய் திரும்பவும் கச்சேரி பஸ்ஸில் வந்து மடத்தடியில் இறங்கி வீட்டுக்குப்போய், பின்னர் பள்ளிக்குப் போக முடியுமா, என்பது மாஸ்டரின் சிந்தனை

மடத்தடியைத் தாண்டி பஸ் சென்றபோது மணி அடித்துக் கேட்டது கச்சேரியடியில் ஏறிய மூன்று இளம்பெண்கள் கலகலவெனச் சிரித்துப்பேசிக் கொண்டு முன்பக்கம் சென்றனர் சாரதி கண்ணாடியில் நெற்றியைச் சுளித்துப் பார்த்தார் 'சின்னக் கடையில் இறங்க வேண்டும்' என்றாள் ஒரு யுவதி சிரித்துக்கொண்டு.

பஸ்ஸின் வேகம் குறைந்தது. பஸ் சின்னக்கடையில் நின்றது அந்த மூன்று இளம் பெண்களும் சின்னக்கடையில் இறங்கினார்கள். மாஸ்டர் கோபக்கனல் கக்கினார். சாரதியைப் பேசினார். 'பஸ் பிறேக் டவுண் எல்லாரும் இறங்குங்கோ'' என்றார் சாரதி.

# இனவாத அரசியலின் பிறப்புக்காலம் 1956!

கலாநிதி வி. நித்தியானந்தன்
[வணிகத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்]

## 1956 தொடக்கத்திலிருந்துதான் தமிழ்மக்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிபோயின

## தமிழர் வர்த்தகம் வீழ்ச்சியடையத் தொடங்கியது

**1956** ஆண்டு, இலங்கை வரலாற்றில் ஒருபிரிநிலைக் கோடாகப் பல காரணங்களினாற் கொள்ளப்படுகின்றது. சுதந்திரமடைந்த நாள் முதல் இதுவரை பதவியிலிருந்த ஐக்கிய தேசியக்கட்சி தோற்கடிக்கப்பட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதானமாகக் கொண்ட கூட்டரசாங்கம் பதவி ஏற்கின்றது. இக்கட்சி இதுவரை இல்லாதபடி, இன, மொழி, கலாசார உணர்வுகளைத் தனக்குப்பக்கபலமாகக் கொண்டு வெற்றியீட்டியிருந்ததால், சிங்கள, பௌத்த கலாசாரத்தைப் புனருத்தாரணம் செய்வதைத் தனது முக்கிய நோக்கமாகக் கொண்டது. இவ்வகையில், 1956ம் ஆண்டு சாதாரண குடிமக்களின் அபிலாஷைகள் பூர்த்திசெய்யப்பட முற்பட்ட காலப்பகுதியின் தோற்றம் என வர்ணிக்கப்பட்டது. ஆனால் மறுபுறமாக, இதுவே தமிழ்மக்களின் உரிமைகள் சிறிது சிறிதாகப் பறிக்கப்படும் செய்முறையை ஆரம்பித்து வைத்த இனவாத அரசியலின் பிறப்புக்காலம் எனவும் வர்ணிக்கப்பட முடியும். அதே கருத்தில், தமிழினத் தேசியவாதத்துக்கு வித்திடப்பட்ட காலப்பகுதி எனவும் இதனைக் கொள்ளமுடியும். நாம் கட்டுரையின் தொடக்கத்திற் குறிப்பிட்ட பாரபட்சத்தன்மை வாய்ந்த அரசாங்கக் கொள்கைகள் பலவும் 1956 முதல்தான் படிப்படியாக அமுலுக்கு வருகின்றன. இதே காலகட்டம் முதல் அந்நியச் செலாவணி நெருக்கடி நிலையும் கூர்மையடைந்து அரசாங்கம் பொதுவாகப் பொருளாதார அலுவல்களையும், குறிப்பாக இறக்குமதியுடன் தொடர்புபடும் பொருளாதார நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்த முற்பட்டவிடத்து ஏனைய (இனவாதக்) கொள்கைகளின் தாக்கம் பொருளாதாரக் கொள்கை மீதும் படிவதுதவிர்க்க முடியாததாயிருந்தது.

எனினும், ஏற்கனவே குறிப்பிட்டபடி, பொருளாதாரக் கொள்கை நேரடியாக இனச் சார்பான முறையில் வகுக்கப்படாத காரணத்தினால் அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகள் யாவுமே தமிழ் மக்களுக்குப் பாதகமாக அமையவில்லை. அரசாங்க பொருளாதாரக் கொள்கைகள் மறைமுக நிலையில் தமிழ் மக்களின் மீது ஏற்படுத்திய தாக்கம் இடையிடையே அவர்களுக்கு நன்மையையும் கொண்டு வந்திருந்தது. ஆனால், அது நன்மையாக முடிந்தாலென்ன தீமையைக் கொண்டு வந்திருந்தாலென்ன, அதன் இறுதி விளைவு தமிழ்மக்களின் தேசியவாதம் வலுப்பெறுவதாகவே அமைந்தது. இது எவ்வாறு ஏற்பட்டது.

1956 க்குப் பின்பு அந்நியச் செலாவணி நெருக்கடி நிலை தீவிரமடைந்து அந்நியச் செலாவணியை மீதப்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு ஏற்பட்ட போது அத்தியாவசியமற்ற நிலையில் இறக்குமதி செய்யப்பட்டுக் கொண்டிருந்த பலவேறு கைத்தொழிற் பொருட்கள் நோக்கியே முதலில் அதன் கவனம் திரும்பியது. ஆகவே அத்தியாவசியமற்றவை என்று அரசாங்கம் கருதிய பல நடுத்தர கைத்தொழிற் பொருட்கள், முடிவுப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதியை அது முற்றாகத் தடை செய்தது அல்லது இறக்குமதியாகிய அளவை மட்டுப்படுத்திக் கொண்டது. எனினும் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்குள்ளாகிய கைத்தொழிற் பொருட்கள் பொதுவாக அத்தியாவசியமற்றவை எனக் கருதப் பட்ட போதும், அவற்றிற் பல மக்கள் தமது நாளாந்த வாழ்க்கையிற் பழக்கப்பட்டிருந்த அவசியமான பொருட்களாகவே விளங்கின. இவை அரை குறை அத்தியாவசிய அல்லது அரை குறை ஆடம்பரப் பொருட்களாகக் காணப்பட்டன எனலாம். எனவே இவற்றின் இறக்குமதியை அரசாங்கம் திடீரெனத் தடுத்தமை அல்லது மட்டுப் படுத்தியமை மக்களைப் பல வசதியீனங்களுக்கு உட்படுத்துவதாயிருந்தது. மேலும் அவற்றின் பாவனையை அரசாங்கம் நிரந்தரமாகத் துண்டிக்கவும் முடியவில்லை. ஆகவே இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களைச் சிறந்த முறையில் நாட்டு மக்கள் மத்தியில் விநியோகம் செய்வதும் இறக்குமதி செய்வதினின்றும் முற்றாக நிறுத்தப்பட்ட பொருட்களை, ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியினுள்ளாவது உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதும், அதாவது இறக்குமதியைப் பதிலீடு செய்வதும் அரசாங்கத்தைப் பொறுத்தவரை அவசியமாக இருந்தன. இவ்வாறான நியாயமான விநியோகம், இறக்குமதிப் பதிலீடு என்ற செய்முறைகள் அரசாங்கத்திடமிருந்தே ஊற்றெடுக்க வேண்டியிருந்தமையால் அவற்றிற்கு வசதியளிக்கும் நோக்கத்துடன் அது பல வர்த்தக கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களை நிறுவிக் கொண்டது அதே நேரத்தில் இதுவரை தனியார் வசமிருந்த பல பிரதான பொருளாதார நடவடிக்கைகளைத் தேசிய மயமாக்கித் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கும் அது நடவடிக்கை எடுத்தது. போக்குவரத்து, வங்கிகள், காப்புறுதி, எண்ணெய்விநியோகம் என்பன இவ்வாறு தேசியமயமாக்கப்பட்டவற்றுள் முக்கியமானவை. சுருக்கமாகக் கூறின் இதுவரை தனியார் துறையின் பொறுப்பிலிருந்த இறக்குமதிப் பக்கத்தின் பல நடவடிக்கைகளை அரசாங்கம் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டது மொத்த வர்த்தகம், சில்லறை வர்த்தகம் என்பனவும் தடுக்கப்பட்ட பொருட்களின் உற்பத்தியும் இவற்றிற் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

எனினும் இவற்றை அரசாங்கம் முற்றாகவே தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டிருந்தால் தமிழ் மக்களின் மீது அது அதிக பாதிப்பை ஏற்படுத்தியிராது. அது நாட்டு மக்கள் முழுப்பேரையும் ஓரளவிற்காவது பொதுவாகவே பாதித்திருக்கும். ஆனால் மேற்குறித்த நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் அரசாங்கம் ஒரு பகுதியைத்தான் எடுத்துக் கொண்டு மறு பகுதியைத் தனியாருடைய கைகளில் விட்டிருந்தது. இவற்றுள் முக்கியமாகத் தடுக்கப்பட்ட பொருட்களின் உற்பத்தி அரசாங்கம் பற்றி கையாண்ட கொள்கை கவனிக்கத்தக்கது. தடுக்கப்பட்ட கைத்தொழிற் பொருட்களுள் அடிப்படைத்தன்மை வாய்ந்த முதற்தர நடுத்தர நிலைகளிலான சில பொருட்களின் உற்பத்தியைக் கூட்டுத்தாபனங்களின் மூலம் தான் பொறுப்பேற்றுக் கொண்டு, நேரடி நுகர்வு மட்டத்திற் காணப்பட்ட பல முடிவுப் பொருட்களைத் தனியார் வசம் விட்டு விட்டது. எனினும் தனியார் இவற்றை அரசாங்கத்தின் ஆதரவின்றி உற்பத்தி செய்ய முடியவில்லை. இறக்குமதிக் கட்டுப்பாட்டின் வரி பாதுகாக்கப்பட்ட உள்நாட்டுச் சந்தையொன்று உருவாக அரசாங்கம் வகை செய்தது மாத்திரமன்றி மூலதன வசதி' வரி விடுதலை போன்ற அதன் சலுகைகள் இன்றிப் புதிய கைத்தொழில்கள் தம்மைத் தாபித்துக் கொள்ளவும் முடியவில்லை. இவற்றைவிட முக்கியமான வகையில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களிலேயே இவை உற்பத்திக்கு தங்கியிருக்க வேண்டியிருந்ததால் அரசாங்கம் மூலப் பொருட்களின் இறக்குமதி பொறுத்து விதித்த அனுமதிப் பங்குகள், அனுமதிப் பத்திரங்கள், கட்டுப்பாடுகள் என்பவற்றுக்குட்பட்டே இவை இயங்க வேண்டியும் இருந்தன. அத்துடன் விலைக் கட்டுப்பாட்டின் மூலம் இக்கைத்தொழில்கள் உழைக்கும் லாபத்தையும் அரசாங்கம் ஒழுங்குபடுத்த முடிந்தது. ஆகவே தொகுத்து நோக்கின் அரசாங்கத்தின் நேரடியான கட்டுப்பாட்டுக்கு இவை உட்படாத போதும் இவற்றை மறைமுகமாகக் கட்டுப்படுத்தக் கூடிய சக்தியை அரசாங்கம் பெற்றிருந்தது. அரசாங்கத்தின் ஆதரவின்றி யாரும் கைத்தொழில் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடவோ அல்லது வர்த்தக வணிக நடவடிக்கைகளை மேற் கொள்ளவோ முடியவில்லை.

### தமிழர் நிலைமை மேலும் பலவீன

1956 முதல் படிப்படியாக மலர முற்பட்டிருந்த மேலே விளக்கிய பொருளாதாரச் சூழலை அப்போது நாட்டில் நிலவியிருந்த அரசியல் முறையுடன் இணைத்துப் பார்ப்பின் அது பெரும்பான்மை மக்களுக்கு வாய்ப்பானதாகவும், பொதுவாகச் சிறுபான்மையினருக்கும் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கும் வாய்ப்பற்ற ஒன்றாகவும் விளங்கியதைக் காணலாம். அரசியல் முறையானது அரசியற் கட்சிகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டு மக்களிற் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெறும் கட்சி அரசாங்கத்தை அமைப்பது என்பதாக இருந்தது. ஆகவே சிங்கள மக்கள் மத்தியில் ஆதரவு பெற்ற ஒரு கட்சியே அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டது, மறுபுறமாக நோக்கின் அரசாங்கம் நேரடியாகச் சிங்கள மக்களின் ஆதரவில் தங்கியிருந்ததெனலாம். இந்நிலையில் அரசாங்கத்திடம் சலுகைகளை எதிர்பார்த்து நிற்பதில் தமிழ் மக்களை விட சிங்கள மக்கள் எப்போதும் சாதகமான ஒரு நிலையிலேயே காணப்பட்டார்கள். இத்தகைய ஒரு கட்டம் உருவாகிய 1956 முதல் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் அரசாங்கத்தில் முற்றாக இல்லாமற் போனமை தமிழ் மக்களின் நிலைமையை மேலும் பலவீனப்படுத்தி இருந்தது.

### வர்த்தகத் தாக்கம்

புதிய சூழ்நிலையில்' உருவாகிய பொருளாதாரக் கொள்கை தமிழ்மக்களின் மீது ஏற்படுத்திய பாதிப்புக்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்வோமாயின், முதற்கண் அவர்களுடைய வர்த்தகத்தின் மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிப்பிடலாம். விவசாயம், அரசாங்கசேவை என்பவற்றுக்குப் புறம்பாகத் தமிழ்மக்களின் பிரதான பொருளியல் நடவடிக்கையாக வர்த்தகமே விளங்கியது. சில்லறை வர்த்தகத்தில், நாடுபூராவும் அவர்கள் பரவலாக ஈடுபட்டு இருந்ததுடன், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தின் ஒரு பகுதியையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இந்தியா, பாகிஸ்தான் என்பவற்றுடனான ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தின் பெரும்பகுதி இலங்கை இந்தியா ஆகிய இரு நாடுகளையும் சேர்ந்த தமிழரின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது. ஆனால் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் (C.W.E.) ஏற்படுத்தப் பட்டதுடனும், அரசவர்த்தகக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டதுடனும் வெளிநாட்டு மொத்த இறக்குமதி வர்த்தகம் படிப்படியாக இந்த இருநிறுவனங்களையும் சென்றடைந்தது. குறிப்பாக, இந்தியா, பாகிஸ்தான் என்பவற்றுடனான வர்த்தகம் தமிழ் வர்த்தகரை விட்டுநழுவி இந்நிறுவனங்களை அடைந்தது அதே, போல, சில்லறை வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தவர்களும் மொத்தவிற்பனை நிறுவனத்தின் தோற்றத்தினாற் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஏனெனில், இந்நிறுவனம் மொத்த வர்த்தகத்தில் தனியுரிமையை நிலை நாட்டிக் கொண்டது மாத்திரமன்றி' நகரம்முதல் கிராமம் வரை நிறுவப்பட்டிருந்த கூட்டுறவுக் கடைகளினூடாகச் சில்லறை வர்த்தகம் நோக்கியும் தனது நடவடிக்கைகளை விஸ்தரித்துக் கொண்டது. உப உணவுப் பொருட்கள் போன்ற சில பண்டங்களை விற்பனை செய்வதினின்றும் தனியார் முற்றாகவே தடுக்கப்பட்டனர். அந்நியச் செலவணி நெருக்கடி நிலை தீவிரமடைந்து இறக்குமதிக் கட்டுப்பாடும் இறுக்கமடைந்து சென்றதற்கேற்ப இவ்வாறு தடுக்கப்பட்ட பொருட்களின் பட்டியலும் நீண்டு கொண்டே சென்றது.

ஆனால் மொத்த, சில்லறை வர்த்தகத்தில் ஏற்பட்ட மேற்கூறிய பாதிப்புநிலை தனியே தமிழ் வர்த்தகரையன்றிச் சிங்கள, முஸ்லிம்சமூகங்களைச் சேர்ந்தவர்களையும் பொதுவா

(10ம் பக்கம் பார்க்க)

வெளிநாடு செல்வதற்கு
★ விமான டிக்கட்
★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
★ விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்
(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)
இன்றே நாடுங்கள்
மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.
8, மருத்திதுறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

# பாவர், பாம்புக்குத்தான் எத்தனை பகைவர்!

## அதன் அழகு கடவுளின் கொடை!

★ க. சிற்றம்பலம்
விஷ வைத்திய நிபுணர்

லகில் இருபத்தையாயிரத்திற்குமேற்பட்ட பாம்பினங்கள் உண்டெனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆயினும் எமது இலங்கையில் கிட்டத்தட்ட 300க்குக் குறைவான பாம்பினங்களே இருப்பதாகக் கணிக்கப்படக்கூடியதாக இருக்கிறது. இவற்றில் தரையில் வாழ்வன, மரத்தில் வாழ்வன, நீரில் வாழ்வன, நீரிலும் நிலத்திலும் வாழ்வனவாக இருக்கின்றன. நிலத்தில் வாழும் பாம்புகளில் அநேகமானவை, பற்றைகள், செடிகொடிகளுக்குள் மறைந்து வாழ்கின்றன. ஆனால் புற்றுக்குள் வாழும் பாம்புகள், அந்தப் புற்றுக்களை தாங்களே ஆக்கவில்லை. கறையான், எலி, முயல் போன்ற பிராணிகள், தாங்கள் வாழ அமைத்த வீட்டுக்குள் அழையா விருந்தினரான பாம்புகள் குடிபுகுந்து அவற்றையே தனது பாதுகாப்பான உறைவிடமாகக் கொண்டுள்ளன. அப்புற்றுக்குள்ளேயே முட்டை இட்டும் குஞ்சு பொரித்தும், குட்டியீன்றும் வாழுகின்றன பாம்புகளில் அதிகமானவை முட்டை மூலமே இனப்பெருக்கம் செய்கின்றன. ஒருசில பாம்புகளே குட்டி ஈனுகின்றன.

### பாவம்

### இந்தப்பாம்புகள்

விரியன் பாம்பு சூல் கொண்டு குட்டிகளை ஈன்றதும் மடிந்துபோகின்றது. குட்டிகள் உடனேயே இரைதேடவும், பாதுகாப்பான இடத்தைத் தேடிவாழவும் தலைப்பட்டுவிடுகின்றன. அந்த நேரங்களில் அவற்றுக்கு உயிராபத்துவந்து அழியவும் செய்கின்றன. இவற்றுக்குப் பகைவர்களாக மயில், கோழி, செண்பகம், பருந்து முதலிய பறவைகளும் கீரி, பன்றி, ஓநாய், குரங்கு போன்ற மிருகங்களும், இடிமுழக்கம், மின்னல், ஆற்று வெள்ளம், நெருப்புப்போன்ற இயற்கைச் சக்திகளும், மனிதர்களும் அமைந்திருப்பதைக் காணக் கிடக்கின்றது. இவ்வளவு பகைவர்களிடமிருந்து தப்பி மறைந்து வாழ்ந்தாலும் தன்னினமான பாம்புகளால் பாம்புகளுக்கே அழிவு காத்திருக்கிறதே. நாகபாம்புகள் புடையன் பாம்புகளை விழுங்குவதை ஆராய்ச்சி மூலம் நான் கண்டுள்ளேன்.

இப்படியாக இயறகையாகவே பாம்பினங்கள் அழிவுப் பாதையில் செல்கின்றன அப்படியிருந்தும் மக்கள் அதன் கொடிய விஷம் காரணமாக ஏற்படும் பயத்தினுல் பாம்பை வெறுக்கின்றனர். பாம்பு என்றவுடன் எல்லாவகைப் பாம்புகளையுமே வெறுத்து அவற்றைக் கண்டதும் அடித்தோ, சுட்டோ கொல்கின்றனர். காரணம் பாம்பிலுள்ள அற்ப விஷம்தான் பாம்பினங்களிலுள்ள பெரிய நன்மைகளும், பயன்பாடுகளும் இயற்கையின் அழகுச் செறிவும், வண்ண வடிவத் தோற்றங்களும், புள்ளிகளும், கோடுகளும் பல நிறங்களில் அவற்றின் உடல் அமைப்புக்களும் செதுள்களின் செறிவில் அமைந்த இயற்கை அழகும், அவை வளைந்து வளைந்து ஊர்ந்து செல்லும் பொழுது ஏற்படும் எழில் தோற்றமும், பலநிற வண்ணங்கள் அமைந்த முத்திரை வடிவங்களும் ஓவிய உணர்வுடன் கலா ரசிகர்களும் இயற்கையின் எழிலையும் ஆண்டவனின் அற்புதமும், விசித்திரமும் நிறைந்த படைப்பின் பயன்பாடுகளையும். தன்னை மறந்து ரசிக்கும் ஓவிய உணர்வுள்ளவர்களைக் கவர்ந்தே தீரும்.

எத்தனையோ சித்தர்களும் புலவர்களும் பாம்பின் அழகுத் தோற்றத்தை ரசித்துப் பாடியுள்ளார்கள். பாம்பாட்டிச் சித்தரின் பாடல்கள் இயற்கையின் எழிலை இயம்பி நிற்கின்றன. நாகபாம்பின் நடனத்தை ரசித்த அவர் பாடுகிறார். அவரின் பாடல்கள் இலக்கிய நயமும் பண்ணிசையும் அமைந்தவை. பரதநாட்டியப் பாணியுடன், படிப்போர் உள்ளத்தை இன்ப உணர்வையும் தெய்வீக தொடர்பையும் புராண இதிகாசக் கதைகளின் வரலாற்று விளக்கங்களையும் தருபவை

### சமயங்களில்

### பாம்பு

வேதகாலந் தொடக்கம், புராண இதிகாச வரலாற்றுக் காலம்வரை சமயங்களின் வரலாறுகளில் பாம்புகள் பின்னிப் பிணைந்து ஊர்ந்து செல்வதைக் காணலாம். யமுனை நதியின் மடுவிலே காளியன் என்னும் பாம்பின் தொல்லைகளால் துன்பப்பட்ட சகல ஜீவராசிகளையும் காப்பாற்ற கண்ணன் 'காவியமர்த்தனம்' செய்து அதாவது காளியன் என்ற நாகத்துக்கு மேல் நடனமாடி நாகத்தின் கொடுமையை நீக்கிய புராணவரலாறுகளைக் காணலாம். திருப்பாற்கடலைக் கடைவதற்கு வாசுகி என்னும் பாம்பு கயிருகப் பாவிக்கப்பட்டதாக வர்ணிக்கப்படுகின்றது. திருப்பாற்கடலில் பாம்பின்மீது மகாவிஷ்ணு பள்ளிகொள்ளும் காட்சி வர்ணிக்கப்பட்டுள்ளது. சிவபெருமானின் கழுத்திலும் பாம்பு மாலையாகக் காட்சியளிக்கிறது.

### கிறிஸ்தவ

### வேதத்தில்

கிறிஸ்தவ வேதத்தில் ஆதாம் ஏவாள் கதையில் பாம்பின் தொடர்புகள் கூறப்பட்டிருப்பதைக் காணக்கிடக்கின்றது.

வேதசாசனத்திலும் கூட 'விரியன் பாம்புக்குட்டிகளே விலகிப் போங்கள்' எனப் பாம்பின் வகையில் கொடிய விஷமுடைய பாம்பை உதாரணம் காட்டப்பட்டுள்ளது.

பாம்பு வழிபாடுபற்றிப் பௌத்த நூல்களிலும் கதைகள் பல உண்டு. புத்தபிரான் ஏழுதலைப் பாம்பின்படத்தின் கீழ் அமர்ந்திருப்பதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இப்படியாக பாம்புகளுடன் சமயங்களும் பின்னிப்பிணைந்து செல்வதைக் காணக்கிடக்கின்றது.

### இதிகாசங்களில்

### பாம்புகள்

மகாபாரதத்தில் துரியோதனன் பாம்புக் கொடியோனுக இருந்தமையும் கன்னனிடம் நாகஸ்திரம் அமைந்தமையும் தெரிந்ததே இப்படியாகப் புராண இதிகாசங்களைப் பல பாம்புகளால் அலங்கரித்துச் செல்வதைக் காணலாம். இலக்கியங்களிலும் பாம்புகள் தம் பங்கைச் செலுத்தியுள்ளமையை நளவெண்பாமூலம் அறியலாம். இப்படியாக மக்களின் வாழ்விலும், செயலிலும், சிந்தனையிலும், கற்பனையிலும், காவியத்திலும், ஓவியத்திலும் பாம்புகள் நடமாடுகின்றன இக்காட்சிகளில் பயமும் பக்தியும் பக்குவமாகச் செயல்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

உலக வரலாற்றிலேயே பாம்புகள் சமயத்துடனும் இலக்கியத்துடனும் கலந்து காட்சியளிப்பதைக் கிரேக்க, பபிலோனிய, சிரிய வரலாறுகள் காட்டுகின்றன. இவ்வரலாறுகளில் பாம்புகளை வணக்கத்துக்குரியனவாக மக்கள் மதித்துள்ளார்கள் எனக்கணிக்கக்கூடியதாகவுள்ளது. குறிப்பாகக் கூறப்போனுல் நாகபாம்பை வணங்கும் வழக்கம் பழைய காலந்தொடக்கம் உலகமெல்லாம் காணப்பட்டதாக வரலாறுகள் கூறுன்கின்றன.

இப்படியாகப் பண்டு தொட்டு இன்றுவரை மக்களுடன் தொடர்புடைய அழகுப் பிராணியான பாம்பை அழிப்பது, அதன் தற்பாதுகாப்பாக உள்ள ஒரு துளி விஷத்திற்கு அஞ்சியேயாகும் அந்தக் கொடிய விஷமும் மக்களுக்குக் கொடிய நோய் நீக்கும் அமுதமாக மாறுவதை இன்றைய விஞ்ஞானம் கண்டுள்ளது.

(வளரும்)

---

# சைவத்தலம் பாடும் தண்டமிழ்ப் புராணம்

க. சி. குலரத்தினம்

நாமெல்லோழும் இன்று மாவலியுகத்தில் வாழ்கின்றோம் என்று மட்டற்றமகிழ்ச்சி கொள்கின்றோம் இலங்கையில் மிகப்பெரிய நதியானமாவலி, மத்திய பகுதியில் உற்பத்தியாகிக் கிழக்குப்பகுதியில் வீழ்ந்தபோதிலும், வடக்கில் வாழ்ந்த புலவர்கள் மாவலியை வாழ்த்த, 'மாவலி கங்கை நாடெங்கள் நாடே' எனப் பொதுமக்கள் இலக்கியங்களில் தேசியம் பாடியுள்ளார்கள்.

மாவலிவடக்கே திரும்பிவளம் கொழித்து வாழ்வளித்தல் வேண்டும் என்று அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் கௌரவபாலசிங்கம் அவர்கள், தேசாதிபதியின் மந்திரசபையில் பிரேரித்துள்ளார். ஈழத்துப் பகீரதன் என்று அவரை நாம் போற்றுதல்தகும்.

இன்று மாவலி பெருமளவில் வடக்கு நோக்குகிறது. அது இன்னும் தொடர்ந்து ஆனையிறவுக் கடலேரியை நன்னீர் ஏரியாக்க உபகரித்தல் வேண்டும் என்பது எங்கள் அபிலாஷையாகும்.

### கரசையில்

### அகத்தியர்

அன்று மாவலியின் கிழக்குப் பாய்ச்சல் வேகமாகவிருந்தது. அக்காலத்தில் அதன் கரையில் வளமானபிரதேசம் ஒன்று கரசை எனவழங்கியது. அங்கே அகத்திய முனிவர் பெயரால் அகத்தியர்தாபனம் என்னும் திருக்கோயில் ஒன்றுண்டு. அது திருக்கரசை என்றே சிறப்பாகவழங்கிவரலாயிற்று. திவ்வியம் பழுத்த சிவாலயங்கள் மிகுதியாயிருந்த இலங்கை சிவபூமி எனவே முற்காலத்தில் வழங்கிவந்தது.

### திருக்கரசைப்புராணம்

சிவபூமி பொன்போல இலங்கி, இலங்கை என்றும் ஈழம் என்றும் பெயர்கள் பெற்றன. இலங்கையின் இயற்கைவளங்களை எடுத்துக் கூறும் பழைய நூல்களுள் திருக்கரசைப்புராணம் ஒன்று அது செகராச சேகரமன்னன் காலத்தில் எழுந்ததாகும். அதைப்பாடியவர்யாவர் என்பது புலப்பட வில்லையாயினும் அவர் புறச்சந்தானகுரவர்களுள் உமாபதி சிவத்தின் ஞானபரம் பரையில்வந்தவர் என்பது உறுதியாயுள்ளது. ''கொற்றங்குடி வாழும் பிரான் சரணத்துறுதி கொண்டே'' எனவரும் பாடல் இவர் திருக்கைலாய பரம்பரைக்குத் தொடர்பானவர் என்பதை வலியுறுத்தும். இந்நூல் தக்கிணகைலாச புராணத்தின் வந்தபுராணமாகும். அன்றி உமாபதிசிவம் பாடியருளிய கோயிற்புராணத்தில்நினைவையும் உண்டாக்குகிறது.

திருக்கரசைத் திருக்கோயில் கோபுரங்களை மதில்கள், பெரி சுற்றுப் பிரகாரங்களில் பரிவார தெய்வங்கள் சூழ அமைந்த பெரிய சிவாலயமாகும். பிரகார முதல் தெய்வமாய மூத்த கணபதிக்குப் புலவர் தோத்திரம் பாடியகக் கருத்துள் வைத்து வழிவகுத்த வண்ணம் சிறப்பாகவுள்ளது. குரு வணக்கம் கூறிய புலவர் தில்லையில் வாழ்ந்த ஈசான சிவன் என்பாரைத் தம் இதயத்தில் இடம் பெறச் செய்தமை நயமாகவுள்ளது.

அன்றொருநாள் அகத்திய முனிவர் மாவலியில் நீராடிக் கொண்ட போது அசரீரி கேட்டு அதன் வண்ணம் தாபித்த திருக்கோயிலைப் புகழ்ந்து பாடும் புராணம் 170 பாடல்களைக் கொண்டிருக்கிறது. மறைந்த பாடல்கள் பல எனக் கொள்ள இடமுண்டு. எஞ்சிய பாடல்களிற் பல சிலேடை நயம் ததும்புவனவாயுள்ளன.

திருக்கோயில் ஏழு மதில்கள் சூழ்ந்ததாய், எட்டுப் பெருவாயில்கள் கொண்டதாய், கோபுரமுயர்ந்ததாய், ஒன்பது வளைவுகள் அமைந்ததாய், சித்திர விமானம் உள்ளதாய், முத்தமிழ் வளர்த்த அரங்குகள் அமைந்ததாய் பெருவீதிகள் பொலிய விளங்கியது.

இவற்றையெல்லாம் போர்த்துக்கேயர் தகர்த்தார்களோ, உட்பகைவர் உடைத்தார்களோ தெரியவில்லை.

திருக்கோயில் சேர்ந்த வெளி நிலங்களில் செந்நெல் மிகுதியாக விளைந்து குன்றெனக் குவிந்து கிடந்தன. மன்மதன் விரும்பும் சோலைகள் இருந்தன. புலவர்கள் தமிழாய்ந்த பட்டமண்டபங்கள் இருந்தன. மகளிர் அன்ன நடை நடக்க சிலம்புகள் ஆர்த்தன. அவர்கள் இடையிலணிந்த எழுகோவை, எண்கோவை, காஞ்சி மேகலைகள் ஆர்த்தன. அவர்களின் செந்துவர் வாயிதழ்கள் துடித்தன. வயல்களில் உழவர் ஆர்ப்பு ஒரு புறமாக நாட்டில் நடந்தவிழாக்களின் ஆர்ப்பு ஒருபுறமாக 'ஒலித்த தோற்கருவி, துளைக்கருவி ஒரு புறமாக சோலைகளில் வண்டினங்கள் ஒரு புறமாக ஆர்த்தன என்று இலங்கையின் அருமையை அறியலாம்.

வரையெலா மாரம் ஆரம்
வளமெலாம் நன்கார் நன்
கார்
நிரையெலாஞ் சாலி சாலி
நிரையெலாங் கன்னல்
கன்னல்
தரையெலா நீல நீலத்
தடமெலா நாறு நாறுங்
கரையெலாமன் மன்னங்
கடலெலாமீழ மீழம்''

## தமிழ் தந்த தாதாக்கள்

---

## சிற்ப ஓவியங்கள்

ஜ்ஓலை
என்கின்ற
பிரம்மாவால்
சிருஷ்டிக்கப்பட்ட
சிற்ப ஓவியங்கள்
நாங்கள்!
ஆம்,
பிறந்த மண்ணிலேயே
நிரந்தர அகதிகளாக
வாழ்ந்து கொண்டிருக்கும்
நாங்கள்,

சிற்ப ஓவியங்கள்தான்!
எங்களைச்
சிருஷ்டித்த அந்த
பிரமாக்களை
வாயார வாழ்த்துரைக்க
முடியாத
மௌனிகளாக்கப்பட்டி
ருக்கும்
நாங்கள்,
சிற்ப ஓவியங்கள்தான்!

நாங்கள் தாக்கப்பட்டோம்
எங்களது உடைமைகள்
சூறையாடப்பட்டன
எங்களது மனைகள்
தீயில் கொளுத்தப்பட்டன!
எங்களது உடன்பிறப்புகள்
பலிக்கடாகக் ளாக்கப்பட்
டனர்
எங்களது பார்வதிகள்
நாங்கள் பார்த்திருக்கத்
துகிலுரியப்பட்டார்கள்!
துரோபதையின்
துகிலுரியப்பட்டபொழுது
தர்மனின் ஆணையினுல்
வாய் புதைத்து
மௌனிக ளாயிருந்
தார்கள்
பாண்டவர்கள்!
நாங்களோ!
எங்களை இரட்சிப்பதாய்ச்
சொல்லப்படும்,
எங்களது பிதாக்களால்
கையிரண்டும் கட்டப்பட்டு
கைதிகளாகி
மௌனிக ளாக்கப்பட்
டிருந்தோம்;
நாங்கள்,
சிற்ப ஓவியங்கள்தான்!

ஆ. இராஜலிங்கம்

# இவ்வாரம் எப்படி?

திருமலை வே. ரவீந்திரன்

## மேஷம்

எப்பக்கம் திரும்பினாலும் ஆதரவு கொடுக்க அன்பர்கள் முன்வருவார்கள். வெளியிடத் தொடர்புகள் சிறப்பைத் தரும். படித்தவர்களால் பயன் கிட்டும். சகோதரங்களால் தொல்லை அதிகரிக்கும். பிரயாணங்களைத் தவிர்ப்பது நன்று. பேச்சாளர்கள் மத்தியில் வெற்றிகளும் கிட்டும்.

## ரிஷபம்

பகைமூட்டம் தோன்றும். பதட்டமும் உடன் சேரும். மிகையான போக்கு கசப்பாக இருக்கும். குழந்தை ஒன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும். புதிய பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நன்று. பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும். இளையோர் கசப்பர்.

## மிதுனம்

கண்வலை வீசி காதலனை தொடுப்பீர். குடும்பத்தில் சிறு பூசலின் பின் குதூகலம் நிலைக்கும். ஆயுதபீடையும் எதிரிகள் சச்சரவும், பிரிவும் உங்களை நிலைதடுமாற வைக்கும். தாய் வழியால் புத்திரருக்கு இலாபம் கிட்டும். அவ்வழியால் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு

## கடகம்

எண்ணிய காரியத்தில் தடை ஏற்படும். மேலதிகாரிகளின் கண்டிப்பும் உண்டு. குடும்பப் பிணைப்புக்கள் இறுகும். காதலர்களுக்கு கரும்பாக இருக்கும். சிறிய விபத்துக்கள் இடம்பெறும். வஞ்சகர்கள் வலை விரிப்பார்கள். பிள்ளைகளினால் உதவியுமாகும். புகழ்ச்சி மகிழ்ச்சியைத் தேடித் தரும்.

## சிம்மம்

தனவரவும் தருமசிந்தனையும் மேலோங்கும். நஷ்டத்துக்கு இடமுண்டு. முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். விஷப்பரீட்சைமூலம் விபரீதங்கள் விளையும். விஷமிகள் விழித்திருப்பார்கள். களஸ்திர விடயங்களும் அவ்வழிச் சிறப்பும் உண்டு. புதிய சந்திப்புக்கள் பிரச்னைகளை உருவாக்கலாம். எவ்விடயத்திலும் நேர்மையுடனும் உண்மையுடனும் நடக்கவும்.

## கன்னி

பெரியோர் புகழ்ச்சியும் புதுப் பிரயாணங்களும் பூமிப் பொருள் லாபங்களும் உருவாகலாம். பெயரைக் கெடுப்பதற்கும் பொருளைப் பறிப்பதற்கும் சிலர் எத்தனிப்பர். அவதானமும் நிதானமும் வேண்டும். நீண்டநாள் தொடர்பில் மாற்றம் ஏற்படும். அது மனதுக்கு இதமாக இருக்கும். எதிலும் அமைதி வேண்டும்.

## துலாம்

தனவரவு உங்களை மகிழ்விக்கும். தொழில் துறையில் முன்னேற்றமும் உயர்ச்சியானமாற்றங்களும் மேலோங்கும். பெரியோரும் அயலாரும் அன்பு காட்டுவர். சிறுவிடயங்களுக்கு தடைவிதிக்க தரகர்கள் எத்தனிப்பர். விழிப்புடன் இருக்கவும்.

## விருச்சிகம்

துன்பத்தின் சாயல் மனதில் பகைமூட்டத்தையும் உண்டு பண்ணும். திடீரென வரும் வருகையால் கடன் தொல்லைகள் தீரும். அன்புக்கரங்கள் அணைக்கும். நல்ல விடயங்களுக்கு வழிகோலப்படும். பிதாவழிச்சுகம் கிடைக்கும்.

## தனுசு

சிறு விபத்து சீறிவரும். ஆத்திரம் சிந்தனையைக் குழப்பும். நிதானத்துடன் செயற்படவும் பெண்கள் மிகவும் அவதானமாக நடக்கவும். அதிர்ஷ்ட தேவதையின் பார்வை உங்களுக்குக் கிடைக்கலாம். குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

## மகரம்

கன்னல் மொழிமூலம் காரியங்களைச் சாதிப்பீர்கள். கவர்ச்சியான உடையணிவதற்கு விரும்புவீர்கள். இன்னலின் பின்னால் உங்கள் முன்னேற்றம் தடுமாறும். திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கும். குறுக்குவழித் தலையீடு சட்டத்தில் மாட்டிவைக்கும். கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும்.

## கும்பம்

சீறிவரும் கோபம் பெரிய மோதல்களை உருவாக்கும். பொறுமை வேண்டும். உடல் நலமும் பாதிக்கப்படலாம். கைத்தொழில் புரிவோர்க்கு நல்ல வருவாய் உண்டு. குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடம் உண்டு. தீயசக்திகள் பலவழிகளிலும் உங்களை வீழ்த்தப் பார்க்கும். விழிப்புடன் செயற்படவும்.

## மீனம்

தாய்வழிப் பெருமையும் அவ்வழி லாபமும் ஏற்படும். உயர் கல்விகளும் இடம் பெறும். சிந்தையில் தடுமாற்றம் ஏற்படலாம். சுகாதாரம் வேண்டும். நீண்டநாளின்பிணி நீங்கும். அவசப் போக்கையும் ஆத்திர உணர்ச்சியையும் தவிர்க்கவும்.

## 1956

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கப் பாதித்திருந்தாலும் அவர்கள், குறிப்பாகச் சிங்களமக்கள், மாறுபட்ட சூழ்நிலையில் உருவாகியிருந்த புதிய வாய்ப்புக்கள் நோக்கித் தமது கவனத்தைத் திருப்புவதன் மூலம் அத்தகைய பாதிப்பிலிருந்து தப்பித்தும் கொண்டனர். இவ்வகையில், இறக்குமதி செய்வதினின்றும் தடுத்துத் தனியாரின் உற்பத்திக்கென அரசாங்கம் விட முன்வந்திருந்த இலேசான கைத்தொழில் நுகர் பொருட்களின் ஆக்கம் முக்கியம் பெறுகின்றது. இவற்றின் உற்பத்தியில் தனியார் ஈடுபடுவதற்கு எதுவித தடையுமில்லாதிருந்த போதும், ஏற்கனவே எடுத்துக் காட்டியவாறு, அரசாங்கத்தின் ஆதரவின்றி, அதாவது அதன் மறைமுகமான கட்டுப்பாட்டுக்குட்படாமல், யாரும்அதில் இறங்க முடியவில்லை இந் நிலையில் தான்தமிழ் மக்கள், சிங்கள மக்களுடன் ஒப்பிடும் போது, புறக்கணிப்புக்குள்ளாகியமையைக் கண்டு கொள்ள முடிகின்றது.

(வளரும்)


லக்ஸ்பிறே துடிப்பீர்







அறிவால் உயர்வீர்

லக்ஸ்பிறே

நாட்டுமக்களின் ஊட்டம் மிகுந்த பாலுணவு.

## பசிப்பிணி போக்குவதில் தனிப்புகழ் பெற்றும் பின்தங்கிய மாவட்டம் என வர்ணிக்கப்படும் கிளிநொச்சி மாவட்டம்

# கிளிநொச்சி மாவட்ட எதிர்காலம் ஏற்றமுற...

ப வை. ஜெயபாலன்
(தலைவர், பரந்தன்-கிளிநொச்சி றோட்டறிக் கழகம்)

கிளிநொச்சி இன்று தனி மாவட்டம். இலங்கையின் இருபத்தைந்து நிர்வாகப் பிரிவுகளில் இப்பொழுது இதுவும் ஒன்று. இந்த வளர்முகப் பிரதேசத்தின் தளர் நிலைகள் தகர, தனி மாவட்ட அமைப்பு உதவும் என்பது இவ்வூரவர்களின் எதிர் பார்ப்பு, ஐம்பது ஆண்டுகளின் முன்பு இப்பகுதி அடர்ந்த காடு அதன் பின்னர் ஏழைகளின் குடியேற்றப் பகுதி. ஒரு மலேரியாப் பிரதேசம். பதினைந்து ஆண்டுகளின் முன்பு வரை யாழ்ப்பாண மக்களின் பயிர்ச்செய்கைப் புலம். இன்று கிளிநொச்சி, எண்ணற்றவர்களின் குடியிருப்பாய் எவரும் விரும்பி வாழும் இடமாக மாறியுள்ளது. நெல்வள நிறைவோடு பல் வகைப் பயிர்ச் செழுமை தொழில் வள நிலைமை உயர்ந்த பாரிய வளர்ச்சி நிலை! எனது ஊர் என்ற எண்ணத் திடம் கொண்ட மண்ணின் மைந்தர்கள் நிறைந்த எழுச்சி நிலை! அகதிகளாக, பிற வகையாக ஆண்டு தோறும் சனத் தொகை காணும் உயர்ச்சி நிலை! இப்பகுதியின் எதிர் கால வளர்ச்சிக்கு இந்நிலைகள் கட்டியம் கூறுகின்றன.

### பரப்பும் எல்லைகளும்

கிளிநொச்சி மாவட்டம் 538 சதுர மைல் விஸ்தீரணம் கொண்டது. 3,44,320 ஏக்கர்களை உள்ளடக்கியது. கிளிநொச்சி, பூநகிரி, பளை என மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உடையது கிளிநொச்சி பட்டினம், கரைச்சி' பூநகரி, பல்லவராயன் கட்டு' இரணைதீவு, முள்ளிப்பற்று, முகமாலை' புலோற்பளை என எட்டு உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளை உள்ளடக்கியது. வீதி ரீதியாக கண்டி வீதியில் எழுதுமட்டுவாள் முதல் முறிகண்டி வரையும்' பரந்தன் தொட்டு முல்லைத்தீவு வீதியில் விஸ்வமடு 14 ம் கட்டை ஈறுகவும்'பரந்தன் மன்னார் வீதியில் பரந்தனிலிருந்து முழங்காவில் வரையும் கிளிநொச்சி மாவட்டம் பரந்துள்ளது. 1960 ஆம் ஆண்டு வரை சாவகச்சேரித் தொகுதியின் ஒரு பகுதியாக இருந்த கிளிநொச்சி அவ் ஆண்டின் முதல்த் தேர்தலிலேயே தனித்தொகுதி அந்தஸ்தைப் பெற்றது. 27 கிராம சேவை அலுவலர் பிரிவுகள் இங்கு இருக்கின்றன.

### மக்கள் தொகையும் குடியேற்றங்களும்

இப்பிரதேசத்தின் சனத் தொகை 100520. இது 1981 இன் கணிப்பீடு. அண்மைக் கலவரத்தின்பின் இத்தொகை 15 வீதம் அதிகரிப்பு பெற்றிருக்கும் எனலாம். விவசாய நோக்குடன் தாமாக குடியமர்ந்த மக்களைக் கொண்ட பழங்குடிக் கிராமங்கள், 1934ம் ஆண்டுமுதல் அரசாங்கத் திட்டங்கள்மூலம் உருவான குடியேற்றத்திட்டக் கிராமங்கள் என இருதன்மையான ஊர்கள் இங்கு உண்டு. இனக்கலவரங்களால் இங்கு வருகைதந்த மலையக தென் இலங்கைத் தமிழர்களைக் கொண்ட எதேச்சையான குடியமர்வுப் பகுதிகள் இங்கு பரவலாக உண்டு. பழங்குடி வாசிகளும் குடியேற்றத்திட்டத்தோடும் தீவுப்பகுதிமுதல் வடமராட்சி வரையுள்ள குடாநாட்டின் பல்வேறு ஊர்களிலும் இருந்து வருகைதந்தவர்களே.

### பயிர்ச் செய்கையும் பயிர் வகைகளும்

விவசாய மாவட்டமான கிளிநொச்சியில் விவசாயக் குடும்பங்களின் தொகை 18438. நெற்செய்கை பிரதான இடம் வகிக்கின்றது. 1982ம் ஆண்டு 15126 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையும் 82—83 பெரும்போகத்தில் 56052 ஏக்கர் நிலநெற்செய்கையும் இங்கு மேற்கொள்ளப் பட்டன. மிளகாய்ச்செய்கை 3910 ஏக்கரிலும் ஏனைய சிறு பயிர், மரக்கறிவகைகள், 2992 ஏக்கரிலும் தென்னைச் செய்கை 12988 ஏக்கரிலும் இந்தஆண்டு இங்கு மேற்கொள்ளப்பட்டது. ஒன்பது பெரிய குளங்களும் 200 ஏக்கருக்குள் நீர்பாய்ச்சக் கூடிய 190 சிறிய குளங்களும் இங்கு உண்டு. ஏழு விவசாய விஸ்தரிப்பு நிலையங்கள் திட்டமிட்ட பயிர்ச் செய்கை முறையை நடைமுறைப் படுத்த இங்கு இயங்குகின்றன. விலங்கு வேளாண்மையில் மாடு வளர்ப்பு இங்கு முதன்மை பெறுகின்றது. பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், பதப்படுத்தும் நிலைப்படுத்தும் வசதிகள் கொண்ட பால்சேகரிப்பு நிலையம் ஆகியன இங்கு துலங்கும் தொழிற்துறை அமைப்புகள். நிலப்பரப்பு நிறைந்த சனச்செறிவு குறைந்த இம்மாவட்டத்தில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் துரிதகெதியில் நடைமுறைப் படுத்தப்படுமானல் ஆரோக்கியமான வளர்ச்சி ஒவ்வொரு துறையிலும் அதிவிரைவில் துலங்கும்.

பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் என்பன அதி அவசிய கவனத்துக்கு உரிய அதி முக்கிய பிரிவுகள் ஆகும்.

### பொருளாதாரம்

பொருளாதாரத்தில் இங்கு பெருஆதாரம் விவசாயமே' விவசாய நிலங்கள் நிலையாக குறித்தஅளவை கொண்டதே. ஆனுல் விளைச்சலின் வீதத்தை அதிகரிக்க ஏற்றன ஆற்றலாம். திருந்திய முறைப்பயிர்ச்செய்கைக்கு ஏற்றமுறையில் புதிய இனங்களை அறிமுகப்படுத்துதல், மண்வளஆராட்ச்சிசெய்து தகுந்தபயிர்களை இனங்காட்டுதல், மாற்றுப்பயிர்த் திட்டத்தை செயல்முறைப்படுத்தச் செய்தல் ஆகியன அவசியம். கரும்பு, திராட்சை, கோதுமை என்பன சிறந்த விளைவுதரும் என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவை பரவலாக்கப்படலாம். குளங்களை ஆழமாக்குதல். விசாலமாக்குதல், குளமட்டம் உயர்த்தப்படுதல், தேவையான இடங்களில் குழாய்க் கிணறுகள் அமைத்தல் போன்றவற்றின் மூலம் நீர் வளம் மேலும் நிலை நிறுத்தப்படல் வேண்டும். ஆனையிறவு நன்நீராக்கத்துக்குரிய திட்டத்தை மீள ஆராய்ந்து பொருந்துமெனில் செயற்படலாம். குடியேற்றத் திட்டக்காணிகளுக்கு உறுதிவழங்குதல், அத்துமீறி கைப்பற்றப்பட்ட பொதுத் தேவைக்கு அனுவசியமான பயிர்நிலங்களை அவரவர்க்கு வழங்குதல் ஆகியனவும் விவசாயிகளுக்கு ஊக்கம்தரும்.

### கால் நடை வளர்ப்பு

கால் நடைவளர்ப்பு வீட்டுக்குவீடு அறிமுகப்படுத்தப் படல் வேண்டும். பட்டிவளர்ப்புக்கு ஊக்குவிப்பு, பால் இன வர்க்கங்கள் தருவித்தல் ஆகியன விலங்கு வேளாண்மைக்கு ஏற்ற ஊக்குவிப்புக்கள். பால் பதப்படுத்தும் தொழில் நிலையம் உள்ளதால் சந்தைப்படுத்தல் பாலுற்பத்தியாளர்க்குப் பிரச்சனை அல்ல. மாட்டுச் சாணத்தின் மூலம் உயிர் இன வாயு தயாரித்தலை பரவலாக அறிமுகப்படுத்தின் மாட்டு வளர்ப்பு மேலும் ஊக்கம் அடையும்.

நாச்சிக்குடா, இரணைதீவு, வலைப்பாடு, ஆனையிறவு, சுண்டிக்குளம் ஆகியன மீன்பிடித் துறையில் மிளிரும் இப்பகுதிக் கரையோரங்கள். மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்தல், நவீன முறைகளை அறிமுகப் படுத்துதல், கடன்வசதிகளுடன் கூடிய மீன்பிடிக் கூட்டுறவுச்சங்கங்கள் ஏற்படுத்துதல், நன்நீர்மீன்வளர்ப்பு அறிமுகப்படுத்தப்படுதல், இரணைமடு போன்ற குளங்களில் மீன்பிடி உரிமைகள் உள்ளூர் வாசிகளுக்கு உரியதாக்கப்படுதல் ஆகியன மீன்பிடித்துறை சிறக்கஏற்ற ஏற்பாடுகள். இவை நடைமுறைப்படுத்தப் படுதல் அவசியம். ஆனையிறவு சிறந்தறல் பிடிப்புக்கு உரியபகுதி என்பது குறித்துரைக்கக்கூடியது.

### கைத் தொழில் துறை

கைத்தொழில் துறையில் பனைப்பகுதியின் தென்னைப் பொருட்களைப்பயன் படுத்தும் தும்புத்தொழில்நிலையம், பரவலாக உள்ளபழவகைகளைப் பயனுக்கும் பழச்சாறு தயாரிப்பு தொழிலகம், மட்பாண்ட மூலவளங்களைப் பயன் படுத்தும் மட்பாண்ட தொழிலகங்கள், ஒவ்வொரு நெற்போகமும் கழிவு ஆகும் வைக்கோலைப் பயன்படுத்தும் காகிதத்தொழிற்சாலை ஆகிய நயம் பயக்கக்கூடிய தொழில்துறைகள் இங்கு ஆரம்பிக்கப்படலாம். மனிதசக்திப் பயன்பாடு அதிகம்தேவையான தொழிற் துறைகளும் இங்கு ஆரம்பிக்கக்கூடியன. வீடுகளில் இருந்தவாறே செயற்படுத்தக் கூடிய குடிசைக்கைத்தொழிலை இங்கு பரவலாக அறிமுகப் படுத்தல் அவசியம். மூலப் பொருட்களைப் பெற்று பொருளாக தயாரித்து சந்தைப்படுத்தக்கூடிய வசதியை பெறக் கூடிய கூட்டுறவுமுறைகள் செயற்படும் ஆனுல் தேங்கி உள்ள மனிதசக்தி சிறப்பாக பயன்தரும். பயன்படும். ஏழ்மை ஏற்றநிவர்த்தி பெறும்.

கிளிநொச்சி மாவட்டம் பரந்தன் கிளிநொச்சி என இருகல்வி வட்டாரங்களைக் கொண்டது. இருவட்டாரங்களிலும் 73 பாடசாலைகளும் இவற்றில் 413 ஆசிரியர்களும் உள்ளனர். மொத்தமாணவர் தொகை 15714 இவை 1983ம் ஆண்டு புள்ளிவிபரங்கள். இவற்றில் 1ம்ஏதரப்பாடசாலை ஒன்றுமட்டுமே. 1ம்C தரத்தில் ஆறுபாடசாலைகளும் இரண்டாம் தரபாடசாலைகளாக 18, மூன்றும் தரத்தில் 48 என்றவாறு பாடசாலை தரம் உள்ளது. இங்கு 5 முதல் 15வயதானர் தொகை 24,079. இத் தொகையை பாடசாலை செல்லும் மாணவர்கள் தொகையுடன் ஒப்பிடும்போது பாடசாலை செல்லும் பிள்ளைகள் தொகை 65.5% மட்டுமே என்பது புலனுகிறது. படிக்கும் மாணவர் தொகையிலும் பெரும் பகுதியோர் கீழ் வகுப்புக்களுடன் படிப்பை நிறுத்திக் கொள்கின்றனர். 47 பிள்ளைகளுக்கு ஒருவர் என்ற வீதத்திலேயே இங்கு ஆசிரியர்களும் உள்ளனர். தேவையின் அரைப் பங்கு மட்டுமே இங்கு பாடசாலைத் தளபாடங்கள் உண்டு. ஆறு பாடசாலைகள் மட்டுமே உயர் வகுப்புக்களையும் உள் அடக்கியவை. ஏழு பாடசாலைகளை இணைத்த கொத்தணி அமைப்பும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஊர்களுக்கிடையே தூரம் அதிகமாக உள்ளமை, போக்குவரத்து வசதிக்குறைவு, அதிகரித்த பிரயாணச் செலவு, பிறப்புச் சான்றிதழ் பதியப்படாததால் இல்லாத நிலை உரிய கம வேலைகளில் பெற்றோர் கமங்களில் அல்லது கூலி வேலைகளில் பிள்ளைகள் ஈடுபடுவது காலம் தாழ்த்தி பாடசாலையில் சேர்த்தல் ஆகியன இப்பகுதியின் கல்வி அக்கறையின்மைக்குக் காரணம். இந் நிலை களையப்பட ஏற்றன செய்யப்பட வேண்டும். கல்வி அபிவிருத்தியே இப் பகுதியின் நாளைய நாயகர்களை நல்ல முறையில் உருவாக்கி எதிர் காலத்தில் இப் பகுதி எழில் மயமாக ஏற்ற ஒருவழி.

### சுகாதாரம்

சுகாதாரத்தில் இப்பகுதி வியாபகமான சேவையின் தேவையுடன் உள்ளது. ஏழ்மை ஏற்படுத்தும்போஷாக்கின்மை, இது காரணமாக அதிகரிக்கும் நோய்கள், வைத்திய வசதிக் குறைவு, குளித்தல் உடுப்புத் தோய்த்தல் அனைத்துக்கும் ஒரே குளங்களே பயன்படுத்தப்படுதல், வீட்டு பொது மலசலகூடங்கள் இன்மை ஆகியன இப்பகுதிச் சீர் கேடுகள். போஷாக்கான உணவு வகைகளை இனங் காட்டுதல், அவற்றின் செய்கை முறைகளை ஊக்குவித்தல், அவசியமானவர்கள் சத்துணவு பெற ஆவன செய்தல் ஆகியன ஆரோக்கிய விருத்திக்கு அவசிய பணிகள். மாவட்ட வைத்திய சாலையில் சத்திர சிகிச்சைப் பிரிவு. எக்ஸ்றே பிரிவு, இரத்தப் பரிசோதனைப் பிரிவு போன்ற அவசிய பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். கிராமங்களில் பிரசவ விடுதி, மருந்தகங்களின் வசதிகள் அதிகரிக்கப்படுதல், கிராம விசாலம் கருதி மருத்துவ மாது பிரிவுகள் அதிகரிக்கப்படுதல், மலசல கூட பாவனைக்கு வசதி தரல், பொதுமலசல கூட நிர்மாணம் ஆகியன பரந்த இப் பிரதேசம் செறிவான சேவை பெற உதவியாகும்.

### பொது நல சேவை நிலையங்கள்

பொதுவான இத் தேவைகள் இன்றைய நிலையில் இலங்கையில், குறிப்பாக ஒரு தமிழ்ப் பகுதியில் நிறைவேற்றங் காணல் உடன் எதிர்பார்க்கக் கூடிய ஒன்றல்ல. நிதி அரசாங்கத்திற்கே நெருக்கடியைக் கொடுக்கும் நிலை இன்றையது எனவே பொது சேவை மன்றங்கள் ஊக்குவிப்பு மிக அவசியமானது, பதியப்பட்ட வாசிகசாலைகள் கரைச்சி பிரிவில் ஏழு மட்டுமே. சன சமூக நிலையங்கள் மூலமும் நூல் நிலைய அமைப்புக்கள் மூலமும் குன்றிய நிலையில் இளைஞர்களிடையே உள்ள பொது அறிவை விருத்தி செய்யலாம். முதியோர் கல்வியும் செயற்படுத்தக் கூடியது கிராம முன்னேற்றச் சங்கங்கள், ஐக்கிய நாணய சங்கங்கள், கலை கலாச்சார நிலையங்கள் மூலம் பாலர் கல்வி, கைப்பணி, சிரமதான பாதை சீர் திருத்தங்கள். ஆகியன செயற்படுத்தலாம் பாரிய திட்டங்களைச் செயற்படுத்தக் கூடிய காந்தீயம் போன்ற இயக்கங்கள் துரதிஷ்டவசமாக செயல் இழக்கச் செய்யப்பட்டு விட்டன. இந்நிலையில் இப் பகுதி போன்றனவற்றின் அபிவிருத்திக்கு வெளிநாட்டு உதவிகளைப்' பெற்று செயற்படக் கூடிய பொது மக்களின் சேவை இயக்கங்கள் அரச மட்டத்தில் ஊக்கப்படுத்தப்படல் வேண்டும்.

### பொது

அதிக பிரச்னைகளுக்கு கருவாக அமைவது போக்குவரத்துக் குறைபாடே. இ. போ. ச. சேவைத்திட்டம் விருத்தியாக்கப்படுதல் தனியார் சேவை ஊக்குவிப்பு இக் குறைபாட்டு நிவர்த்திக்கு அவசியம். மத்திய கிளிநொச்சி பேருந்து நிலையம், கிளிநொச்சி சந்தை ஆகியன குண்டும்குழியும் சேறும் சகதியும் கொண்ட சீர்கேடான நிலையில் உள்ளன. ஏழு ஆண்டுகளாகப் பயன் படுத்தப்படாமல் இருக்கும் நவீனசந்தைக் கட்டிடத்துள் சந்தையை மாற்றுவதன்மூலம் சிரமம்இன்றி இப்பிரச்னையைத் தீர்க்கலாம். மின்சாரம் ஊர்கள்தோறும் வழங்கப்படுமானுல் பலதுறைகள் வளர்ச்சி காணும். குற்றச்செயல்கள் போதைப்பொருள் உற்பத்தி ஆகியனவற்றைத் தடுக்க, பாதுகாப்பு பயம் இன்மையை ஏற்படுத்தி மக்களின் அன்றாட நடமாட்டங்கள் சுமுகமாக ஆவன செய்தல் அவசியம். தாம்போதி மகாதேவா பால வேலைகள் பூர்த்தியாகுமாயின் பூநகரிப் பிரதேசம் துரிதவளம் காணும். வட்டக்கச்சி விவசாயப்பண்ணை, நெல் ஆராய்ச்சி நிலையம் ஆகியனவற்றின் பயன்பாடுகள் மக்களுக்குக் கிட்ட ஆவண செய்யலாம். பல்கலைக்கழக விவசாயபீடம் இங்கு அமைக்கப்படுதல் பலநோக்குக் கருதி வரவேற்கப்படக்கூடிய திட்டம்.

திட்டமிட்ட பட்டின அமைப்புக்குள் கிளிநொச்சி பட்டினம் அமைக்கப்பட்ட ஆரம்ப காலங்களில் ஆர்வம் காட்டப்படாதது விசனத்துக்குரியது. அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படும் கடைகளின் அமைப்பு பட்டின பிரதானவீதிப் பகுதிகளின் அத்துமீறிய குடியேற்றங்கள் என்பன நகரஅமைப்பைச் சீர்குலைக்கின்றன. பாதிக்கப்படுபவர்களுக்குத் தகுந்த மாற்று நிவாரணம் தந்து

(12ம் பக்கம் பார்க்க)

## சில்லாலை

(6ம் பக்கத் தொடர்ச்சி)

''எல்லாரும் கைவிட்டால் சில்லாலைத்தம்பி'' என்று புலவர்கள் வியந்துரைத்தது இங்கு குறிப்பிடக்கூடியது.

''மயில் முறைக்குலத்துரிமை'' முறையில் வழிவழியாக மூத்தபுத்திரர்கள் இன்னுசித்தம்பி வைத்தியபரம்பரையில், வைத்தியத்தைச் செய்யும் உரிமையுடையவர்கள். இவ்விதமான பலதகவல்கள் இந்நூலில் சுவைப்பட எழுதப்பட்டிருக்கிறது

புலவர்கள் நாவில் இன்னுசித்தம்பி பரம்பரையை இப்படிப் பாடியிருக்கிறார்கள் என்பது இந்தபரம்பரையின் கதையில் ஒரு அத்தியாயம்.

இப்போது வைத்தியப் பணியாற்றும் சித்தவைத்திய விசாரத் எமில் இன்னுசித்தம்பி நாற்பது ஆண்டுகாலம் சேவையாற்றிவருகிறார். அரசாங்கமே கௌரவித்த ஒரு வைத்திய மாமன்னன் இவர் இவரது மனைவி நீற்றூவும். இவருக்குத் துணையாக இருந்து சேவையாற்றுகிறார். இவர்கள் புத்திரன் வைத்தியக்கலாநிதி சுகந்தனும் சேர்ந்துவிட்டார்! பத்தாவது தலைமுறை என்ற பெருமை இவரைச் சாருகிறது.

இவையெல்லாம் அழகாகத் தொடுக்கப் பட்டுள்ளது.

சில்லையூர் செல்வராசனின் கைவண்ணமும் இம் மலரில் இடம்பெற்றுள்ளது. தனிக் குடும்பம் இது என்ற கவிதையில்இ ந்தவைத்தியப்பரம்பரையைப் பற்றி அழகாகக் கூறியுள்ளார்

புகைப்படங்கள் நிறையக் கதை சொல்கின்றன இந்த நூலில்

நிச்சயம் இன்நூலை ஒவ்வொரு தமிழரும் படிக்க வேண்டும்!

—ராஜகோபால்

## தொடர்கதை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பிடிச் சொல்லுறத்திலை என்ன பிழை?''

கந்தசாமி அலுத்துக் கொண்டே கூறி முடித்து விட்டு மறு பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

''எட தம்பி, நீ கதைக்க விடுறாயில்லை! அவர் சோமர் அதுதான் கொட்டடிச் சோமர் செத்துப் போனார். அது தான் அதிலை ஒருக்காப் போட்டு வாறன் எண்டு சொல்லிறத்துக்கிடையிலை ...''

''ஆரண்ணை சோமரே? எந்தச் சோமரைச் சொல்லுறியள்? உங்கினைக்கை கூட்டம் வளிய பேசிக் கொண்டு திரியிற சோமரோ? நான் இப்ப ஆளைக் கண்டுகொண்டு வாறன்! பத்து மணி வசுவுக்கு நான் பஸ் ஸ்ராண்டிலை நிக்கேக்கை பாவம் ஆரோ ஒரு கிழட்டு றிச்சோக்காறனைக் கொண்டு றிச்சோ இழுப்பிச்சுக் கொண்டு போனதை நான் கண்டனான். தலையிலை பரவணித் தலைப்பாவும் வைத்துக் கொண்டு ராசா மாதிரிப் போனதை நான் கண்டனான்! அந்தச் சோமரைச் சொல்லிறியளோ? முந்தினது மாதிரி இல்லாமல் தாடியும் வைச்சுக் கொண்டு போனவர். முதல்ல நான்ஆளை மட்டுக் கட்டேல்லை. அந்தச் சோமரையே செத்ததெண்டு சொல்லிறியள்?''

அண்ணன் சண்முகம் வேறை யாரோ ஒருவரைத் தான் சோமர் என்று கண்டிருக்கிறார் என்ற எண்ணத்தோடு கந்தசாமி இப்படிப் பல கேள்விகளைக் கேட்டான்.

(தொடரும்)

## சிறுகதை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்தானே கஷ்டப்படுகினம். தொற்று வியாதி வந்தால் எல்லாருக்கும் பிரச்சனை. நான் நேற்று நல்லாய்க்கஷ்டப்பட்டுப் போனனன்.''

எங்களால் பதில் சொல்ல முடியவில்லை.

''உங்களைப்போல இளம் ஆட்கள் தான் இதிலை கூடிய அக்கறை எடுக்க வேணும். நீங்கள் தன்னும் சனங்களுக்கு இந்தப்பிரச்சினை பற்றி விளங்கப் படுத்த வேணும். கோயிலுக்குப் போகேக்க முழுகித்தூய்மையான உடுப்புகளோடை ஏன் போறம்? எவ்வளவு பயபக்தி அங்கைஏற்படுது அதுமாதிரித் தான் எல்லாம்''

''நீங்கள் சொல்லுறது சரி தான்''

''நான் இதிலை வலுகட்டுப்பாடு. நாங்கள்வசிக்கின்ற இடங்களும் நாங்களும் நீற்றாக இருக்கவேணும் இதை நான் மாத்திரம் கடைப்பிடிக்கிறதோடை நிக்கிறேல்லை. மற்றவையும் அப்படி இருக்க வேணும் எண்டு வற்புறுத்தினனான் அதாலைதான் இவ்வளவுதூரம் உங்களோடை இதைப்பற்றிக் கதைக்கிறன்''

நாங்கள் புன்னகை செய்தோம் வேறுவழியில்லை.

''இந்த றோட்கூட முந்திக் குப்பைகளின் களஞ்சியமாகத் தான் இருந்தது. நான்தான் முன்னுக்கு நின்று எல்லாருக்கும் ஊக்கம் கொடுத்துக் கிளீன் பண்ணினனான். இப்ப பரவாயில்லை. இப்படி எல்லாருக்கும் அக்கறை இருக்க வேணும்''

''நாங்களும் இதைப் பற்றி யோசிக்கிறனாங்கள் தான். ஆனால் சனங்களை மாற்ற முடியாது. சொன்னாலும் கேட்காதுகள். மெல்ல மெல்லத் தான் மாற்ற முடியும். அந்த ஒழுங்கையே முந்திகார் லொறி போகேலாத நிலையிலை இருந்தது நாங்கள் தான் திருத்தினனாங்கள். அதோடை சரியாய்க் கஷ்டப்பட்டுப் போனம். சனங்கள் குப்பை போடுறதை மாத்திரம் நிற்பாட்ட முடியேல்லை''

''அந்த லேன் மாத்திரம் அல்ல இரண்டு பக்கமும் இருக்கிற வீடுகளிலும் அப்பிடித் தான். இப்படி இருக்கிறதாலை ஏற்படுகிற பிரச்சனைகளைச் சனங்களுக்குத் தெரியப்படுத்த வேணும். விளங்க வைக்க வேணும். லேனின் முடிவிலை இருக்கிற பள்ளிக் கூடமும் அப்பிடித்தான்.சரியான 'பாட் ஏரியா''

''நீங்கள் சொன்ன மாதிரித் தெண்டிக்கிறம்''

''குட் அதுதான் நல்லது. தெண்டிக்கிறது எண்டதை விட்டுப் போட்டுச் செய்து முடிப்போம் என்று உறுதி எடுக்க வேணும்''

நாங்கள் வந்த போது எங்களை உள்ளே அழைத்த பெண்—திருமதி சத்தியமூர்த்தியாக இருக்க வேண்டும்—கிளாஸ்களில் குளிர் பானம் கொண்டு வந்தாள்.

''நான் நேற்றுச் சொன்னன் அந்த லேனிலை —சீவிக்கிற ஆட்கள்தான் இவை'' என்று எங்களைச் சத்திய மூர்த்தி அறிமுகப்படுத்தினார்.

நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சங்கடப்பட்டு நெளிய—

அந்தப் பெண் எங்களை ஒரு மாதிரிப் பார்த்துக் கொண்டு உள்ளே போனாள்.

சத்தமில்லாமல் குளிர் பானத்தைக் காலி செய்ய

''அப்பநீங்கள் நாளைக்குமோணிங்நைன் தேட்டி போலை ஒவ்வீசுக்கு வாருங்கோ என்ன நிலைமையில இருக்கெண்டு சொல்லுறன்''என்று சத்திய மூர்த்தி சொல்ல—''ஓம் சேர் நைன் தேட்டிக்கு வாறம்'' என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டு வெளிக்கிட்டோம்.

பஸ் ஸ்ராண்டில் பஸ்எடுக்கக் காத்து நின்று கொண்டு சத்திய மூர்த்தி சொன்னவைகளை ஞாபகப்படுத்தி எங்களுக்குள் கதைத்தோம்.

(14ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி

(11ம் பக்கத் தொடர்ச்சி)

இதனைச் சீரமைத்து திட்டமிடப்பட்ட ஒரு நகரஅமைப்பு ஏற்படுத்தப்படுதல் முக்கியமானது.

தனிமாவட்டமான கிளிநொச்சி இவற்றைப்போன்ற திட்டங்களை வரையறை செய்து வளர்ச்சிபெறும் என எதிர்பார்ப்போம். சென்ற காலங்களில் இப்பகுதி பாராளுமன்ற ஆசனத்தை அலங்கரித்த அமரர் குமாரசாமி, அமரர் சிவசுந்தரம், உயர்திரு க. பொ. இரத்தினம், தனி மாவட்ட அமைப்புபெறும் முனைப்பில் வெற்றிகடண்ட உயர்திரு. வீ. ஆனந்தசங்கரி ஆகியோர் காலத்துக்குக்காலம் இங்கு வளர்ச்சிகளைக் கட்டி எழுப்பி உள்ளனர். இடைக் காலங்களில் செயற்பட்ட அமரர் பிளாக்கர் பொன்னம்பலம், உயர்திரு செ. குமாரசூரியர் ஆகியோரும் குறிப்பிடத்தகுந்த இவ்வரிசையாளர்கள். துடிப்பும் திறனும் கொண்ட சகபாடிகளுடன் வருகை தந்துள்ள புதிய மாவட்டத்தின் முதல் அரசாங்க அதிபர் உயர்திரு. ந. ஜெகநாதன் அவர்கள் எதிர்கால ஏற்றங்களைக் கட்டி எழுப்புவார் என எதிர்பார்ப்போம்.


நெஸ்பிரே
ரூ. 24.00

அவன் விரும்பும் சுவை
நீங்கள் விரும்பும் விலை




ஆம், பிள்ளைகள் ஆசையோடு நாடிப் பருகும் அற்புத கிறீம் சுவைகொண்ட நெஸ்பிறே இப்பொழுது தாய்மார் தேடி வாங்கும் வசதியான விலையில் வருகிறது.

சுவை மட்டுமல்ல. . . 28% பால் கொழுப்பு, புரதம், மேலதிக விற்றமின்கள் கொண்ட நெஸ்பிறே போஷாக்கிலும் முதன்மையானது.

நெஸ்லேயின் உலகப் புகழ்பெற்ற தரக்கட்டுப்பாடுகளுக்கு அமையத் தயாரிக்கப்படுவதால் தரத்திலும் தூய்மையிலும் முதலிடம் வகிக்கிறது.

அலுமினியக் கடதாசிப் பையில் அடைக்கப்பட்டு பக்குவமான பக்கெட்டில் பொதிசெய்யப்படுவதால் பாலின் புதுத்தன்மை குன்றுவதில்லை.

நாடெங்கிலும் உள்ள குடும்பப் பெண்கள் இப்பொழுது நெஸ்பிறேயைத் தேடி வாங்குகிறார்கள் நீங்களும் அவர்களுடன் சேர்ந்து உங்கள் குடும்பத்திற்கு மிகச் சிறந்ததை வழங்குங்கள்.

இன்றே ஒரு பக்கெட் வாங்குங்கள். தொடர்ந்தும் வாங்குங்கள்.

# நெஸ்பிறே

கிராம் 400
விலை ரூபா 24/-

வளரும் பிள்ளைகளுக்கு நெஸ்லே வழங்கும் பால்

Grant K & E 5249

# இலங்கை இனக் கலவரங்கள்:

## லண்டனில் ஆட்சேப ஊர்வலம்

இலண்டனைத் தலமாகக் கொண்ட 'ஈழம் ஒருமைப்பாட்டு இயக்கம்' பெப்ரவரி 18, 1984 அன்று மாலை 7 மணிக்கு மேற்கு இலண்டனிலுள்ள கொன்வே மண்டபத்தில் ஈழம் ஒருமைப்பாட்டுக்கான மாபெரும் கூட்டம் ஒன்றை நடாத்தியது "ஈழம் எதற்காக' என்பதை விளக்கும் பேச்சுகளோடு, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

"ஆபிரிக்காவில் 'சூரியோதயம்' என்ற கவிதை நாடகம், 'சட்டவிரோத எழுச்சி' என்ற தலைப்பில் அயர்லாந்தின் எழுச்சிப் பாடல்கள், இலத்தீன் அமெரிக்காவின் "குவிமென்டோ" என்றவிராமிகப் பாடல் நிகழ்ச்சி என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்ச்சியை அளித்த ஆபிரிக்க, ஐரிஸ், இலத்தீன் அமெரிக்க கலைஞர்கள் கூட்டத்தின் குறிக்கோளான 'இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை' என்ற இலட்சியத்துடன் தங்களை இணைத்துக் கொண்டனர்.

திரு. சிற்சபேசனைச்செயலாளராகக் கொண்ட ஈழ ஒருமைப்பாட்டு இயக்கம் 1983 ஜூலை இனக்கலவரங்களுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் முகமாக இலண்டனில் பிரமாண்டமான ஊர்வலம் ஒன்றை நடத்தியது தெரிந்ததே.

### தேம்ஸ்நதி தீரத்திலே...



லண்டன்மடல்: "உதயதாரகை"

### கலியுகப் பாஞ்சாலியும் துச்சாதனனும்!

அந்த ஸ்ருடியோவிற்கு 200 கவர்ச்சிக் கன்னிகள் தேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். கவர்ச்சிக் கலண்டர் ஒன்றுபிரசுரிப்பதற்குத்தேவையான அழகியைத் தேர்ந்தெடுப்பதற்கு "காமரா டெஸ்ட்" நடைபெற்றது.

பிரகாசமான மின் விளக்குகளின் முன்னே வீடியோ காமரா படமெடுக்க அழகுப் பாவையர் தமது கவர்ச்சியை அள்ளிவீசவேண்டும்.

தமது அங்கங்களின் வளைவு சுளிவுகளை எதுவித ஒளிவு மறைவுமின்றி இசையுடன் அசைந்து நெளிந்து கவர்ச்சியைக் கக்கி காமராவிற்கு இரையாக்கினர்.

காமராவின் பின்னுல்-படப்பிடிப்பாளர் லிச்பீல்ட் பிரபு அவரது இரு ஆண் உதவியாளர்கள்

ஒருவர்பின் ஒருவராகக் கலியுக ரம்பையரும் ஊர்வசிகளும் வந்து மூன்று ஜோடிக் கண்களுக்கும் காமராவின் கண்ணுக்கும் தமது பிறந்தமேனி எழிலைத் தாரைவார்த்துப் போயினர்.

இப்போது காமராவின் முன்னால் நிற்பவர் ரி. வி. நடிகை நிக்கி கிறிச்சர். அவளது ஜன்மேந்திரிகத்தை மட்டும் ஒரு சின்னஞ்சிறிய 'நிக்கர்' மறைத்திருந்தது.

"குறந் துகிலையும் களை" என்றார் லிச்பீல்ட் பிரபு.

முடியாது என்று சொல்லி விட்டு வெளியேறினாள் கலியுகப் பாஞ்சாலி.

அழகு பவனி தொடர்ந்து நிக்கியைத் தவிர்ந்த ஏனைய 199 அழகிகளின் அந்தரங்கம் வீடியோ காமராவுக்குள் ஒளிந்துகொண்டது.

கதை அந்தளவோடு முடியவில்லை

நிக்கி கிறிச்சர் 'சன்' பத்திரிகையோடு தொடர்பு கொண்டு நடந்ததை எல்லாம் கக்கிவிட்டாள்! பத்திரிகையும் நடந்த கதையை முதல் பக்கத் தலைப்புச் செய்தியாக வெளியிட்டு லிச்பீல்ட் பிரபுவை விளாசு விளாசென்று விளாசிவிட்டது.

லிச்பீல்ட் பிரபு யார் தெரியுமா?

பக்கிங்ஹாம் அரண்மனையின் ஆஸ்தான படப்பிடிப்பாளர்!

மாட்சிமை தங்கிய இரண்டாவது எலிஸபெத் மகாராணியின் மைத்துனர்!!

### தமிழ் அகதிகளுக்கு நிதி சேர்க்க ஸ்கொட்டிஷ் கலை நிகழ்ச்சி

இலங்கையில் சில காலம் வாழ்ந்து, இலங்கைத் தமிழ் மக்களின் நிலையை, வாழ்க்கையை, அபிலாஷைகளை நன்கு தெரிந்தவரான ஸ்கொட்டிஷ் பெண்மணி செல்வி லிலியன் லிடெல், தமிழ் அகதிகளின் நிதிக்காக தமது மாணவிகளைக்கொண்டு கலை நிகழ்ச்சி ஒன்றை பெப்ரவரி 25-ம் திகதி ஸ்கொட்லந்து - கிறீனொக் ஆர்ட்ஸ் கிளப் அரங்கில் தயாரித்தளித்தார்.

செல்வி லிடெல் ஸ்கொட்டிஷ் றோயல் இசை-நாடகக் கழகத்தில் ஆசிரியராக இருந்தவர்.

ஒபேரா நிகழ்ச்சிகளை இலண்டன் தேசிய ஒபேராவைச் சேர்ந்தகிளயர் லிவ்விங்ஸ்டன், அலஸ்டார் எலியட், எடின்பரோ நம்பியர் கல்லூரியின் இசைத்துறைத் தலைவரான அல்ட்றா டொய்க் ஆகியோர் அளித்தனர். இவர்கள் செல்வி லிடெலின் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

19 வயது நிறைந்த, இலங்கையரான செல்வி ஷேனிகா ஷேக்லிபியரின் பரதநாட்டிய விருந்தும் இடம்பெற்றது.

மண்டபம் நிரம்பி வழிந்த இந்தக் கலை நிகழ்ச்சியிலிருந்து பெறப்பட்ட நிதி தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்திற்கு நேரடியாக அனுப்பிவைக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

## ஈசன் இனியவன்

அறன் நலதின் நற்தாய்
ஆக்கஞ் சிவனடி பேணல்.
இசை ஈசனின் இன்பம்
ஈசன் இனிய னென்றும்.
உலக முவப்ப இன்சொல்
ஊறிய மெய்ய வேத
எவ்வந் தீர்ப்பன் ஈசன்
ஏழை தாங்கல் எழிலநலன்
ஐயர் பேணல் சைவத்திற்கழகு.
ஒக்க லோம்பல் உயர்திரு.
ஓமந்தானே ஊதியந் தருவது
ஔவியம் ஆக்கக் கேடு.
அஃகமி காக்கு மருப்பகி.

அஃகம் — தானியம்

-சித்தாந்த பண்டிதர் நா. கனகரத்தினம்

## பிறர் முகம் பார்த்துத் தம்முகம் மறப்பவர்கள் கவிஞர்கள்

"பார்த்த முகம்
பழகிய முகம்
எல்லாம் அப்படியே
ஞாபகத்தில் இருக்கிறது
ஆனாலும்
நினைவில்
நிறம் மறந்து
நசிந்து கொண்டே
இருக்கும்
என் சொந்த முகம்"

தமிழகத்து இளம் கவிஞர் திரு. மேத்தா தாசனை நேற்று முன்தினம் ஜீவாவின் 'கவிதை' அலுவலகத்தில்சந்தித்து அரைமணிநேரம் பேசினேன். விரைவில் வெளிவரவிருக்கும் அவரது கவிதை நூலில் இடம் பெற்றுள்ள ஒரு கவிதையை அங்கு அவர் வாசித்துக்காட்டினார். அக்கவிதைதான் மேலே தரப்பட்டுள்ளதாகும்.

### தமிழகத்து இளம் கவிஞர் மேத்தா தாசனுடன் ஒரு சந்திப்பு

அவரை நான்சந்தித்தபோது அவரைச் சுற்றி வளைத்துஇளம் கவிதை ரசிகர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இளமையே ஒரு இன்பக் கவிதை தானே

ஆர். விஜயராகவன் என்ற பெயரைக்கொண்ட மேத்தாதாசன் புதுக்கவிதைகளில் தமக்குள்ள ஈடுபாடுகள் பற்றி கூறுகையில் தமது மனத்தில் எழும் எண்ணற்ற விஷயங்களைப் பிறர் புரிந்து கொள்ளக்கூடிய வழியை இந்தப் புதுக்கவிதைகள் அமைத்துக் கொடுக்கின்றன என்றார். இவர் கலைப்பட்டதாரி இறுதியாண்டில் பயின்றுகொண்டிருக்கிறார்.

புதுக் கவிதைத்துறையில் இவரைப் பெரிதும் கவர்ந்த கவிஞர் திரு மேத்தா.

21 வயது நிரம்பிய திரு மேத்தாதாசனின் கவிதை நூல் இவரது 19-வது வயதிலேயே தமிழ்நாட்டின் பிரபல நூல் வெளியீட்டாளர்களான 'நர்மதா' பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்டது. கவிதை நூலின் பெயர் 'காகிதக் கனவுகள்.'

இவர் அடுத்து வெளியிடவிருக்கும கவிதை நூல் 'ஜன்னல் தேவதைகள்.'

இதுவரை சுமார் 200 புதுக் கவிதைகளை எழுதியுள்ள திரு. மேத்தாதாசன் கவிதைகளால் பலவித மனப்புண்களை ஆற்றலாம் என்றும் மனித வர்க்கத்துக்குப் புதிய நம்பிக்கையைத்தேடிக்கொடுக்கும் ஆற்றல் கவிதைகளுக்குப் பெரிதும் உண்டு எனக் கூறி. தூத்துக்குடியிலிருக்கும் ஒரு ரசிகை தனது "போகட்டுமே இந்த இரவு" என்ற கவிதையைப் படித்துத் தனது மனப்பாரங்களை இறக்கித் தேற்றிக்கொண்டதாக தமக்குக் கடிதம் எழுதியதாகத் தெரிவித்தார்.

இதுபோன்ற நல்ல பணிகளைக் கவிதையால் சாதிக்க முடியும் என்றார் அவர்.

"பிறரைப் பார்க்கும்பொழுது தம்மை மறந்து விடுகிறோம்"

இதுவே பல கவிஞர்களது நோக்கமாக இருக்கிறது என்றும், "மனித நலனுக்காகவே கவிஞன் கவிதைகளை எழுதுகின்றான்" என்றும் கூறுகிறார் திரு. மேத்தா தாசன்.

க. கணேசலிங்கம்

## மலர்களின் மருத்துவ பயன்

சாதாரணமாகநாம் மலர்களை அழகுக்காகவும் இறைவனுக்குப் பூசைசெய்வதற்கும் மட்டுமே பயன்படுத்துகின்றோம். பலர் மலர்களை இவற்றிற்கு மட்டுமே பயன்படுத்தலாமென எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையில் மலர்கள் பல்வேறு நோய்களை நீக்க மிகச்சிறந்த மருந்துகளாகப் பயன்படுகின்றன. சித்த மருத்துவத்தில் பல்வேறு மருந்துகளை ஆக்கவும் மலர்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப்பொழுது மிகமுக்கியமான சில பூக்களின் மருத்துவப்பயன்களைப்பார்ப்போம்.

செம்பரத்தம் பூ, உடலின் உஷ்ணத்தைக்குறைக்க இது மிக உகந்தது. வெட்டைச் சூடுபோக்க செம்பரத்தம் பூவினைத் தினமும் காலை வெறும் வயிற்றில் உண்ணலாம்.

மாதுளம் பூ: இது தொண்டை நோய்களைப்பெரிது தீர்க்கும். கண்ணோய்களைப் போக்கவும் பயன்படும்

விளாம்பூ: வாயில் அதிக உமிழ்நீர் சுரத்தல், தொண்டைப்புண் என்பவற்றைப் போக்க விளாம்பூ உதவும்

கொத்தமல்லிப்பூ: இதனைக் கஷாயம் செய்துகுடிக்க வயிற்றுப்புண் குணமாவதோடு பித்தம் தொடர்பான குறைபாடுகளையும் தீர்க்கும்

இலைப்பூ; மலச்சிக்கலைப் போக்கும் உடற்பலத்தினையும் தரும்

அத்திப்பூ: புகைபிடித்தலினால் உண்டாகும் பித்த, மயக்கம் என்பவற்றைப்போக்கும்

செம்பருத்திப்பூ: இருதய வலிமைக்கு உதவும் குழந்தைகளில் ஏற்படும் கணச்சூட்டினையும் கல்லீரல் கோளாறுகளையும் போக்க உதவும்.

நொச்சிப்பூ: இரத்தினைப் போக்க நொச்சிப்பூவினை அரைத்துப் பூசலாம்

செண்பகப்பூ: இதனை நல்லெண்ணெயில் பிசைந்து நெற்றியில் கட்டினால் தலைவலி வாதவலி என்பன தீரும்.

சூரியகாந்தி: இப்பூக்களின் விதையிலிருந்து பெறப்படும் எண்ணெய் உடலிற்குப் பலத்தையளிப்பதுடன் இதய வலிமையையும் அளிக்கும்.

முருங்கைப்பூ; நரம்புத் தளர்ச்சிக்கு சிறந்த மருந்தாக

(15-ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர
நகைகள் வேண்டுமா?
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 23199
தந்தி: 'வைரம்'

T.C.C. குளியலறைத் தளக்கற்களின் BATHROOM FLOOR TILES
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்.
ரெருசோ மாபிள் நிலம்
அமைப்பாளர்கள்
SPECIALIST IN TERRAZZO FLOORING
த ரெருசோ கொன்ருக்ரேஸ் அன் கொன்சல்ரன்ஸ்
64, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், (சட்டநாதர் சிவன்கோவில் அண்மை)
தலைமை அலுவலகம்:- 69, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

# இலக்கிய உலகு
### ஈ.கே.ஆர்

## தனித்துவமான

## பத்திரிகையாளர்

பத்திரிகையாளர் ஒருவருக்கு இவ்வளவு பாராட்டுக்களா? இருபத்தைந்து ஆண்டு காலப் பத்திரிகைத் துறை வாழ்வில் அவர் நிறைடச் சாதித்திருக்கிருர்! இதனுல் தான் பல்கலைக்கழக உபவேந்தர் முதல், பிரபல எழுத்தாளர்கள் வரை இதயபூர்வமாக அவரைப் பாராட்டுகிருர்கள்!

'தினகரன்' பிரதம ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதனுக்கென்ற சில தனித்துவங்கள் இருக்கின்றன. பத்திரிகையொன்றில் முழுநேர ஆசிரியராக இருந்துகொண்டு, யாழ். பல்கலைக்கழகத்தின் முதுகலைமாணி என்ற எம்.ஏ. பட்டத்தைப் பெற்றது அவரது தனித்துவம். முன்னரும் ஆசிரியராக இருக்கும்போதுதான் சட்டத்தரணியுமானுர்!

பத்திரிகையாளர் ஒருவர் எம். ஏ. பட்டத்தைப் பெற்றமைக்காகப் பத்திரிகையாளர் சங்கங்கள் இரண்டு யாழ்ப்பாணத்தில் தனித்தனியாகப் பாராட்டு விழாக்களை நடத்தின. இந்த இரு விழாக்களிலும் யாழ்ப்பாணத்திலுள்ள எழுத்தாளர்களும், பேராசிரியர்களும், மதபீடாதிபதிகளும், சமூகசேவையாளர்களும் பாராட்டுக்களை வழங்கினர். இவ்விதம் பாராட்டுக்களைப் பெறும் ஒரே பத்திரிகை ஆசிரியர் என்ற பெருமை இப்போது இந்நாட்டில் இவர் ஒருவருக்கு மட்டுமே.

தமிழராக இருந்தாலும், சிங்களப் பத்திரிகையாளர் நூற்றுக்கணக்கானவர்களைக் அங்கத்தவர்களாகக் கொண்ட இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைமையைத் தாங்கும் பெருமைக்குரியவராகத் திகழ்வதும் இந்தச் சிவகுருநாதனின் தனித்துவம்தான்!

## எம். எஸ்ஸி.

## பட்டம் பெற்ற

## எழுத்தாளர்

சமீபத்தில் ஐயாயிரம் ரூபா பரிசுபெற்ற எழுத்தாளரான க. நவம், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் எம். எஸ்ஸி. பட்டத்தினைப் பெற்றிருக்கிருர்! ஆக்க இலக்கியத்துறையிலும் கலைத்துறையிலும் நல்ல பரிச்சயம் உள்ளவர் இந்த நவம்.

தேசிய ரீதியில், இலக்கியத் திறனை ஊக்குவிக்கும்பொருட்டு, வர்த்தகக் கப்பற்துறை அமைச்சினுல் நடத்தப்பட்ட அகில இலங்கை இலக்கியப் போட்டியில், தமிழ்மொழியில் சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான முதலாவது பரிசு இவருக்குக் கிடைத்தது. பெல்மதுலை கல்கந்தை மகாவித்தியாலயத்தில் ஐயாயிரம் ரூபா பரிசு நவத்திற்கு வழங்கப்பட்டது.

கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் ஆசிரியராக இருக்கும் இவர் பேராதனைப் பல்கலைக்கழகச் சிறப்புப் பட்டதாரி. இதே பல்கலைக்கழகத்தில் விவசாயப் பொருளியலை ஒரு பாடமாகக் கற்றே எம். எஸ்ஸி பட்டத்தினைப் பெற்ருர்.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையேயான நாடகப் போட்டியிலும் இவர் தங்கப் பதக்கம் பரிசுபெற்றிருக்கின்ருர். சாகித்திய மண்டல சிறுகதைப் போட்டியிலும் பரிசு பெற்றிருக்கிருர்.

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகத் தன் வாழ்வை ஆரம்பித்த இவ் விளைஞர் எம். எஸ்ஸி பட்டம் பெற்றிருப்பது கல்வித் துறையில் ஒரு சாதனை. எழுத்தாளரான இவர், இன்னொரு எழுத்தாளரான தெணியானின் உடன் பிறப்பு.

## துணிவுவேண்டும்

## என்கிருர் காரை

கவிஞர் காரை செ சுந்தரம்பிள்ளை நமது நாட்டுக்குக் கிடைத்த நல்லதொரு இலக்கியச் சொத்து. தங்களைப்பற்றியே டமாரமடிப்பவர்களைத்தான் இலக்கிய உலகில் காணலாம். ஆனுல் காரை, திறமையுள்ளவர்களை மதித்துப் பாராட்டுபவர்.

சிலமணிநேரம் மனம்விட்டுப் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது.

''நமது நாட்டுக் கவிஞர்களில் உண்மையாகத் திறமைமிக்கவர் ஒருவரைக் குறிப்பிடுங்கள்'' என்றேன்.

'கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகளில் நீங்கள் சொல்லும் அழகைக் கண்டேன். ஆனுல் இப்போது......''

1967ம் ஆண்டு தமிழ் நாட்டில் நடந்த தமிழாராய்ச்சி மகாநாட்டில் கவியரங்கில் காரை பங்குபற்றினுர். கவிஞர் சுரதா தலைமை வகித்தார்.

குறிப்பிட்ட நேரத்திற்குப் பிந்தியே கவியரங்கிற்கு வந்தார். ஆட்சியிலிருந்த கலைஞர் கருணுநிதிக்கும், மற்றும் சிலருக்கும் சுரதா பிந்திவந்தது ஆத்திரத்தை விளைவித்தது.

மறைமுகமாக சுரதாவிடம்' கலைஞர் இதனைச் சுட்டிக்காட்டிவிட்டார்.

சுரதா கோபாவேஷம் கொண்டு ''கார் தந்திரோ? காக தந்திரோ சுரதா நேரத்துக்கு வந்துசேர!'' என்ற அர்த்தப்படப் பொரிந்துதள்ளிவிட்டார்.

கலைஞர் அவரிடம் மன்னிப்புக் கோரினுர்.

இந்தஅளவுக்கு உயரமில்லாத சுரதாவின் துணிச்சல் நமது கவிஞர்களுக்கு வரவேண்டும் என்கிருர் காரைக் கவிஞர்.

## பொன்னுடையை

## ஏற்க மறுத்தார்

பத்திரிகையாளர் திரு. சிவகுருநாதனுக்கு யாழ். நகரில் ஏற்பாடுசெய்யப்பட்ட விருந்துபசாரத்தில், எதிர்பாராதவிதமாக விழா நிகழ்ச்சியில் இல்லாதவாறு தன்மீது போர்த்தவந்த பொன்னுடையைப் பேராசிரியர் சிவத்தம்பி விலக்கி ஒதுக்கிய சம்பவம் ஒரு சில நாட்களுக்கு முன்னர் நடந்தது.

## 'எஸ்தாக்கி'

நாடறிந்த நாடகக் கலைஞரும், எழுத்தாளருமான 'எஸ்தாக்கி'யின் மறைவு கலை இலக்கிய நெஞ்சங்களைத் துக்கத்தில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. நாவாந்துறையில் பிறந்து. ஒரு பாடசாலையின் ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டு கலைத்துறைக்கு ஆற்றிய சேவையும், நாவாந்துறை மக்கள் இவருக்கு அளித்த உயர்ந்த இடத்தையும் கண்டு பெருமைப்பட்டுக் கொள்ளலாம். கலைத்துவ உணர்வுகளோடு வாழ்ந்த 'எஸ்தாக்கி' மறைந்தாலும் கலைஞரான அவர் என்றும் வாழ்வார்!

## தாயகம்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'தாயகம்' மாத சஞ்சிகை கலை இலக்கியத்திற்குக் குறிப்பிடக்கூடிய பங்களிப்பைச் செய்துவருகிறது. கனதியான விஷயங்களை உள்ளடக்கி வெளிவரும் இந்த ஜனவரி இதழில், 'கடந்த ஆண்டும் புதிய ஆண்டும்' என்ற ஆசிரிய தலையங்கம் ஆணித்தரமான கருத்துக்களை உறுதியாக எழுதியுள்ளது. மா. சின்னத்தம்பி, மாவலி, கேசவன், முருகையன், அழ பகீரதன், செண்பகன், சி. சிவசேகரம், ம. சண்முகலிங்கம், யோ. பெனடிக்பாலன், சாதேவன் ஆகியோர் ஆக்கங்கள் ஜனவரி இதழை அலங்கரிக்கின்றன

## சிறுகதை...

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

''உண்மைதான் எங்கடை சனங்கள் பொறுப்பில்லாதவர்கள். சுத்தம், சுகாதார எல்லாம் ருத்தல் என்னவெண்டு தான் கேட்குங்கள்?''

'கண்ட இடத்தில் துப்பிறதும் பக்கத்தில் நிக்கிறவை மீது கடுகிறமாதிரித் துப்புறது எவ்வளவு கூடாத பழக்கம்''

' சனங்களும் சனங்கள் வாழும் சுற்றுப்புறங்களும் சுத்தமாய் இருக்கவேணும் என்ருல் சிலநாடுகளில் இருக்கிற மாதிரிக் கடுமையான சட்டங்கள் கொண்டுவரவேணும்''.

இப்படி நாங்கள் கதைத்துக்கொண்டு இருக்கும்போது கந்தசாமி வந்தான்.

''என்ன விசேஷம் நீங்கள் இந்த இடத்திலை...?

''சத்தியமூர்த்தியைக் காண வந்தனுங்கள்''.

''சத்தியமூர்த்தி என்ருல்... அட இவர்......''

''ஓமோம்''

''என்ன அலுவல்? அதுசரி, எப்பிடி ஆளைத்தெரியும்?''

அலுவலைச் சுருக்கமாகவும் சின்னத்தம்பி தான் எங்களை சத்திய மூர்த்திக்கு அறிமுகப்படுத்தி வைத்ததையும் சொன்னேம்.

''இடத்தை வந்து பார்த்தவரே''

''ஓம் நேற்றுப்பார்த்தவர்''

''என்ன சொன்னுர்''

''சின்ன விசியம்; சிம்பிள் என்ருர்'',

'' சிம்பிள் என்று சொன்னவரோ''

''ஓமோம்''

''அப்ப கனக்கப்போல...''

''கனக்க என்ருல்''

''கனக்க என்ருல் றேற் உபரத்தில் போல''

'' ஓமோம், சின்னத்தம்பி பெரியதால் ஐந்து கொடுத்தால் காணும் என்று சொன்னவர்''

''அப்படியென்ருல் கெதியிலை அப்ருவல் தந்திடுவார். உங்கடை பக்கத்துச்சனங்களும் ஒழுங்கையில் குப்பை கொட்டுற சனங்கள் தானே ஆனபடியால் உங்கடை பக்டறியால வாற கழிவும் தங்களைப்பாதிக்கும் என்றும் சொல்லாதுகள்''

[யாவும் கற்பனை]

## நிலக்கடலையில்

## 'அப்ளா' நஞ்சு

நிலக்கடலையில் 'அப்ளா' என்ற ஒருவகை நஞ்சு ஏற்படுகிறது. கடலை அறுவடைக்குப் பின், காய்களை நன்கு காயவைக்காமலிருந்தால் ஆஸ்பர்ஜிலஸ் ப்ளாவஸ் என்னும் பூசணம் காய்களைத் தாக்கி 'அப்ளா' என்னும் நச்சுப் பொருளை உண்டாக்குகிறது. பருப்பை உடைத்தால் உள்ளே பச்சை நிறப் பூசணம் இருப்பது தெரியும். கடலை சாப்பிடுவதற்குக் கசப்பாக இருக்கும். சாப்பிட்டால் வாந்தி. மயக்கம், பேதி ஏற்படும். பூசணம் தாக்கிய கடலையிலிருந்து செய்யப்பட்ட பிண்ணாக்கிலும் இந்த நச்சுப் பொருள் உண்டு. இந்தப் பிண்ணாக்கை உண்ட மாடுகளையும் இந்த நஞ்சு தாக்கிச் சேதத்தை ஏற்படுத்தும்.

அறுவடைக்குப் பின் காய்களை நன்ருகக் காயவைப்பதன் மூலம் பூசணத் தாக்குதலைத் தவிர்த்து, நச்சுப்பிடியிலிருந்து விடுபடலாம்.

குறிப்புரை: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர நோயியற்துறை ஆராய்ச்சி.

ஆதாரம்:

'வளரும் வேளாண்மை'

'மிக்லைவற்'

உறவாலும் நட்பாலும் காதலாலும் துன்பத்திற்குத் துணையாக அமையும் பெண்ணைத் தேடு.

—மு. வரதராசன்த

## 'இடுகுவேலி'

## ஆசிரியர்

## பதில்

'இடுகுவேலி'

ஆசிரியர்

'செங்கை ஆழியான்'

'இடுகுவேலி'

வாசகர்களுக்கு

4- 3- 84

ஈழநாடு

வாரமலரில்

பதிலளிக்கிருர்


உங்கள் முதலீட்டிற்கு யாழ்நகரில் அதிஉயர் வட்டி வழங்கும் ஒரே நிறுவனம்.

# SHABRA UNICO FINANCE LIMITED

(இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற ஸ்தாபனம்)

### நிலையான வைப்புதாரர்கட்கு

- ★ மாதாந்த வட்டி பெறுபவர்கள் ஆயின் அவர்களது வங்கிக் க/கு ற்கு அல்லது காசோலையாக அல்லது காசுக்கட்டளையாக அன்றி நேரிலேயே பெறும் வசதியும் உண்டு.
- ★ பிணையின்றி தவணைக்கட்டண முறையில் எம்மிடம் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்.
- ★ தவணைக்கட்டணமுறையில் பொருள்பெறும் ஒருவருக்கு நீங்கள் பிணை நிற்கலாம்.

### காணி விற்பனைக்கு

| | |
|---|---|
| கட்டுடை | கைதடி தெற்கு |
| மீசாலை | இரத்தினபுரம் (கிளிநொச்சி) |
| கேரதீவு | சிறுப்பிட்டி மத்தி |
| கச்சாய் | சுன்னுகம் |
| ஒமந்தை | யாழ்ப்பாணம் (கே.கே எஸ். வீதி) |

### உழைக்கும்போதே சேமிக்கும் திட்டம்

| மாதாந்தம் | 36 மாத காலமுடிவில் (தொடர் வட்டியுடன்) |
|---|---|
| 100/- | 4,727/60 |
| 200/- | 9,455/19 |
| 300/- | 14,182/79 |
| 400/- | 18,910/38 |
| 500/- | 23,637/93 |

மாதாந்தம் ரூபா 500/-ற்கு மேற்பட்ட சேமிப்புக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பிட்ட இடங்களில் நல்ல நீர் வசதியுடன் காணிகள் விற்பனைக்கு உள்ளன. மேலதிக விபரங்கட்கு,

"SHABRA"

தரமான, பெறுமதியான நீண்டகாலம் பாவிக்கக்கூடிய பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

"SHABRA"

மேலும்:- ரி. வி. குளிர்சாதனப்பெட்டி, தையல் இயந்திரம், துவிச்சக்கரவண்டி, மோட்டார்வண்டி, கார், மினிபஸ், லொறி, மின்சார சமையல் உபகரணங்கள் வீட்டுத்தளபாடங்கள் முதலியவற்றை இலகுவான தவணைமுறையில் பெற்றுக்கொள்ளலாம்.

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி. இல: 22073

61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு—4.
தொ. பேசி. இல: 589310

# இலங்கை அரசியல்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மைச் சட்டம் கொண்டுவரப் பட்டபொழுது ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் அமைச்சர் பதவியைத் துறந்து அரசிலிருந்து வெளியேறினர்

## உறவு முறிந்தது

இலங்கை சுதந்திரம்பெற்ற பொழுது ஏற்பட்ட உறவு இரண்டுவருடங்கள்கூட நீடிக்காமல் முறிந்தது

இது முதல் முறிவு!

## 'சுந்தர்' பிரிய

## ஜி ஜி. சேர்ந்தார்

ஐம்பதுக்கைம்பது கோரிக்கையில் தமக்கு வெற்றியளிக்காமல் தம்மைச் சிலர் காட்டிக் கொடுத்துவிட்டார்களே என்று பொருமிக்கொண்டிருந்த ஜி ஜி பொன்னம்பலம் இந்நிலைமையில் அரசுடன் சேர்வதுதான் ஒரே வழி என்று தீர்மானித்து 1949ல் டி எஸ் சேனநாயகா அரசில் சேர்ந்து அமைச்சருமானார்

## தமிழரசு உதயம்

இது புதிய உறவு.

''தமிழன் என்றுசொல்லடா தலைநிமிர்ந்துநில்லடா'' என்ற தாரகமந்திரத்தை நாடெங்கிலும் பரப்பிய தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் தம்மைவிட்டு அரசுடன் சேர்ந்து கொண்டார் என்று கூறி அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர்களாகப் போட்டியிட்டு வெற்றியீட்டிய எஸ், ஜே வி. செல்வநாயகம். வன்னியசிங்கம் ஆகியோர் தமிழ்க் காங்கிரஸிலிருந்து விலகிப் புதிதாக இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி என்ற பெயரில் புதிய கட்சியொன்றை ஆரம்பித்தனர்.

இது முதல் பிரிவு!

டி எஸ். சேனநாயகா அமைச்சரவையில் உள்ளூராட்சி அமைச்சராகவிருந்த திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா தாம்தொடர்ந்தும் அமைச்சரவையிலிருந்தாலும் 'இழவன்' போனபின் தமக்கு அந்தப்பதவி கிடைக்கப் போவதில்லையென்று அறிந்து ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்தார்.

இதுவும் ஒரு முறிவு!

## கொத்தலாவலை

## ஏமாற்றம்

அவர் நினைத்ததுபோல் டி. எஸ். சேனநாயகா குதிரையிலிருந்து விழுந்து மாண்டதும் அந்தப்பதவி தமக்கேகிடைக்குமென எதிர்பார்த்திருந்த சேர். ஜோன் கொத்தலாவலைக்கு ஏமாற்றத்தைக் கொடுத்து 'பெரியவரின்' அபிலாசையை சோல்பரிவு நிறைவேற்றி டட்லி சேனநாயகாவை சுதந்திர இலங்கையின் இரண்டாவது பிரதமராக்கினர்.

இச் சமயத்தில் தான் 'பிரதமர் பதவி ஒட்டப் பந்தயம்' என்ற சர்ச்சைக்குரிய பிரசுரம் சில இடங்களில் வெளியாகி ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பெரும் சர்ச்சைச்சையை உருவாகியது

## டட்லி துறவும்

## சேர் ஜோன்

## அதிர்ஷ்டமும்

1953 ம் ஆண்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படவே எதிர்க் கட்சித் தலைவராக இருந்த திரு. எஸ் டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா உட்பட இடதுசாரிக் கட்சிகளும் சேர்ந்து 'அரிசி ஹர்த்தால்' நடத்தின கண்ணீர்ப் புகைப்பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் என்பன நிகழ்ந்தன. இவற்றைக் கண்டு மனம் குமுறிய டட்லி சேனநாயகா தமது பதவியைத் துறந்தார்.

இது ஒரு துறவு!

தமக்குக் கிடைக்க வேண்டிய பதவி இல்லாமல் போய்விட்டதே என்று எண்ணியிருந்த சேர். ஜோன். கொத்தலாவலைக்கு டட்லியின் துறவு வழிவகுத்தது. சேர் ஜோன் பிரதமரானார்!

சேர் ஜோனின் அமைச்சரவையில் அங்கம் வகித்த சேர் லலிதா ராஜபக்ஷவையும் ஜி. ஜி, பொன்னம்பலத்தையும் என்ன காரணத்துக்காகவோ ராஜினாமாச் செய்யும்படி பிரதமர் சேர். ஜோன் கேட்டார்.

## ஜி. ஜி. க்கும்

## ராஜபக்ஷவுக்கும்

## கல்த்தா

சேர். லலிதா ராஜபக்ஷவும் ஜி ஜி யும் தமது அமைச்சர் பதவிகளை ராஜினாமாச் செய்தனர்.

இது புதிய பிரிவு!

ஜி. ஜி.யுடன் அமைச்சரவையில் சேர்ந்து கொண்ட வி. குமாரசாமியும் க. கனரத்தினமும் உதவி அமைச்சர்களாக இருந்தனர். அவர்கள் தமது பதவிகளை ராஜினாமாச்செய்யவில்லை.

(அடுத்தவாரம் தொடரும்)

# மலர்களின் மருத்துவ பயன்

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படும் ஒருகைப்பிடியளவு முருங்கைப்பூக்களை பாலில் காய்சி தினமும் பருகிவந்தால் நரம்புத்தளர்ச்சி நீங்கும்

குங்குமப்பூ: இந்தப்பூவினை சாப்பிட்டுவந்தால் குழந்தை சிவப்பாகப் பிறக்கு மென்பது தவறான கருத்து. இது கருவிலைத் தூய்மையாக்குவதுடன் தலைவலியையும் போக்கும்.

தாளம்பூ: இப்பூவினை நெருப்புத்தணலில் பிடித்து பின் சாற்றைப் பிழிந்தெடுத்து அச்சாற்றினை காதில் விட்டால் காதுவலி, காதுக்கட்டி. காது இரைச்சல் என்பன தீரும்.

இலுப்பைப்பூ: பித்தம் காரணமாக உண்டாகும் உடல் எரிவு போன்ற கோளாறுகளை போக்கும்.

நந்தியாவட்டப்பூ: கண்ணில் தோன்றும் எக்குறைபாட்டினையும் நீக்கக்கூடியது சாதாரணமான கண்கோளாறுகளுக்கு இதன் சாற்றினைப் பிழிந்தெடுத்து சில துளிகள் கண்களில் விட்டால் குணமாகும்

அல்லிப்பூ: உடல் சூட்டைத் தணிக்க இம்மலர் உதவும் கொதிநீரில் இதன் இதழ்களை இட்டு அதனை வடிகட்டி அத்திரவத்தினைப்பருகினால் நீரிழிவு நோய் குணமாகும். உடற்சூட்டினால் கண்களில் உண்டாகும் கட்டிட்டி போன்ற நோய்களுக்கு இப்பூவினை அரைத்து வைத்துக் கட்ட நோய்தீரும். இப்பூவில் இருந்து சர்பத்தும் தயாரிக்கலாம்.

வெங்காயப்பூ: உறக்கமின்மையைப் போக்கும் காச நோயையும் நீக்கும் இதனை நசுக்கி முகர்ந்தால் தலைவலி குறையும்

வில்வம் பூ: துளசி இலையுடன் வில்வம் பூவையும் சேர்த்துப் பிழிந்து எடுத்த சாற்றுடன் தேனும் கலந்து பருகினால் மலேரியாக் காய்ச்சல் தீரும்.

ரோஜா: இம்மலர் மலச்சிக்கலை நீக்குவதோடு சருமநோய் கட்கும் பயன்படும் ரோஜாப்பூ சர்பத் குருதியை நல்லநிலையில் வைத்திருக்க உதவும்.

பூவரசம்பூ: இம்மலரைக் காய்ச்சி வடித்து பருகினால் விஷக்கடியிலுண்டான ஊறல், தடிப்பு என்பன நீங்கும்

நித்திய கல்யாணி: நீரிழிவு, மற்றும் சிறுநீரக நோய்களுக்கு இதன் கஷாயம் சிறந்தது.

வாழைப்பூ: இதனை உணவிற் சேர்த்துக்கொண்டால் குடற்புண் மற்றும் வயிற்றுக்கோளாறுகள் நீங்கும்

மாம்பூ: நீரிழிவு நோய்க்குச் சிறந்த மருந்து இதனைக் காயவைத்து அதோடு நாவற்பழவிதை, மாந்தளிர் இவற்றையும் சேர்த்து காயவைத்து இடித்து அத்தூளினைக் காலையில் சிறிதளவு தினமும் வெந்நீரிலிட்டு பருகிவரவேண்டும். பல்வலிக்கும் மாந்தளிர். மாம்பூ அவித்த நீரால் கொப்பளிப்பின் பல்வலி தீரும்.

மல்லிகை: இதனை அரைத்துப் பூசிவந்தால் சொறி, சிரங்கு என்பன தீரும்.

வேப்பம்பூ: நாட்சென்ற வேப்பம்பூவை ரசம் வைத்து உண்ண சன்னி வாந்தி, ஏப்பம் என்பன நீங்கும் இது சிறந்த கிருமிநாசினியுமாகும்.

இவ்வாறு ஒவ்வொரு பூக்களும் ஏதோ ஒரு வகையில் நமக்கு உதவுகின்றன. இவற்றை நாம் நோய்களிற் பயன்படுத்தினால் வீண்செலவுகளைத் தர்க்கலாம்.

தொகுப்பு;
வைத்தியநாதர்
சிவநேசன்

ஹரன் (யாழ். நகர்)
இரண்டாவது
குதூகல வாரம்!
திருலோகசந்தரின்
சிவாஜி, ஸ்ரீப்பிரியா
வசந்தத்தில் ஓர்நாள்
(ஈஸ்மன் கலர்)

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2-30 6-00
சிவாஜி - விஜயா
சத்திய சுந்தரம்

மனோகரா (யாழ். நகர்)
10-30, 2-30, 6-00
முத்துராமன்-காஞ்சனா
பாலையா-நாகேஷ்
காதலிக்க நேரமில்லை
(புத்தம் புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி-சுஜாதா
அந்தமான் காதலி
2 3 84 முதல்
BRUCE STRIKES BACK

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி— சரோஜாதேவி
பணமா பாசமா
27 முதல்
பால்குடம்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
9-30
கமலஹாசன்-மாதவி
சுவட்ணா-தியாகராஜன்
பாரதிராஜாவின்
டிக் டிக் டிக்
(ஈஸ்மன்கலர்)

கொட்டகை நிறைந்த
காட்சிகள்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00
கமல்— ஸ்ரீதேவி— தீபா
மீண்டும்கோகிலா
(ஈஸ்மன் கலர்)

லிடோ (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15, 9-30.
TWINS OF EVIL
விரைவில்
ஒருதலை ராகம்

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30, 6-00
9 30
எம். ஜி. ஆர்.-லதா-
வீரப்பா-நம்பியார்
பல்லாண்டு வாழ்க
ஈஸ்மன் கலர்/புதிய பிரதி

இன்னும் சில தினங்கள்
மட்டும்
றீகல் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சேகர்...
திருமதி பாக்யராஜ்...
பயணங்கள்
முடிவதில்லை
- வண்ணம் -
From 1-3-84
SHAMMI KAPOOR
RAJSHREE...... IN
JANWAR
- Color -
Music - Shankar
Jaikishan

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-15, 4-45
7-00, 9-30
Roger Moore in
For Your
Eyes Only
Scope—Colour—Adults
LAST DAY 29-2-84
29-2-84 மகா சிவராத்திரி
தினம்
"உங்கள் கண்களுக்கு
மாத்திரம்"
நள்ளிரவுக் காட்சிகளும்
உண்டு
கடைசித் தினம் 29-2-84

Home Finance Limited
1. 1984 MODEL ISUZU MINI BUSES
AVAILABLE FOR SALE
2. FINANCE ARRANGEMENTS POSSIBLE
Apply for Particulars:
To:
HOME FINANCE LTD.,
82, Kannathiddy Road,
Jaffna

உடன் விற்பனைக்கு
நன்கு திருத்தப்பட்ட நீர்ப்பாசன வசதியுடைய இரண்டு நெல்வயல்கள்
சரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் பரந்தன் ஐந்தாம் வாய்க்காலில்
புகையிரதப்பாதைக்கு அண்மையில் 20 ஏக்கரும் 15 ஏக்கரும் விஸ்தீரணமுள்ள
இரண்டு நெல் வயல்கள் உடன் விற்பனைக்குள்ளன.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:
விளம்பரதாரர்
இல: 7, ஹேவா அவெனியூ, கொழும்பு - 7.
1016
தொலைபேசி: 92828 — கொழும்பு

யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி
நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ் நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்
குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்.
பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, அமெரிக்கா
செல்வதற்கான சகல ஏற்பாடுகள் மற்றும் பயணச்சீட்டுக்களை
மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.
CROSS TRAVEL
SERVICES (PTE) LTD,
STAGE II, MODEL MARKET,
No. 5 1st FLOOR.
BUS STAND CENTRE ROAD,
JAFFNA
Phone: 22065, 22040

சர்வகட்சி மகாநாடு முடியும்வரை—

# வடக்கு, கிழக்கில் இப்போதைக்கு தேர்தல் இல்லை!

(இ. கந்தசாமி)

சர்வகட்சி மகாநாடு முடிவுறும்வரை வடக்கு-கிழக்கில் உப தேர்தல்களை நடாத்துவதில்லை என அரசு தீர்மானித்துள்ளது.

பாதுகாப்பு நிலைமையைப் பொறுத்தவரையிலும் கூட வடக்கு கிழக்கு மாகாணங்களில் உபதேர்தல்களை நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லை.

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்பட்டுள்ள வேளையிலும் மற்றும் இயற்கை அழிவுகளின் போதும் உப தேர்தலுக்கான நியமனத் திகதியை அல்லது உபதேர்தலை ஓர் ஆண்டுக்கு ஒத்தி வைக்க ஜனாதிபதிக்கு இச்சட்டமூலம் அனுமதி அளிக்கிறது.

இதற்காக நாம் தேர்தலைக் கண்டு பயப்படுகிறோம் என்று அர்த்தமல்ல. 19 உபதேர்தல்களை நடத்தினோம், மாவட்ட சபை, உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தினோம்.

மத்துகம எம். பி. இங்கு பதவி ஏற்றபோது சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டுமாறு வேண்டியதாகவும் அதனை நாம் சட்டை செய்யாமல் இன்று சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டியுள்ளதாகவும் அவர் குறை கூறியுள்ளார். சர்வகட்சி மகாநாட்டில் அன்று நம்பிக்கை வைக்க முடியாத நிலை. இப்போது என்ன நடக்கிறது என உங்களுக்குத் தெரியும். ஒரு சிலர் மகாநாட்டுக்கு வருகின்றனர், மற்றும் சிலர் வரவில்லை. சிலர் வந்துவிட்டு செல்கின்றனர். சர்வகட்சிகளையும் அழைத்து மகாநாடு ஒன்றை நடாத்துவதென்றால் என்ன சமாளிப்பு வேலையா?

கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம பேசுகையில் கூறியதாவது:

இந்த நாட்டில் ஜனநாயகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு சர்வாதிகாரத்துக்கு அடிகோலும் அரசின் நடவடிக்கைகளுக்கு புதிய திருத்த சட்டமூலம் மற்றுமொருபடிக் கல்லாகும்.

இந்தச் சட்டமூலம் உப தேர்தல்களை ஓராண்டுக்கு அல்ல நிரந்தரமாக ஒத்தி வைக்க வழிசெய்கிறது.

## ஆத்மஜோதி அருமைநாயகம் மறைவு

(சாவகச்சேரி)

கோயம்புத்தூரில் நடைபெறும் அகில உலக இந்து மகளிர் மகாநாட்டில் கலந்து கொள்ளவென கடந்த வாரம் பயணமான ஆத்மஜோதி நிலையத்தைச் சேர்ந்த திரு. நா. அருமைநாயகம் கோயம்புத்தூரில் மாரடைப்பினால் காலமானார்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் இந்துமதப் பிரதிநிதியாக மகாநாட்டுக்குச் சென்ற இவர் திரு. நா. முத்தையாவின் சகோதரராவார்.

## “கற்பிக்கும் முறையில் மாற்றம் அவசியம்”

### கல்விப்பணிப்பாளர் கூறுகிறார்

(மானிப்பாய்)

“மாறிவரும் உலக சூழ்நிலைக்கேற்றக் கற்கும் முறையிலும் காலத்துக்கேற்றவாறு நல்மாற்றங்கள் தேவைப்படுகிறது. இதனை இத்துறை சார்ந்த அனைவரும் உணர்ந்து செயல்பட்டால் நிச்சயம் கல்வித் துறைக்கும் எதிர்கால சந்ததியினரான மாணவர்களுக்கும் நல்லபலன் அளிப்பதாக இருக்கும். இந்த நல்ல கருத்தினை நினைவில் வைத்து நாம் எல்லோரும் செயல்படவேண்டும்”

இவ்வாறு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிவியாம்பிள்ளை வட இலங்கைச் சங்கீத சபையின் கருத்தரங்கிற்குத் தலைமைதாங்கி உரை நிகழ்த்துகையில் எடுத்துக்கூறினார்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்றுக் காலை ஆரம்பமாகி நடைபெற்ற சங்கீத நடன ஆசிரியர்களுக்கும் பரீட்சகர்களுக்குமான கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

வட இலங்கைச் சங்கீத சபையினால் நடத்தப்படும் பரீட்சைகள் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டவை. இந்த வருடமும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதவிருக்கின்றனர்.

இப்பரீட்சை நல்ல தரத்தினை அடையவேண்டுமென்ற ஆவலினாலேயே இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

இசை, நடனம், நாடகத்தின் தரத்தினை உயர்த்த நாம் ஆவனசெய்ய வேண்டும் என்றார்.

### தரம் உயர்ந்துள்ளது

“இக்கருத்தரங்கினை ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்காகக் கருதுகின்றோம் எனக்குறிப்பிட்ட அவர் அழகியற்கலை ஆசிரியர்களின் மதிப்பு இன்று உயர்ந்திருக்கின்றதென்பது முற்றிலும் உண்மை என்றார்.

முன்பு மற்ற ஆசிரியர்கள் இவர்களுக்கு உரிய மதிப்புக் கொடுக்கவில்லை எனவும் அவர் தமது உரையின்போது சுட்டிக்காட்டினார்.

வட இலங்கைச் சங்கீத சபையின் இக்கருத்தரங்கில் பிரதம கல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகமும் நடன விரிவுரையாளர் செல்வி க. சங்கரப்பிள்ளையும் இசைவிரிவுரையாளர் திரு. பொன். தெய்வேந்திரமும், நாடக அரங்கக் கல்லூரி அதிபர் திரு. எம். சண்முகலிங்கமும், பண்ணிசை விரிவுரையாளர் திரு. என். வி. என் நவரத்தினமும் கருத்துரைகள் வழங்கினர்.

இக்கருத்தரங்கு இன்றும் தொடர்ந்து நடைபெறும்.

## இராஜ அரியரத்தினத்துக்கு யாழ். நகரில் பாராட்டு

(மானிப்பாய்)

இலங்கையின் மூத்த தமிழ்ப் பத்திரிகையாளரான திரு. இராஜா அரியரத்தினம் யாழ்ப்பாணத்தில் கௌரவிக்கப்படவிருக்கின்றார்.

ஈழகேசரி, ஈழநாடு, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றிய இவருக்கு கலை, இலக்கிய பத்திரிகை நண்பர்கள் பாராட்டு விழாவினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துவருகின்றனர்.

நாற்பது ஆண்டு காலம் பத்திரிகை ஆசிரியராக இருந்து கடமையாற்றிய பெருமை திரு. இராஜ அரியரத்தினத்துக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

## லெபனானில் யுத்த நிறுத்தம்

பெய்ரூட், பெப். 25

லெபனானில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கடும் யுத்தத்தின் பின்னர் இன்று யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ளது.

சவூதி அரேபியா முன்வைத்திருக்கும் சமாதானத் திட்டத்தினை சிரியா ஏற்றுக்கொண்டிருப்பதினாலேயே இந்த யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ளது.

ஆயினும் பெய்ரூட்டில் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும், லெபனானிய இராணுவத்தினருக்குமிடையிலான யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாக பெய்ரூட் செய்திகள் தெரிவிக்கின்றன. (சூ)

## வேலை இழந்தவர்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

யாழ். மாவட்ட பாதிக்கப்பட்ட வர்த்தக தொழிலாளர் நலன்புரிச்சங்கத் தலைவர் திரு. மா. க. வைத்தியநாதன் தலைமையில் அதன் செயலாளர் திரு. து. கணேசலிங்கம் உட்பட சென்ற தூதுக்குழு, அத்தியாசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோனைச் சந்தித்து பாதிக்கப்பட்ட தனியார்துறை ஊழியர்களுக்கு நிவாரணப் பணம் வடபகுதியிலேயே வைத்து வழங்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்தது.

அதன் பிரகாரம், நடவடிக்கை எடுப்பதாக திரு. பிரட்மன் தம்மைச் சந்தித்த தூதுக்குழுவிடம் உறுதி அளித்திருந்தார்.

பாதிக்கப்பட்ட தனியார் துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் திரும்பவும் அந்த ஸ்தாபனத்துக்குச் செல்லாதிருந்தால் 2,300 ரூபாவும், அங்கு திரும்பவும் சென்றால் 1,500 ரூபாவும் நிவாரணப் பணமாக வழங்கப்படும் என்றும், இதற்கு பாதிக்கப்பட்டவர் தம்மை நிரூபிக்கும் முகமாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட அத்தாட்சிப் பத்திரமும் அப்பகுதி கிராமசேவையாளரின் அத்தாட்சிப் பத்திரமும் சமர்ப்பிக்கப்படும் பட்சத்திலேயே நிவாரணப்பணம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நிவாரணப்பணம் பாதிக்கப்பட்ட பலருக்கு வழங்கப்படுவதில் மேற் குறிப்பிடப்பட்ட நிபந்தனை மேலும் பாதிப்படையச் செய்வதால் சுமுகமான முறையில் அதனை வழங்குவதற்கு நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. வைத்தியநாதன் மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார். (மா)

## காதலுக்கு பெற்றோர் மறுப்பு! யுவதி இரட்சணியசேனை!

(மாவிட்டபுரம்)

காதல் விவகாரம் தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட 17 வயது யுவதியை கைதடி இரட்சணிய சேனையில் அனுமதிக்குமாறு மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டார். அந்த யுவதியின் காதலன் என தெரிவிக்கப்பட்ட வாலிபன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

தொல்புரத்தைச் சேர்ந்த யுவதி ஒருவருக்கும் சங்கானையைச் சேர்ந்த வாலிபர் ஒருவருக்குமிடையில் ஏற்பட்ட காதல் விவகாரம் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு வந்ததையடுத்து திருமண வயதையடைந்து விட்ட மேற்படி யுவதியையும் வாலிபரையும் தம்பதிகளாக இணைத்து வைக்க பொலிசார் முயற்சி எடுத்தனர்.

ஆனால் யுவதியின் பெற்றோர் அதற்கு மறுப்புத் தெரிவித்ததால் இவ்வாலிபரையும், யுவதியையும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

பதில் நீதிபதி ஜி. வி. பாலசிங்கம் யுவதியைக் கைதடி இரட்சணியசேனையில் அனுமதிக்கும்படி உத்தரவிட்டு பிணையில் செல்ல வாலிபரை அனுமதித்தார்.

சங்கானையைச் சேர்ந்த மேற்படி வாலிபர் தொல்புரத்திலுள்ள மீன்பதனிடும் தொழிலுக்குச் சென்று வந்தபோதே மேற்படி தொல்புரத்தைச் சேர்ந்த யுவதியுடன் காதல் தொடர்பு ஏற்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

## இளம்பெண்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

35 இராணுவவீரர்கள் முற்றுகையிட்டு தேடுதல்வேட்டையில் இறங்கியிருந்ததும் அதே நேரம் குருநகர் முகாம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சத்தத்தின் எதிரொலியைத் தொடர்ந்து இராணுவவீரர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபொழுது இராணுவவீரர் ஒருவர் தவறுதலாகக் குண்டுபட்டு ஸ்தலத்திலேயே பலியானதும் தெரிந்ததே.

அந்த நேரத்திலேயே குறிப்பிட்ட வீட்டுக்கு அருகாமையிலுள்ள வீட்டிலிருந்து வெளியில் வந்த இளம்பெண் யசோதா டேவிட் (19 வயது) வயிற்றில் துப்பாக்கிச்சூடுபட்டு ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானதும், அவரது தாயார் கைம்பெண் ரோசலின் டேவிட் (45 வயது), சுரேஷ் டேவிட் (13 வயது) துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

மரணமான இளம்பெண் யசோதா யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த போதிலும் மரணவிசாரணை எதுவும் நடைபெறவில்லை.

துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான இறந்தவரது தாயும் சகோதரரும் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (மா)

## மரக்கறி ஏற்றுமதி பாதிப்பு

(கொழும்பு)

வடபகுதியில் இம்முறை பெய்த பெருமழை காரணமாக இங்கிருந்து வெளிமாவட்டங்களுக்கு குறிப்பாக கொழும்புக்கு ஏற்றுமதியாகும் சில மரக்கறி வகைகளின் ஏற்றுமதி மிகவும் குறைந்துள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

தக்காளி, பீட்றூட், உருளைக்கிழங்கு ஆகிய மரக்கறி வகைகளின் ஏற்றுமதி இதனால்பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும், மோட்டார் சைக்கிள் ஒன்றினையும் அவ்விடத்தில் போட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சூ)

## தேசிய ஒருமைப்பாட்டு முகாமில் 3500 பேர்!

(பொலநறுவை)

“இன மத பேதமின்றி நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இம்முகாமில் கலந்து கொண்டது தேசிய ஒருமைப்பாட்டின் தன்மையை எடுத்துக் காட்டுகிறது”

இவ்வாறு இளைஞர் வேலை வாய்ப்புகள் பிரதி அமைச்சர் திரு. காமினி அத்துக்கோறள பொலநறுவை தேசிய இளைஞர் ஒருமைப்பாட்டு முகாமில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

சுமார் 34 ஏக்கரில் பொலநறுவையில் தேசிய இளைஞர் ஒருமைப்பாட்டு முகாம்கள் அமைக்கப்பட்டன.

இந்த ஒருமைப்பாட்டு முகாமில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் 3500 பேர் கலந்துகொண்டனர்.

பொலநறுவை மாவட்ட அமைச்சர் போல்பெரேரா, திருமலை மாவட்ட அமைச்சர் தெல்சன் ஆகியோரும் இந்த ஒருமைப்பாட்டு முகாமில் கலந்துகொண்டனர் (சூ. இ)

இப்பத்திரிகை “ஈழநாடு” ... 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26-ந் திகதி ... Registered as a News Paper at the General Post Office ... 100286/81. Eelanadu. P. O. Box 49 Telephone, 22389 24126.